REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

www.thinakaran.lk

/ Thinakaran.lk / ThinakaranLK

2022 ஓகஸ்ட் 10 புதன்கிழமை

# தினகரன்

THINAKARAN තිනකරන්

1932 - 2022

வரு. 90 இல. 187 | Wednesday 10, August, 2022 | 16 பக்கங்கள் | 40/-

மன்னார், திருகோணமலை உள்ளிட்ட

## ஏழு நகர சபைகள் மாநகர சபைகளாகின்றன

அமைச்சரவை அங்கீகாரமளிப்பு

**ஷம்ஸ் பாஹிம்**

மன்னார், திருகோணமலை உள்ளிட்ட 07 நகர சபைகளை மாநகர சபைகளாக மாற்றுவதற்கும் 03 பிரதேச சபைகளை நகர சபைகளாக மாற்றவும் அமைச்சரவை அனுமதியளித்துள்ளது.

06

மலையக பெருந்தோட்டங்களில் தொழில்புரியும் தோட்டத் தொழிலாளர்களுக்கு

## நாட் சம்பளமாக ரூ.1000 வழங்குமாறு உயர்நீதிமன்றம் நேற்று அதிரடி தீர்ப்பு

முதலாளிமார் சம்மேளனம் தாக்கல் செய்திருந்த ரிட் மனுவும் தள்ளுபடி



பெருந்தோட்டங்களில் தொழில்புரியும் தொழிலாளர்களுக்கு நாளொன்றுக்கான சம்பளமாக 1,000 ரூபாயை வழங்குமாறு உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. அத்துடன் முதலாளி மார் சம்மேளத்தினால் தாக்கல் செய்யப்பட்டிருந்த ரிட் மனுவை தள்ளுபடி செய்துள்ளது.

1000 ரூபாய் சம்பளம் வழங்கும் அரசாங்கத்

06

## செங்கோலை வடிவமைத்த சிற்பக் கலைஞர் மறைவு

### கலாநிதி W.A. ஆரியசேன 92 வயதில் காலமானார்



ஏழு தசாப்த காலத்துக்கும் அதிக காலம் தூரிகையால் கலை வளர்த்தவரும் செங்கோலை வடிவமைத்தவருமான சிற்பக்கலைஞர் கலாசூரி கலாநிதி விக்கிரமாரச்சிகே ஆரியசேன தனது 92 ஆவது வயதில் காலமானார்.

அரச கலை நிறுவனங்களில் சித்திரம் மற்றும் சிற்பத் துறையில் கற்றதோடு உலக பிரசித்தி பெற்ற சித்திரக்கலை ஆசிரியர்களிடமும் பயின்று

06

## சுமார் ஒன்பது வருடங்களின் பின் மின் கட்டணம் 75% அதிகரிப்பு!

பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு அனுமதி



### நாளை முதல் அதிகரிக்கிறது

மின்சாரக் கட்டணமானது 2013 ஆம் ஆண்டிற்குப் பிறகு முதன்முறையாக ஒட்டுமொத்தமாக 75% அதிகரிக்க பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளது. அதன்படி இன்று (10) முதல் அமுலுக்கு வரும் வகையில் 75 சதவீத மின்சார கட்டணத்தை அதிகரிக்க மின்சார சபைக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

பல தடவைகள் கிடைக்கப்பெற்ற கோரிக்கைகளை பரிசீலித்து இந்தத் தீர்மானம் எட்டப்பட்டதாக பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

06

வன்முறையாளர்களை தடுத்து உட்பிரவேசிக்க விடாது

# பாராளுமன்றை பாதுகாத்த படைவீரர்களுக்கு பாராட்டு

இராணுவ தலைமையகத்துக்கு விஜயம் செய்த ஜனாதிபதி நன்றி தெரிவித்து கௌரவிப்பு

இப்போது பாராளுமன்றத்திலுள்ள 225 உறுப்பினர்களும் தங்கள் கடமையை நிறைவேற்ற வேண்டும்



நிறைவேற்றுத்துறையை கையகப்படுத்தி, சட்டத்துறையை முடக்கிய வன்முறையாளர்களை ஒடுக்கி ஜனநாயகத்தைப் பாதுகாத்த இராணுவத்தினருக்கு தேசத்தின் கௌரவம் உரித்தாகுமென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

பெலவத்த, அக்குரேகொடவில் அமைந்துள்ள இராணுவத் தலைமையகத்திற்கு நேற்று (09) முற்பகல் விசேட உத்தியோக பூர்வ விஜயத்தை மேற்கொண்ட ஜனாதிபதி, இராணுவத்தினரை சந்தித்து உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அன்று வன்முறையாளர்கள் பாராளுமன்றத்திற்குள் பிரவேசித்து சட்டத்துறையை முடக்கியிருந்தால் நாடு ஆட்சியை இழந்திருக்கும் எனவும் அவ்வாறு நடந்திருந்தால் நாட்டின் நிலைமை

06

## சமையல் எரிவாயு இனி விலைச்சூத்திர முறையில்



ஒவ்வொரு மாதமும் 05 ஆம் திகதி விலைத்திருத்தம்

**ஷம்ஸ் பாஹிம்**

சமையல் எரிவாயு விநியோகத்தை தொடர்ச்சியாக வழங்குவதை உறுதிப்படுத்தும் நோக்கில் செலவு வரம்பின் அடிப்படையில் தாமதமின்றி நடைமுறைப்படுத்துவதற்கும், விலைச் சூத்திரத்தின் அடிப்படையில் ஒவ்வொரு மாதமும் 05 ஆம் திகதி சமையல் எரிவாயு விலையைத் திருத்தம் செய்வதற்கும் அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர்

மக்களுக்கு அதிகளவு நிவாரணங்களை பெற்றுக்கொடுக்கும் நோக்குடனேயே அமைச்சரவை அனுமதி வழங்கியதாக அமைச்சர் பந்துல தெரிவிப்பு

06

## பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்காக இ.தொ.கா எல்லாவழிகளிலும் போராடும்

ரூ.1,000 சம்பள விவகாரம் சட்டரீதியாகவும் வெற்றி



மலையக மக்களுக்காகவும், பெருந்தோட்டத் தொழிலாளர் களுக்காகவும் அரசியல், தொழிற்சங்கம் மற்றும் சட்ட ரீதியாக காங்கிரஸ் தொடர்ந்தும் போராடுமென இ.தொ.கா பொதுச்செயலாளர், பாராளுமன்ற உறுப்பினர் ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

பெருந்தோட்டத்துறை தொழிலாளர்களுக்கு நாட் சம்பளமாக 1,000 ரூபா வழங்க வேண்டுமென்ற சம்பள நிர்ணய சபையின் தீர்மானத்துக்கு எதிராக, முதலாளிமார் சம்மேளனத்தால் தாக்கல் செய்யப்பட்ட மனுவை மேல்முறையீட்டு நீதிமன்றம் நேற்று (09) தள்ளுபடி செய்தது.

06

இந்திய அழுத்தம் குறித்து எதுவும் தெரியாது;

## சீனக் கப்பல் தொடர்பில் இராஜதந்திர நடவடிக்கை

அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவிப்பு

**ஷம்ஸ் பாஹிம்**



சீனக் கப்பல் தொடர்பில் இராஜதந்திர ரீதியில் தேவையான நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் இந்திய அழுத்தம் தொடர்பில் தனக்கு எதுவும் தெரியாதெனவும் அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்தன நேற்று தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர், சர்வதேச ஒழுங்குவிதிகளுக்கு அமைவாக

06

வரவு செலவுத்திட்டம்

## குறைநிரப்பு பிரேரணை பிரதமரினால் சமர்ப்பிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**

நாட்டின் எதிர்வரும் 04 மாதங்களுக்கான அரச செலவினத்துக்காக 3,27,587 கோடியே 65 இலட்சத்து 58,000 ரூபாவுக்கான குறை நிரப்பு பிரேரணை அரசாங்கத்தினால் நேற்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

பாதுகாப்பு அமைச்சுக்கும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சுக்குமென அதன் மூலம் 48,913 கோடியே 38 இலட்சத்து 91,000 ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்றம் நேற்று சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவின் தலைமையில் கூடியது.

வழமையான நடவடிக்கைகளுக்குப் பின்னர்

06

மேல் மாகாணத்தில் அதிதீவிர பரவல்:

## இந்த வருடத்தில் மட்டும் 48,777 டெங்கு நோயாளர்கள்

இனங்காணப்பட்டுள்ளதாக அமைச்சு தெரிவிப்பு



வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 48,777 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக தேசிய டெங்கு நோய் தடுப்பு பிரிவு தெரிவித்துள்ளது.

மேல் மாகாணத்திலேயே அதிகளவான டெங்கு நோயாளர்கள் இணங்காணப்பட்டுள்ளதாக அதன் பணிப்பாளர் விசேட வைத்தியர் சுதத் சமரவீர தெரிவித்துள்ளார்.

இதுதவிர, கண்டி, கேகாலை, இரத்தினபுரி, காலி ஆகிய மாவட்டங்களிலும் அதிகளவான நோயாளர்கள் கண்டறியப்பட்டுள்ளனர்.

06

கையூட்டல் தொடர்பில் குற்றச்சாட்டு:

## ஜோன்ஸ்டனுக்கு எதிராக குற்றப்பத்திரிகை தாக்கல்!



முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ உள்ளிட்ட மூவருக்கு எதிராக கொழும்பு மேல் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. கையூட்டல் தொடர்பான குற்றச்சாட்டுகள் தொடர்பிலேயே இந்த குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்தநிலையில் அந்த மூவருக்கும் பிணை வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் வழக்கு விசாரணை நிறைவுபெறும் வரையில் மூவருக்கும் வெளிநாடு செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளது.

எந்தப்பரீட்சையையும் ஒத்திப்போடும் நோக்கம் இல்லை

## அறிவிக்கப்பட்ட தினத்தில் அனைத்து பரீட்சைகளும் திட்டமிட்டபடி நடக்கும்

விரைவில் 05 தினங்களும் பாடசாலை நடத்த நடவடிக்கை

**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**



பரீட்சைகளை ஒத்திப்போடுவது அரசாங்கத்தின் நோக்கமல்ல. அறிவிக்கப்பட்ட காலத்தில் பரீட்சைகள் திட்டமிட்டபடி நடத்தப்படுமென கல்வியமைச்சர் சுசில் பிரேமஜயந்த பாராளுமன்றத்தில் தெரிவித்தார். பாடசாலை கல்வி நடவடிக்கைகளை வழமை போன்று மேற்கொள்வதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவித்த அமைச்சர், இந்த மாதத்துக்குள் 05 நாட்களும் பாடசாலைகளை நடத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுமென்றும்

06

ஜனாதிபதி மற்றும் அலரி மாளிகைகளுக்குள்

## அத்துமீறி நுழைந்த மேலும் இருவர் கைது

பொலிஸ் ஊடகப்பிரிவு அறிவிப்பு



அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களின் போது ஜனாதிபதி மாளிகை மற்றும் அலரிமாளிகைக்குள் அத்துமீறி நுழைந்தமை மற்றும் அரச சொத்துக்களுக்கு சேதம் விளைத்தமை தொடர்பில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

சந்தேக நபர்கள் திங்கட்கிழமை (08 ) கைது செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.ஜனாதிபதி மாளிகைக்கு அத்துமீறி நுழைந்தமை மற்றும் பொலிஸ் அதிகாரிகளின் கடமைகளுக்கு இடையூறு விளைத்த குற்றச்சாட்டுடன் தொடர்புடைய

06

## அமைச்சுப் பதவி பருப்பு எம்மிடம் வேகாது

ஊடக செய்திகளுக்கு மனோ MP பதில்



தமிழ் முற்போக்கு கூட்டணியானது அரசுடன் இணையவோ அமைச்சு பதவிகள் பெறவோ தீர்மானம் எதனையும் எடுக்கவில்லை என கூட்டணியின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் மனோகணேசன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் ,

உண்மையில், "நாட்டை கரை சேர்க்க தேசிய சர்வ கட்சி வேலைத்திட்டம்" என்ற தலைப்பில் ஜனாதிபதி விடுத்த அழைப்புக்கான எமது பதில்

06

## பெண்களின் வேலை நேரத்தில் மாற்றம்

அமைச்சரவையில் புதிய தீர்மானம்

பெண்கள் மாலை 6 மணிக்கு மேல் வேலை செய்யும் கடை மற்றும் அலுவலக பணியாளர்கள் சட்டத்தில் திருத்தம் செய்ய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

நேற்று நடைபெற்ற அமைச்சரவை செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்ட அமைச்சர் பந்துல குணவர்தன, இலத்திரனியல், கணனி மற்றும் தகவல் தொழிநுட்ப துறையுடன் தொடர்புடைய நிறுவனங்கள் விடுத்த கோரிக்கைக்கு அமைய இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக

06

கொழும்பில் நேற்று கோர நிகழ்வு

## பெற்றோல் வரிசையில் நடந்த விபரீதம்!

### மயிரிழையில் உயிர் தப்பிய சாரதி



எரிபொருளை பெற்றுக்கொள்வதற்காக வரிசையில் நின்ற காரின் சாரதி மயிரிழையில் உயிர்தப்பிய சம்பவமொன்று கொழும்பில் நேற்று பதிவாகியுள்ளது.

கொழும்பு 7 பகுதியில் உள்ள பெற்றோல் நிரப்பு நிலையத்தில் எரிபொருளை பெற்றுக் கொள்வதற்காக காரொன்றில் சாரதியொருவர் காத்திருந்துள்ளார்.

06

## தேநீர், உணவுப் பொதி விலைகள் குறைந்தன

சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் முடிவு



சமையல் எரிவாயுவின் விலை குறைப்பை தொடர்ந்து உணவு பொதியொன்றின் விலையை 10 வீதத்தினாலும், தேநீர் கோப்பை ஒன்றின் விலையை 30 ரூபாவாக குறைக்க அகில இலங்கை சிற்றுண்டிச்சாலை உரிமையாளர் சங்கம் தீர்மானித்துள்ளது.

இந்த விலை குறைப்பு இன்று முதல் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

சமையல் எரிவாயு சிலிண்டரின்

06

முல்லைத்தீவு கடலில்

## அத்துமீறும் இந்திய படகுகள்



தடுக்குமாறு மீனவ சமூகம் கோரிக்கை

முல்லைத்தீவு நாயாறு முதல் சாலை வரையான கடல் பிரதேசத்தில் சுமார் 200க்கும் மேற்பட்ட இந்திய இழுவைப் படகுகள் அத்துமீறி உள்நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக உள்ளூர் மீனவர்கள் ஆழ்கடலுக்குச் செல்ல முடியாத

06

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம்

## தனது கோரிக்கைகளை மீண்டும் முன்வைத்த CV

நிறைவேற்றினால் சர்வகட்சி அரசில்



அரசியல் கைதிகளின் விடுதலை உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்தே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு ஆதரவாக வாக்களித்ததாக சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

எமது கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டால் சர்வகட்சி அரசாங்கத்தில் இணைவது குறித்து அவதானம் செலுத்தப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

06

## இலத்திரனியல் ஆட்டோக்களை பதிவு செய்ய சட்டத்தில் திருத்தம்

அமைச்சரவை அனுமதியுடன் புதிய ஏற்பாடு



இலத்திரனியல் முச்சக்கர வண்டிகளைப் பதிவு செய்வதற்கான ஏற்பாடுகளுக்காக மோட்டார் வாகனச் சட்டத்தைத் திருத்தம் செய்ய அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

எரிபொருட்களைப் பயன்படுத்தாமல் இலத்திரனியல் வலுவைப் பயன்படுத்தி இயங்குகின்ற வாகனப் பயன்பாட்டை ஊக்குவிப்பதற்காக இலத்திரனியல் முச்சக்கர வண்டிகளை இலங்கையில் பயன்படுத்துவதற்கு

06

90 ஆண்டுகால பாரம்பரியத்துடன் தமிழ் பேசும் மக்களின் தேசிய குரல்

பெருந்தோட்ட அமைச்சு
**இலங்கைத் தேயிலைச் சபை**
தேயிலை ஆணையாளர் பிரிவு

## பச்சை தேயிலைக்கான நியாயமான விலையை செலுத்துதல்

# 2022 ஜூலை மாதம்

**1993 ஆம் ஆண்டின் இல 03 கீழ் திருத்தப்பட்ட சட்டம் 1957 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்க தேயிலை கட்டுப்பாட்டுச் சட்டத்தின் பிரிவு 8 (2) ன் கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு ஏற்ப 2022 ஜூலை மாதத்தில் பதிவு செய்யப்பட்ட தேயிலை உற்பத்தியாளர்களால் கொள்முதல் செய்யப்பட்ட பச்சை தேயிலைக்கான நியாயமான விலை கீழ்க் கொடுக்கப்பட்டுள்ளவாறு அறிவிக்கப்படுகின்றது.**

### பதுளை மாவட்டம்

| தொடர் இல. | பதிவு இல. | தொழிற்சாலையின் பெயர் | சில்லரை விலை ஜூலை |
|---|---|---|---|
| 1 | MF1203 | ஊவா ஹல்பேவத்த | 244.84 |
| 2 | MF0382 | திக்வெல்ல | 240.28 |
| 3 | MF0253 | வேவெஸ்ஸ | 237.16 |
| 4 | MF0821 | க்ளெனோர் | 234.17 |
| 5 | MF0381 | சவுதம் | 227.96 |
| 6 | MF0156 | ஊவா ஹைலண்ட்ஸ் | 226.89 |
| 7 | MF0041 | தேபெத்த | 216.55 |
| 8 | MF0596 | அடாவத்த | 208.23 |
| 9 | MF0581 | அயிஸ்லெபி | 206.01 |
| 10 | MF1595 | இரநாயா | 201.17 |
| 11 | MF0739 | கர்கிலிஸ் | 199.79 |
| 12 | MF0754 | ஊவா ஹப்புத்தளை வெலி | 199.04 |
| 13 | MF0712 | ப்லேயார்ல்மன்ட் | 198.95 |
| 14 | MF0678 | தெலெபெத | 195.10 |
| 15 | MF0720 | கோனமோட்டாவ | 193.48 |
| 16 | MF0269 | தம்பேதென்ன | 192.77 |
| 17 | MF0777 | பிட்டஇரத்மலே | 192.05 |
| 18 | MF0677 | ஸ்பிரிங்வெலி குரூப் | 191.53 |
| 19 | MF1293 | லக்கி லேண்ட் | 191.00 |
| 20 | MF1590 | கோல்ட் பட்ஸ் ஊவா டீ | 190.96 |
| 21 | MF0983 | ஹப்புதளை | 190.29 |
| 22 | MF0974 | ஹப்புகஹவத்த | 188.81 |
| 23 | MF0667 | க்ளேன் எல்பின்ஸ் குரூப் | 187.61 |
| 24 | MF0235 | நயாபெத்த | 184.85 |
| 25 | MF0217 | எல்டெப் | 184.72 |
| 26 | MF0972 | கெப்பட்டிபொல தே சக்தி | 184.08 |
| 27 | MF0371 | பட்டவத்த | 182.65 |
| 28 | MF0637 | உடுவர | 180.64 |
| 29 | MF0988 | சரினா குரூப் | 180.42 |
| 30 | MF0598 | ஷோலன்ட்ஸ் | 179.77 |
| 31 | MF0488 | வெருளுபத்தன | 177.24 |
| 32 | MF0302 | உளுகெதர | 176.26 |
| 33 | MF1000 | ரோபெரி | 175.87 |
| 34 | MF0243 | கினலன் | 172.15 |
| 35 | MF0572 | ஹோப்டன் | 171.92 |
| 36 | MF0234 | கோனகெலே | 167.92 |
| 37 | MF0214 | அம்பேதென்ன | 165.60 |
| 38 | MF0986 | மஹதொவ | 165.30 |
| 39 | MF0329 | ஊவா மொரகல்ல | 164.76 |
| 40 | MF0388 | கம்பஹா | 164.62 |
| 41 | MF0105 | கனவரெல்ல | 162.01 |
| 42 | MF1534 | பஸ்ஸர தே சக்தி | 153.65 |
| 43 | MF1524 | எம்புரொய்ஸ்சா | 150.96 |
| 44 | MF0494 | அம்பிட்டிகந்த | 150.54 |
| 45 | MF0683 | கிரேக் | 146.21 |
| 46 | MF0668 | ஹிந்தகல | 139.86 |
| 47 | MF0292 | பூணாகல | 118.74 |

### கொழும்பு மாவட்டம்

| தொடர் இல. | பதிவு இல. | தொழிற்சாலையின் பெயர் | சில்லரை விலை ஜூலை |
|---|---|---|---|
| 1 | MF1264 | அவிஸ்ஸாவெல்ல | 333.52 |

### காலி மாவட்டம்

| தொடர் இல. | பதிவு இல. | தொழிற்சாலையின் பெயர் | சில்லரை விலை ஜூலை |
|---|---|---|---|
| 1 | MF1373 | மொரகெட்டிய | 297.83 |
| 2 | MF1475 | முஸ்வென்ன | 288.53 |
| 3 | MF1346 | மஹகெதர | 288.19 |
| 4 | MF1389 | கராகொட | 285.82 |
| 5 | MF1396 | ஹிமாரா | 283.70 |
| 6 | BF0035 | ஹில்சயிட் | 283.38 |
| 7 | MF1501 | சிஹாரா | 281.30 |
| 8 | MF1452 | மஹலியத | 279.72 |
| 9 | MF1494 | பரகொடகந்த | 279.48 |
| 10 | MF1319 | தல்கம்பளை | 278.47 |
| 11 | MF1398 | அத்துகோரளை | 277.71 |
| 12 | BF0181 | இரத்ன | 277.22 |
| 13 | MF0954 | மொரகல்ல | 276.35 |
| 14 | MF0861 | வவுலுகல | 276.00 |
| 15 | BF0149 | காலு கங்கபட | 275.99 |
| 16 | MF1342 | எவர்கிரின | 275.03 |
| 17 | MF1367 | வத்துரவில | 273.61 |
| 18 | MF0184 | ரேகடஹேன | 272.97 |
| 19 | MF1333 | ஹிங்குல்கொட | 271.62 |
| 20 | MF1186 | தேவகிரி | 271.11 |
| 21 | MF1307 | குருந்துவத்த | 271.05 |
| 22 | MF1540 | சேரன்யா | 270.83 |
| 23 | MF1300 | இம்புல்கஹகொட | 270.27 |
| 24 | MF0079 | சணச | 269.80 |
| 25 | MF1353 | ஹில்கார்டன் | 269.17 |
| 26 | MF1364 | இரத்கந்த | 268.81 |
| 27 | MF0862 | வீவருகொட | 268.10 |
| 28 | BF0187 | நிவ் சிங்ஹவெலி | 267.72 |
| 29 | MF1485 | குருதிபொத்த | 267.39 |
| 30 | MF1427 | மெனிக்கந்த | 267.07 |
| 31 | MF1195 | கோல்டன் லீ.்.ப் | 266.77 |
| 32 | MF1434 | லியோட்டா | 266.58 |
| 33 | MF1411 | சுசன்த | 265.41 |
| 34 | MF1422 | இவிஹில்ஸ் | 263.76 |
| 35 | MF1371 | நயிந்தாவ | 263.68 |
| 36 | BF0120 | கிரேஸ்லேன்ட் | 263.64 |
| 37 | MF1439 | எக்வின் | 261.06 |
| 38 | MF1543 | ஷம்ரின் | 260.33 |
| 39 | MF1314 | நெலுவ மெதகம | 260.28 |
| 40 | MF1271 | முஸ்ஸெந்தபொத்த | 259.86 |
| 41 | MF0142 | சிரிமேவன | 259.33 |
| 42 | MF1338 | யக்கலமுல்ல | 259.33 |
| 43 | MF1376 | சௌபாக்யா | 259.16 |
| 44 | MF1139 | ஜெஸ்மின்வெலி | 259.08 |
| 45 | MF1361 | உடுஎல்ல | 258.24 |
| 46 | MF1401 | ஜனஹித்த | 257.80 |
| 47 | MF0908 | கெப்டன் கார்டன் | 257.38 |
| 48 | MF1252 | வெளிஹேன | 256.65 |
| 49 | MF0815 | வலஹந்துவ தே சக்தி | 256.14 |
| 50 | MF0751 | திசர | 255.72 |
| 51 | MF1437 | தெல்லேவ | 255.69 |
| 52 | MF1323 | டேவிட்சன் | 254.60 |
| 53 | MF0321 | தலங்கஹ | 254.59 |
| 54 | MF1306 | சினேத் | 253.74 |
| 55 | MF1400 | மிரிஸ்வத்த | 253.17 |
| 56 | MF1497 | கன்னேலிய | 253.08 |
| 57 | MF1170 | இவிவெலி | 252.48 |
| 58 | MF1303 | நில் கந்துர | 252.17 |
| 59 | MF1548 | சுவிஸ்க்கா | 252.17 |
| 60 | MF1315 | றுவன்தென்ன | 251.11 |
| 61 | MF1370 | ருஹுணு | 250.83 |
| 62 | MF1330 | ஹல்விட்டிகல | 250.77 |
| 63 | MF1332 | குருப்பனாவ | 250.10 |
| 64 | MF1447 | இரன்சவி | 248.85 |
| 65 | MF1341 | துளிஎல | 248.78 |
| 66 | MF1393 | நிவ் உடுமுல்லகொட | 247.59 |
| 67 | MF1526 | ஹினிதும ஹில்ஸ் | 243.98 |
| 68 | MF1006 | இத்தேகல | 243.91 |
| 69 | MF1549 | இரன்மீர் | 242.43 |
| 70 | BF0178 | நிவ் கொட்டாவ வெலி | 239.08 |
| 71 | MF1318 | சினென்சிஸ் | 239.01 |
| 72 | MF1253 | மஹேஸ்லன்ட் | 237.64 |
| 73 | BF0172 | விஜய | 236.79 |
| 74 | MF0080 | வெஹிஹேன | 235.56 |
| 75 | MF1369 | மென்டிஸ் | 235.51 |
| 76 | MF1375 | தனவல | 235.09 |
| 77 | MF1350 | பட்டுவங்கல | 234.13 |
| 78 | MF1384 | நெகினிகல | 231.64 |
| 79 | MF1251 | ஈரமுல்ல | 231.14 |
| 80 | MF0655 | பத்தேகம | 230.61 |
| 81 | MF0907 | கெட்டந்தொல | 229.70 |
| 82 | MF1404 | தொட்டுபலவத்த | 229.21 |
| 83 | MF0304 | தல்கஸ்வல | 228.70 |
| 84 | MF1328 | மஹாம்பான | 228.01 |
| 85 | MF1529 | கிரின்வின் | 222.12 |
| 86 | MF1504 | எல்பிட்டிய தே சக்தி | 217.84 |
| 87 | MF1511 | ஜெயசிங்ஹ | 212.70 |
| 88 | MF0128 | பிம்புராகல | 212.56 |
| 89 | MF1380 | கங்கசிரி | 212.36 |
| 90 | MF1359 | திலக்க | 209.93 |
| 91 | MF1510 | எகில்மா | 207.50 |
| 92 | MF0124 | இரசோட்டா | 201.51 |
| 93 | MF1438 | காலி ரே | 198.39 |
| 94 | MF1421 | இலக்மலி | 185.83 |
| 95 | MF1473 | கெல்லபத்த | 175.26 |
| 96 | MF0259 | குடாமலான | 170.85 |
| 97 | MF1378 | வொன்வில் | 165.83 |

### ஹம்பாந்தோட்டை மாவட்டம்

| தொடர் இல. | பதிவு இல. | தொழிற்சாலையின் பெயர் | சில்லரை விலை ஜூலை |
|---|---|---|---|
| 1 | MF1564 | நிவ் ஹதுகல | 217.08 |

### களுத்துறை மாவட்டம்

| தொடர் இல. | பதிவு இல. | தொழிற்சாலையின் பெயர் | சில்லரை விலை ஜூலை |
|---|---|---|---|
| 1 | MF1435 | கலத்தர | 295.58 |
| 2 | MF1594 | இரத்மல்கொட | 263.29 |
| 3 | MF1455 | துன்தொல | 254.80 |
| 4 | MF1476 | நிவ் ஜே.எஸ்.பி | 252.02 |
| 5 | MF0365 | ஹாட்லி | 250.06 |
| 6 | MF1557 | எச்.பீ.பீ. | 246.86 |
| 7 | MF1544 | ஹெடிகல்ல | 246.52 |
| 8 | MF1563 | புலத்சிங்ஹல | 242.33 |
| 9 | MF1481 | ரைகம் கோரளே தே சக்தி | 242.30 |
| 10 | MF1593 | ஜே.எஸ்.பீ.நெலும்தல்ல | 241.30 |
| 11 | MF1280 | மிஹிரிகீகெலே | 239.65 |
| 12 | MF1565 | லிஹினியாவ | 238.22 |
| 13 | BF0183 | பதுரளிய | 232.72 |
| 14 | MF1472 | சுணில்ஸ் | 225.68 |
| 15 | MF1527 | கங்கானி | 224.65 |
| 16 | MF1530 | குமுது | 221.68 |
| 17 | MF1558 | அருண | 214.74 |
| 18 | MF0147 | ரையிகம | 214.61 |
| 19 | MF1477 | மொரபிட்டிய | 207.53 |
| 20 | MF1465 | புரோம்பிரில் | 192.00 |
| 21 | MF1503 | எல்ஹேவன | 185.02 |
| 22 | MF1492 | வின்வுட் | 163.36 |
| 23 | MF1399 | நில்கஹஹேன | 154.14 |

### கண்டி மாவட்டம்

| தொடர் இல. | பதிவு இல. | தொழிற்சாலையின் பெயர் | சில்லரை விலை ஜூலை |
|---|---|---|---|
| 1 | MF1596 | லிவர்பூல | 242.44 |
| 2 | MF0608 | கிரேக்ஹெட் | 242.15 |
| 3 | MF0842 | மலிகாகந்த | 239.39 |
| 4 | MF0416 | ஹப்பர் லென்டர்ன்ஹில் | 237.18 |
| 5 | MF0697 | நயாபான | 219.62 |
| 6 | MF0007 | கலமுதுன | 200.19 |
| 7 | MF0866 | வெஸ்ட் ஹோல் | 200.09 |
| 8 | MF0561 | குருந்துவத்த | 196.67 |
| 9 | BF0028 | ஒரேன்ஜ் பீல்ட் | 183.94 |
| 10 | MF0616 | டாட்ர் | 181.02 |
| 11 | MF0836 | சன்குஹர் | 180.75 |
| 12 | MF1257 | அப்லன்ட்ஸ் | 179.18 |
| 13 | MF0402 | எல்பிட்டிய | 175.25 |
| 14 | MF0150 | நிவ் ஒரியன் | 173.76 |
| 15 | MF0013 | நிவ் பீகொக் குரூப் | 173.26 |
| 16 | MF0886 | மெல்போர்ட் | 168.42 |
| 17 | MF1521 | கிரிமெட்டிய | 167.26 |
| 18 | BF0043 | நிவ் வெலிகங்க | 166.86 |
| 19 | MF0164 | இம்புல்பிட்டிய | 166.29 |
| 20 | BF0111 | பிலிமதலாவ | 164.92 |
| 21 | MF1426 | பரகல்ல | 162.35 |
| 22 | MF0094 | நிவ் அம்பிட்டிகந்த | 161.77 |
| 23 | MF1247 | ஸ்டோர்பீல்ட் | 161.19 |
| 24 | MF1035 | சியோன் ஹில | 157.66 |
| 25 | MF0800 | வெம்பிலி | 157.30 |
| 26 | MF0817 | யஹலதென்ன | 157.21 |
| 27 | MF0093 | என்கொம்புர | 156.58 |
| 28 | MF1044 | கிரின்வுட் | 155.99 |
| 29 | MF0255 | நிவ் கெலிய குரூப் | 155.67 |
| 30 | MF1461 | எம்பில்மீகம | 154.40 |
| 31 | MF1181 | பல்லேகம | 149.23 |
| 32 | MF0148 | இராக்ஷாவ | 146.95 |
| 33 | BF0020 | வட்டதெனிய | 146.79 |
| 34 | BF0171 | நிவ் .்.பர்ல்லன்ட் | 146.19 |
| 35 | BF0165 | தெஹிவத்த | 145.86 |
| 36 | MF0340 | ஹோப் | 145.40 |
| 37 | MF0864 | மஹவில | 145.19 |
| 38 | MF0967 | கெட்டகஹவல | 144.80 |
| 39 | MF1509 | தெஹிகம | 143.31 |
| 40 | MF0127 | கிங்ஸ்வெலி | 142.60 |
| 41 | MF0897 | டக்வாரி | 141.51 |
| 42 | MF0602 | டெல்டா | 141.34 |
| 43 | BF0123 | கல்பாய | 141.08 |
| 44 | MF1523 | உதயகந்த | 138.45 |
| 45 | MF1585 | மெனிக்திவெல | 136.32 |
| 46 | MF0341 | இங்குருகல | 124.54 |
| 47 | MF0132 | எரின் | 123.16 |
| 48 | MF0538 | லீ வெலோன் | 118.71 |
| 49 | BF0170 | நில்தலுகந்த | 118.59 |
| 50 | MF0707 | நிவ் தொரகல | 117.99 |
| 51 | MF1269 | இரங்கல்ல குரூப் | 117.70 |
| 52 | MF0077 | மல்கொல்ல | 117.40 |
| 53 | MF0024 | பலகல்ல | 116.69 |
| 54 | MF1513 | நிவ் பத்தேகம | 115.70 |
| 55 | MF0634 | அலகல்ல | 115.20 |
| 56 | MF1235 | லென்டர்ன் ஹில | 112.35 |
| 57 | MF0020 | குருகம | 108.77 |
| 58 | MF1082 | ரின்க் வுட் | 104.25 |
| 59 | MF0823 | பட்டியகம | 102.07 |
| 60 | MF0553 | மோஸ்வில் | 97.14 |
| 61 | MF0268 | ரைன்லேன்ட் | 90.95 |
| 62 | MF0556 | மொன்டி கிரிஸ்டோ | 83.10 |

### கேகாலை மாவட்டம்

| தொடர் இல. | பதிவு இல. | தொழிற்சாலையின் பெயர் | சில்லரை விலை ஜூலை |
|---|---|---|---|
| 1 | MF0293 | களணி | 296.80 |
| 2 | MF0626 | ஹல்கொல்ல | 229.06 |
| 3 | MF1579 | தெரணியகல தே சக்தி | 222.91 |
| 4 | MF1528 | மிசா | 214.60 |
| 5 | MF1316 | கொலொன்ன | 213.28 |
| 6 | MF0236 | பம்பேகம | 212.70 |
| 7 | MF1580 | கித்துல்கல | 210.09 |
| 8 | MF0472 | என்டேரபொல | 206.92 |
| 9 | MF0085 | நூரி | 200.87 |
| 10 | MF0903 | மாலிபொட | 197.26 |
| 11 | MF1297 | இலுக்தென்ன | 196.35 |
| 12 | MF1057 | தேதுகல | 187.09 |
| 13 | MF0267 | நிவ் மவுன்ட் கர்மல் | 183.01 |
| 14 | MF1304 | கெஹெல்வல | 180.83 |
| 15 | MF0353 | யட்டிதேரிய | 179.52 |
| 16 | MF0895 | தோத்தல் ஓய | 178.79 |
| 17 | MF0574 | சப்புமல்கந்த | 158.48 |
| 18 | MF1599 | கெனோரா | 125.33 |

### மாத்தளை மாவட்டம்

| தொடர் இல. | பதிவு இல. | தொழிற்சாலையின் பெயர் | சில்லரை விலை ஜூலை |
|---|---|---|---|
| 1 | MF0370 | பண்டாரபொல | 154.48 |
| 2 | MF0722 | ஹாத்தளை | 151.65 |
| 3 | MF1413 | மவுன்ட் எலீசா | 145.78 |
| 4 | MF0344 | மாத்தளை வெஸ்ட் | 144.92 |
| 5 | MF0724 | மிட்லேண்ட்ஸ் | 104.16 |

### மாத்தறை மாவட்டம்

| தொடர் இல. | பதிவு இல. | தொழிற்சாலையின் பெயர் | சில்லரை விலை ஜூலை |
|---|---|---|---|
| 1 | BF0188 | களுபோவிட்டியான | 434.82 |
| 2 | BF0138 | போத்தொட்டுவ | 359.33 |
| 3 | MF1337 | லும்பிணி | 337.03 |
| 4 | BF0157 | ஆபர் வெலி | 332.08 |
| 5 | MF1274 | பெருபேபுல | 322.50 |
| 6 | MF1462 | லயன்ஸ் | 317.48 |
| 7 | BF0044 | மொரவக்கோரலே | 313.86 |
| 8 | MF1450 | ரொட்டும்ப | 313.63 |
| 9 | MF1507 | சன்ரைஸ் | 313.05 |
| 10 | MF1331 | தம்பஹல | 311.03 |
| 11 | MF1415 | சியேன்ட்டா | 309.64 |
| 12 | MF1468 | நில்ரிச் | 307.97 |
| 13 | MF1410 | குணவர்தன | 304.58 |
| 14 | MF1406 | கிரின் லங்கா | 302.50 |
| 15 | MF1502 | நில்கிரி | 301.86 |
| 16 | MF1041 | கலபொட | 300.09 |
| 17 | MF1578 | இலக்வின்கா | 295.62 |
| 18 | MF1322 | பஸ்கொட | 295.16 |
| 19 | MF0216 | இரசா | 294.51 |
| 20 | MF1270 | பியோல்ட்டா | 292.71 |
| 21 | MF1428 | .்.போசூன் | 292.52 |
| 22 | MF1498 | ஊருபொக்க | 291.67 |
| 23 | MF0440 | ஊருவல | 290.34 |
| 24 | MF1547 | மாகந்துர | 290.14 |
| 25 | MF1287 | நந்தன | 289.18 |
| 26 | MF1433 | கொஸ்கஹதொல ஹில் | 288.95 |
| 27 | MF1198 | தெனியாய தே சக்தி | 286.57 |
| 28 | MF1518 | கோ-ப் கோலா | 285.68 |
| 29 | MF1490 | இரன்சேகொட | 285.19 |
| 30 | MF1500 | கிரீன் ஹவுஸ் | 284.17 |
| 31 | MF1024 | எலன்வெலி | 284.03 |
| 32 | MF1275 | நிவ் தெனியாய | 283.54 |
| 33 | BF0173 | டெவோனியா | 282.84 |
| 34 | MF1443 | கீ டீ ஹில்ஸ் | 282.80 |
| 35 | MF1562 | சுதுகஹஹேன | 282.44 |
| 36 | MF1320 | ரிச்லன்ட் | 282.15 |
| 37 | MF1407 | போகொட | 281.96 |
| 38 | MF0802 | தெனியாய | 280.93 |
| 39 | MF1577 | லேனம ஹில்ஸ் | 280.46 |
| 40 | MF1506 | வலவ்வத்த | 279.47 |
| 41 | MF0443 | கிங்ஸ்போ | 279.40 |
| 42 | MF1231 | எட்டம்பகஹவில | 278.26 |
| 43 | MF1339 | யாழ்டா | 277.05 |
| 44 | MF1533 | தலபலாகந்த | 276.83 |
| 45 | MF0426 | சவுத் கோ-ப் | 276.76 |
| 46 | MF1077 | மஹேந்ரா | 275.81 |
| 47 | MF1278 | மத்தொட்ட | 275.77 |
| 48 | MF1545 | லியோன்ட்டா | 275.62 |
| 49 | MF0454 | கலகாவ | 275.15 |
| 50 | MF1329 | முலட்டியன | 274.19 |
| 51 | MF1574 | பலகல | 273.71 |
| 52 | MF1539 | எஸ்.எல.எஸ் | 272.49 |
| 53 | MF1464 | .்.பேரிமவுன்ட் | 272.04 |
| 54 | BF0161 | .்.பேயரிலன்ட் | 271.09 |
| 55 | MF1360 | டிஷான் வெலி | 266.55 |
| 56 | MF1107 | திப்பொல | 265.89 |
| 57 | MF1414 | தெரங்கல ஹில்ஸ் | 264.81 |
| 58 | MF0414 | கட்டன்வில | 263.46 |
| 59 | MF1423 | கோ-ப் லங்கா | 261.26 |
| 60 | MF1561 | தெதியகல | 260.80 |
| 61 | MF1033 | நில்திய வெலி | 260.43 |
| 62 | MF1516 | கன்ரிச | 251.89 |
| 63 | MF1340 | த்ரி டைம்ஸ் | 249.35 |
| 64 | MF1484 | குடாபான | 247.90 |
| 65 | MF1514 | நிவ் அத்துரலிய | 247.89 |
| 66 | MF0977 | விலீ குரூப் | 247.82 |
| 67 | MF1542 | அந்தரதெனிய | 246.93 |
| 68 | BF0186 | நில்வலா | 245.49 |
| 69 | MF1402 | நிவ் சவுத் கோ-ப் | 244.61 |
| 70 | MF0064 | அனின்கந்த | 243.72 |
| 71 | MF1482 | தெரங்கல | 242.56 |
| 72 | MF1417 | கோப்வீன் | 241.48 |
| 73 | MF0975 | செமிடெல் | 235.92 |
| 74 | MF1004 | தித்தெனிபொத்த | 234.19 |
| 75 | MF1383 | நவ தியகல | 226.29 |
| 76 | MF1298 | நில்எல்ல | 224.94 |
| 77 | MF1362 | நிவ் காமிணி | 217.67 |
| 78 | MF1486 | தம்மென்ன | 207.56 |
| 79 | MF0016 | பெவர்லி | 190.12 |
| 80 | MF1568 | வுட்லன்ட் | 179.12 |
| 81 | MF0009 | எனசல்வத்தை | 166.27 |

### நுவரெலியா மாவட்டம்

| தொடர் இல. | பதிவு இல. | தொழிற்சாலையின் பெயர் | சில்லரை விலை ஜூலை |
|---|---|---|---|
| 1 | MF0467 | க்ரஸ்லட் பாம் | 268.84 |
| 2 | MF0642 | புரோட்லேன்ட்ஸ் | 246.46 |
| 3 | MF0350 | சோகம | 241.94 |
| 4 | MF0489 | கிரேட் வெஸ்டர்ன் | 226.34 |
| 5 | MF0541 | போகாவத்த | 224.33 |
| 6 | MF0071 | வத்தேகொட | 217.98 |
| 7 | MF0004 | மட்டகெலே | 215.17 |
| 8 | MF0568 | பம்பரகெலே குரூப் | 212.94 |
| 9 | MF0396 | இன்ஜஸ்ட்ரி | 212.58 |
| 10 | MF0981 | என்பீல்ட் | 212.23 |
| 11 | MF0772 | ஹோலிரூட் | 210.20 |
| 12 | MF0569 | டெஸ்போர்ட் | 209.46 |
| 13 | MF0769 | எல்டன் | 208.02 |
| 14 | MF0066 | கௌரவில | 207.07 |
| 15 | MF0646 | டொரிங்டன் | 206.53 |
| 16 | MF0308 | .்.பெட்டிரெசோ | 204.23 |
| 17 | MF0294 | ரொப்கில் குரூப் | 204.11 |
| 18 | MF0779 | சமர்செட் | 203.88 |
| 19 | MF0840 | வென்ச்சர் | 203.82 |
| 20 | MF0368 | பெல்மோரல் | 202.89 |
| 21 | MF0767 | டிலரி | 201.25 |
| 22 | MF0457 | பெட்ரோ | 200.61 |
| 23 | MF0711 | பெயார்வெல் | 200.37 |
| 24 | MF0984 | கைப்புகல | 199.65 |
| 25 | MF0835 | ஹரங்கல்ல | 198.45 |
| 26 | MF0399 | மொரே | 197.64 |
| 27 | MF0485 | போகாவன | 197.32 |
| 28 | MF0502 | கிலேன்டிட் வத்த | 196.59 |
| 29 | MF0492 | க்வின்ஸ்பரி | 196.40 |
| 30 | MF0348 | நோர்வுட் | 195.86 |
| 31 | MF0495 | .்.புரொடைய்ஸ் | 195.84 |
| 32 | MF0584 | .்.பெயார்லவன் | 195.54 |
| 33 | MF0159 | ஸ்டோக்ஹோம் | 193.98 |
| 34 | MF0069 | கொட்டியாகல்ல | 193.38 |
| 35 | MF0221 | தலவாகெலே | 193.33 |
| 36 | MF0595 | டிக்கோயா | 193.09 |
| 37 | MF0597 | கெட்டபுலா | 191.50 |
| 38 | MF0366 | அக்ரா ஊவா | 191.47 |
| 39 | MF0188 | சென் கொம்ப்ஸ் | 190.87 |
| 40 | MF0829 | எல்டன் ஹோல் | 189.92 |
| 41 | MF0204 | லேதன்டி | 188.07 |
| 42 | MF0012 | தியகம ஈஸ்ட் | 187.60 |
| 43 | MF0670 | காட்ர்மோர் | 187.12 |
| 44 | MF0034 | ஸ்ட்ரேதஸ்பீ | 186.23 |
| 45 | MF0689 | லக்ஷபான | 186.15 |
| 46 | MF1254 | கொன்கோர்டியா | 185.89 |
| 47 | MF0902 | வெதமுல்ல | 185.69 |
| 48 | MF0251 | க்லேன்லொச் | 185.15 |
| 49 | MF0008 | கொரக்ஓய | 184.84 |
| 50 | MF0552 | வனராஜா | 184.26 |
| 51 | MF0043 | சென் க்ளேயார் | 184.05 |
| 52 | MF0459 | கோர்ட் லொஜ் | 183.86 |
| 53 | MF0557 | மாவுஸ்ஸாகெலே | 183.23 |
| 54 | MF0011 | தியகம வெஸ்ட் | 182.68 |
| 55 | MF0468 | கிவ் | 182.02 |
| 56 | MF0486 | கிர்கஸ்வோல்ட் | 181.35 |
| 57 | MF0673 | முல்லோயா | 179.45 |
| 58 | MF0220 | டன்சினன் | 178.52 |
| 59 | MF0692 | வோல்ட்ரிம் | 177.99 |
| 60 | MF0926 | கிரேக் லீ | 177.79 |
| 61 | MF0343 | லபுகெலே | 177.78 |
| 62 | MF0663 | பொகவன்தலாவ | 177.67 |
| 63 | MF0928 | டெல்மர் | 177.58 |
| 64 | MF1301 | நுவரெலியா | 177.46 |
| 65 | MF0345 | நோர்த் மெதகும்புர | 176.72 |
| 66 | MF0141 | அல்மா | 174.95 |
| 67 | MF0276 | ஹேன்போர்ட் | 174.49 |
| 68 | MF0674 | மே.்.பில்ட் | 173.79 |
| 69 | MF0387 | புரோட்டோ.்.ப் | 172.14 |
| 70 | MF0005 | ஸ்டோனி க்ளிப் குரூப் | 172.00 |
| 71 | MF0501 | மோச்சா | 171.59 |
| 72 | MF0771 | வேவர்லி | 171.31 |
| 73 | MF0226 | கிளாசொஜ் | 170.95 |
| 74 | MF0705 | ஹவுத்தலே வெலி | 170.78 |
| 75 | MF0504 | ஷெனன் | 170.59 |
| 76 | MF0374 | பிரேஸ்விக் | 170.22 |
| 77 | MF0391 | கோனபிட்டிய குரூப் | 170.12 |
| 78 | MF0645 | எல்பியன் | 169.94 |
| 79 | MF0062 | கௌணிய எஸ்டேட் | 169.71 |
| 80 | MF0548 | கெனில்வர்த் | 169.27 |
| 81 | MF0890 | சென்.தெரேசியா | 168.30 |
| 82 | MF0033 | த்ரொப் | 167.07 |
| 83 | MF0703 | கெம்பியன் | 165.70 |
| 84 | MF0349 | ரோத்சைட் | 165.68 |
| 85 | MF0067 | லிடஸ்டெல் | 161.80 |
| 86 | MF0351 | வெலிஓய | 156.91 |
| 87 | MF0383 | டோர்ட்டன் | 155.57 |
| 88 | MF1003 | ஷெனன் | 155.41 |
| 89 | MF0455 | பார்க் | 152.64 |
| 90 | MF0300 | அபுசைட் | 152.51 |
| 91 | MF0384 | டன்கல்ட் | 151.46 |
| 92 | MF0647 | உட ரதெல்ல | 151.25 |
| 93 | MF0656 | லோவர் டொன்சயிட் | 150.87 |
| 94 | MF0503 | வூட்டன் | 150.46 |
| 95 | MF0729 | இராகல குரூப் | 149.44 |
| 96 | MF0770 | தங்கெல்லே | 148.22 |
| 97 | MF0021 | கோர்டன் | 145.91 |
| 98 | MF0206 | லொய்னோர்ன் | 144.72 |
| 99 | MF0618 | யுலிபீல்ட் | 137.67 |
| 100 | MF0392 | ஹைய் பொரஸ்ட் | 136.91 |
| 101 | MF0790 | ஸ்ட்ரேதடன் | 127.45 |
| 102 | MF1039 | புருக்சைட் | 126.05 |
| 103 | MF0420 | கூல்போவ்ன் | 124.83 |
| 104 | MF0322 | மவுன்ட் வர்னன் | 122.35 |
| 105 | MF0462 | கெரோலினா | 112.70 |
| 106 | MF1512 | ரொஷெல்ல | 106.94 |
| 107 | MF0878 | ஹேவன்வெவ | 106.39 |
| 108 | MF0242 | க்லேர்டன் | 104.34 |
| 109 | MF1273 | நோர்ட்டன் | 104.08 |

### இரத்தினபுரி மாவட்டம்

| தொடர் இல. | பதிவு இல. | தொழிற்சாலையின் பெயர் | சில்லரை விலை ஜூலை |
|---|---|---|---|
| 1 | MF0619 | கலபொட | 370.07 |
| 2 | MF1387 | ஏ.சீ.யூ | 308.13 |
| 3 | MF0181 | சிசிலியன் | 302.86 |
| 4 | MF1416 | கோப்பகந்த | 293.31 |
| 5 | MF1392 | ஹிதெல்லன | 287.60 |
| 6 | MF1172 | நிவ் வித்தானகந்த | 284.64 |
| 7 | MF1441 | .்.பெல்கொன் | 280.76 |
| 8 | MF0946 | இரஜ்ஜுருவத்த | 275.32 |
| 9 | MF0272 | பனில்கந்த | 265.21 |
| 10 | MF1552 | சன்ஹில் | 261.36 |
| 11 | MF0347 | மட்டுவாகல | 255.26 |
| 12 | MF1440 | நிவித்திகல | 254.40 |
| 13 | MF0905 | மில்லவிட்டிய | 252.43 |
| 14 | MF1470 | கரவிட்ட | 247.06 |
| 15 | MF0481 | எய்க்பர்த் | 245.93 |
| 16 | MF1442 | வெத்தேகல | 243.32 |
| 17 | MF1487 | எடம்ஸ் வீவ் | 242.94 |
| 18 | MF1478 | செனோரா | 242.31 |
| 19 | MF1217 | கல்படிதென்ன | 241.52 |
| 20 | MF1266 | கெந்தலந்த | 241.25 |
| 21 | MF1368 | நிவ் டெம்பல் வீவ் | 239.14 |
| 22 | MF1488 | குக்குலேகங்க | 237.93 |
| 23 | MF1281 | சென்.ஜோக்ஹிம் | 236.62 |
| 24 | MF1496 | கோ-ப்-டீ | 233.40 |
| 25 | MF1343 | கோண்ங்காவத்த | 232.51 |
| 26 | MF0104 | வெல்அந்துர | 230.89 |
| 27 | BF0155 | கோண்காவத்தை | 228.62 |
| 28 | MF1572 | சம்பத் | 228.54 |
| 29 | MF0393 | ஹேயிஸ் | 228.13 |
| 30 | MF0295 | குட்டாபிட்டிய | 225.07 |
| 31 | MF1553 | ஸ்பிரீங் வீவ் | 224.60 |
| 32 | MF0911 | தும்பர | 223.82 |
| 33 | MF1537 | அயகம | 223.07 |
| 34 | MF1591 | எத்ஓய வத்த | 222.34 |
| 35 | MF1463 | பீக்வீவ் | 222.09 |
| 36 | MF1459 | நிவ் லக்சகந்த | 221.86 |
| 37 | MF0906 | பார்ம் கார்டன் | 221.06 |
| 38 | BF0163 | தெல்கொட | 220.92 |
| 39 | MF1436 | நிவ் வேவெலகந்துர | 219.32 |
| 40 | MF0780 | ஹௌப்பே | 218.98 |
| 41 | MF1456 | டீர்வுட் | 218.44 |
| 42 | MF1491 | நிவ் தொரலவிட்டியஹேன | 217.95 |
| 43 | MF1453 | கலாவான | 217.87 |
| 44 | MF1483 | கெலெக்சி | 217.85 |
| 45 | MF0296 | தொலொஸ்வெல்ல | 217.26 |
| 46 | MF1317 | தேஷிக்கா | 216.23 |
| 47 | MF1354 | பீக் பெரடயிஸ் | 216.03 |
| 48 | MF1418 | தொரலவிட்டியஹேன | 215.23 |
| 49 | MF0449 | எனன் | 214.34 |
| 50 | MF1571 | காமரங்காபிட்டிய | 213.67 |
| 51 | MF1365 | நவகமுவஹேன | 210.06 |
| 52 | MF1551 | கலஹிட்டிய | 209.66 |
| 53 | MF0624 | விக்கிலிய | 209.20 |
| 54 | MF1292 | பைன் ஹில் | 207.09 |
| 55 | MF1480 | நிவ் ஹோப்வெல் | 204.46 |
| 56 | MF0103 | ஓபாத்த | 204.45 |
| 57 | MF0546 | ஸ்பிரிங் வுட் | 203.78 |
| 58 | MF1515 | கீகியனஹேன | 202.98 |
| 59 | MF0200 | பெட்டியகல | 202.24 |
| 60 | MF1284 | நிவ் பனாவென்ன | 201.87 |
| 61 | MF0490 | ஹெதர்லீ | 201.71 |
| 62 | MF0108 | போரோனுவ | 201.68 |
| 63 | MF1308 | நிவ் உடகந்த | 199.88 |
| 64 | MF0625 | நிவ் இராஸ்ஸகல | 199.83 |
| 65 | MF1531 | இஹல பனாபிட்டிய | 199.79 |
| 66 | MF0263 | வேவத்த | 196.30 |
| 67 | MF1363 | நாவலகந்த | 195.37 |
| 68 | MF1458 | செரோன் | 195.31 |
| 69 | MF0369 | மாரதென்ன | 194.35 |
| 70 | MF0183 | நிவ் கந்தகஸ்தென்ன | 193.20 |
| 71 | MF0909 | எலர்டன் | 193.01 |
| 72 | MF0258 | பலாங்கொட தே சக்தி | 190.89 |
| 73 | MF0594 | பொஸ்கொம்பி | 190.59 |
| 74 | MF1467 | தண்டுவன்கலவத்த | 190.17 |
| 75 | MF1075 | கடிகல்ஹேன | 186.54 |
| 76 | MF0623 | மெந்தகந்த | 186.03 |
| 77 | MF1601 | புலு ஹில்ஸ் | 185.83 |
| 78 | MF0083 | ரில்ஹேன | 184.66 |
| 79 | MF0262 | ஹப்பர் பலாங்கொட | 184.34 |
| 80 | MF0801 | ஹபுகஸ்தென்ன | 183.96 |
| 81 | MF1397 | .்.பர்ன்டேல் | 179.97 |
| 82 | MF0285 | ஹுணுவெல்ல | 176.97 |
| 83 | MF0168 | எந்தொன | 176.32 |
| 84 | MF0367 | சிசில்டன் | 173.97 |
| 85 | MF1495 | நில்வின் வீவ் | 168.99 |
| 86 | BF0150 | ஷர்வுட் | 159.58 |
| 87 | MF1519 | பரகடுவ | 156.00 |
| 88 | MF0107 | நீலாகம | 134.85 |
| 89 | MF0428 | இரந்தொல | 128.92 |
| 90 | MF0659 | ரைய் | 127.09 |

**பச்சை தேயிலை இலை வழங்குனர்கள் யாரேனும் தனது பச்சை தேயிலை இலை வழங்கியதற்கு உரிய பணம் கிடைக்கவில்லை எனில் தயவு செய்து உதவி தேயிலை ஆணையரிடம் அல்லது முடிந்தவரை என்னிடம் முறையீடு செய்யவும்.**

**பதுளை மற்றும் மொனராகலை மாவட்டங்கள்**
உதவி தேயிலை ஆணையாளர், இலங்கை தேயிலை சபை, பிராந்திய அலுவலகம், விசாகா மாவத்தை, புதிய பதுளை வீதி, பண்டாரவளை.
தொலைபேசி / தொலைநகல் - 057-2222812

**கண்டி மற்றும் மாத்தளை மாவட்டங்கள்**
உதவி தேயிலை ஆணையாளர், இலங்கை தேயிலை சபை,
பிராந்திய அலுவலகம், இல-140, அம்பகமுவ வீதி, கம்பளை.
தொலைபேசி / தொலைநகல் - 081-2352279

**இரத்தினபுரி மற்றும் கேகாலை மாவட்டங்கள்**
உதவி தேயிலை ஆணையாளர், இலங்கை தேயிலை சபை,
பிராந்திய அலுவலகம், இல-61/1, புதிய நகரம், இரத்தினபுரி.
தொலைபேசி / தொலைநகல் - 045-2222136

**மாத்தறை மற்றும் ஹம்பாந்தோட்டை மாவட்டங்கள்**
உதவி தேயிலை ஆணையாளர், இலங்கை தேயிலை சபை, பிராந்திய அலுவலகம், இல-23, அளுத் மாவத்தை, உயன்வத்த, மாத்தறை.
தொலைபேசி / தொலைநகல் - 041-2222636

**காலி மாவட்டம் (எல்பிட்டிய பிரதேச செயலாளர் பிரிவு தவிர)**
உதவி தேயிலை ஆணையாளர், இலங்கை தேயிலை சபை,
பிராந்திய அலுவலகம், இல-34, கங்காராம குறுக்கு வீதி,
மாகல்லே, காலி.
தொலைபேசி / தொலைநகல் - 091-2232052

**களுத்துறை மற்றும் காலி - காலி மாவட்டம் (எல்பிட்டிய பிரதேசத்திற்கான செயலாளர் பிரிவு)**
உதவி தேயிலை ஆணையாளர், இலங்கை தேயிலை சபை,
பிராந்திய அலுவலகம், வதுரான வீதி, பதுரலிய.
தொலைபேசி / தொலைநகல் - 034-2247444

**நுவரெலியா மாவட்டம்**
உதவி தேயிலை ஆணையாளர், இலங்கை தேயிலை சபை, பிராந்திய அலுவலகம், இல-10, நானுஓயா வீதி, கெலேகால, நுவரெலியா.
தொலைபேசி - 052-2234695
தொலைநகல் - 052-2234686

**தேயிலை ஆணையாளர்**
**இலங்கைத் தேயிலைச் சபை**
**இல. 574, காலி வீதி, கொழும்பு 03.**

- பதிவு செய்யப்பட்ட தேயிலை உற்பத்தியாளர்கள் - தயவுசெய்து தேயிலை தயாரிக்க முதிர்ச்சியடையாத மற்றும் சேதமடையாத பச்சை தேயிலை இலைகளை கொள்வனவு செய்யவும்.
- தேயிலை வைத்திருப்பவர்கள், பச்சை இலை விற்பனையாளர்கள் - முதிர்ச்சியடையாத மற்றும் சேதமடையாத பச்சை தேயிலை இலைகளை தொழிற்சாலைகளுக்கு வழங்குவதில் எச்சரிக்கையாக இருங்கள்.
- சிறியளவிலான தேயிலை உற்பத்தியாளர்கள் - பச்சை தேயிலை இலைகளை உடனடி பணத்திற்கு வழங்குவதைத் தவிர்க்கவும், அப்படியெனின் நீங்கள் ஒரு பாரிய இழப்பை சந்திக்க நேரிடும்.

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2022 ஓகஸ்ட் 10 புதன்கிழமை

# தினகரன்

THINAKARAN
තිනකරන්



**தொழுகை நேரம்**

10 முதல் 14 வரை

| | |
|---|---|
| சுபஹ் | 04.45 |
| லுஹர் | 12.17 |
| அஸர் | 03.35 |
| மஃரிப் | 06.27 |
| இஷா | 07.40 |

**இன்றைய சுபதினம்**

சுபகிருது வருடம் ஆடி 25

ராகுகாலம் : பகல் : 12.00 - 1.30வரை
சுபநேரம் : காலை : 9.00 - 10.30வரை

யோகம்: அமிர்த யோகம்

திதி: சதுர்த்தசி

**இராசி பலன்கள்**

| | |
|---|---|
| மேஷம் | நன்மை |
| ரிஷபம் | பாராட்டு |
| மிதுனம் | தனம் |
| கடகம் | போட்டி |
| சிம்மம் | கோபம் |
| கன்னி | முயற்சி |
| துலாம் | மறதி |
| விருச்சிகம் | நிறைவு |
| தனுசு | வெற்றி |
| மகரம் | பொறுமை |
| கும்பம் | சுகம் |
| மீனம் | செலவு |

கலாநிதி இராமச்சந்திரகுருக்கள் (பாபு சர்மா)

1000 ரூபாய் வேதனம்

# தொழிலாளர்களுக்கு சாதகமான தீர்ப்பு இ.தொ.காஸ்கிரஸுக்கு கிடைத்த வெற்றி

*CWC தலைவர் செந்தில் தொண்டமான் தெரிவிப்பு*



பெருந்தோட்டத் தொழிலாளர்களின் 1000 ரூபாய் வேதனத்தை வழங்க மறுத்து கம்பனிகள் தாக்கல் செய்திருந்த வழக்கில் தொழிலாளர்களுக்கு சாதகமாக தீர்ப்பு வழங்கப்பட்டமையானது மறைந்த தலைவர் அமரர் ஆறுமுகன் தொண்டமான் அவர்களுக்கு கிடைத்த வெற்றி என இ.தொ.கா தலைவர் செந்தில் தொண்டமான் தெரிவித்துள்ளார். அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, தொழிலாளர்கள் சார்பாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸினால் முன்மொழியப்பட்ட 1000 ரூபாய் சம்பள கோரிக்கை தொழில் அமைச்சினால் ஆய்வு செய்யப்பட்டு, வர்த்தமானி ஊடாக வெளியிடப்பட்டது. இவ்வர்த்தமானிக்கு எதிராக பெருந்தோட்ட கம்பனியால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு, தொடர் விசாரணைக்குப் பின் இவ்வழக்கு நேற்று தள்ளுபடி செய்யப்பட்டது.

தோட்ட தொழிலாளர்களுக்கு உரிய வேதனத்தை வழங்க மேன்முறையீட்டு நீதிமன்றம் பெருந்தோட்ட கம்பனிகளுக்கு உத்தரவிட்டுள்ளது. இவ்வுத்தரவு இலங்கை தொழிலாளர் காங்கிரஸிக்கு கிடைத்த முதல் வெற்றியாகும். எதிர்காலத்திலும் தொழிலாளர்களுக்கு அதிக சம்பளத்தை பெற்றுத் தருவதில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஒருப்போதும் பின்வாங்காது. மேலும் தற்போதைய சூழ்நிலையில் வாழ்வாதாரத்தை கொண்டு செல்ல 1000

06

பிபிலையில் வாகன விபத்து;

# கனுல்வெல்ல மு.ம.வித்தியாலய 12 மாணவர்கள் காயம்

**ஊவா வெல்லஸ்ஸ நிருபர்**

மொனராகலை பிபில வீதியின் தொடம்கொல்ல பிரதேசத்தில் பாடசாலை மாணவர்களை ஏற்றிச் சென்ற டிமோ பட்டா ரக லொறி ஒன்று வீதியை விட்டு விலகி கவிழ்ந்ததில் 12 மாணவர்கள் காயமடைந்துள்ளதாக பிபில பொலிஸார் தெரிவித்தனர்.

பிபில வெல்லஸ்ஸ தேசிய பாடசாலை விளையாட்டரங்கில் நடைபெற்ற வலைப்பந்தாட்டப் போட்டியில் பங்குபற்றச் சென்ற கனுல்வெல முஸ்லிம் மகா வித்தியாலய மாணவர்கள் குழுவொன்றே நேற்று (09) இடம்பெற்ற இவ்விபத்தில் படுகாயமடைந்துள்ளனர்.

சாரதியால் லொறியின் வேகத்தை கட்டுப்படுத்த முடியாததால், தொடம்கொல்ல எத்தனவத்தை பகுதியில் லொறி வீதியை விட்டு விலகி கவிழ்ந்துள்ளது. பதின்மூன்று மாணவர்களில் 12 பேர் காயமடைந்துள்ளனர். காயமடைந்தவர்கள் பிபில வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இரண்டு மாணவர்களுக்கு சிறிய சத்திரசிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் ஆனால்

06

# தடைசெய்யப்பட்ட பொருட்களை நாட்டுக்கு எடுத்து வராதீர்கள்

**விமானப் பயணிகளிடம் சுங்கத்திணைக்களம் கோரிக்கை**



உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் விமான நிலையம் அல்லது Unaccompanied Baggage(UPB) களஞ்சியம் ஊடாக தடை மற்றும் மட்டுப்படுத்தப் பட்டபொருட்களையோ அல்லது தற்காலிகமாக தடை செய்யப்பட்ட பொருட்கள் அல்லது வணிகளவில் அடங்கும் பொருட்களை கொண்டு வருவதை தவிர்க்குமாறு இலங்கை சுங்கம் விமானப் பயணிகளுக்கு அறிவித்துள்ளது.

இந்த ஆலோசனையை பின்பற்ற தவறினால் சுங்கக் கட்டளை சட்டம் மற்றும் ஏற்றுமதி இறக்குமதி( கட்டுப்பாடு) சட்ட நெறிமுறைகளுக்கு அமைய அவ்வாறு சட்ட விரோதமாக கொண்டு வரப்படும் அனைத்து பொருட்களையும் அரசுடைமையாக்கவோ அல்லது அபராதம் விதிக்கவோ நடவடிக்கை எடுக்கப்படும்.

கடந்த காலங்களில் விமான பயணிகள் மூலம் அவர்களால் கொண்டுவரப்படும் பயண பொதிகள் மற்றும் பொருட்களை ஏற்றி இறக்கும் பல நிறுவனங்கள் (UPB) மூலம் அனுப்பப்படும் பொதிகளில் இறக்குமதிக்கு தடை செய்யப்பட்ட பொருட்களை கொண்டு வருவது அதிகரித்துள்ளதாக இலங்கை சுங்கம் அவதானித்துள்ளது. அவ்வாறான பொருட்களிடையே தங்கம், சிகரெட், மருந்து வகைகள், அலங்கார தாவரங்கள் போன்ற மட்டுப்படுத்தப் பட்ட பொருட்கள் மற்றும் நாட்டில் அன்னிய செலாவணி பிரச்சினை காரணமாக இறக்குமதி செய்வது தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ள பண்டங்கள் அடங்குவதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. சில பயணிகளால் சுங்க கட்டளை சட்டம் மற்றும் ஏற்றுமதி இறக்குமதி( கட்டுப்பாடு) சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்டுள்ள ஒழுங்கு முறைகள் மீறப்படும் ரீதியில் வர்த்தக அளவில் பொருட்கள் கொண்டுவரப்படுவது அவதானிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்தே சுங்க திணைக்களம் இந்த அறிவித்தலை விடுத்துள்ளது.

ஜப்பானில் விசேட நிபுணத்துவ வேலைவாய்ப்பு

# ஐந்து வருடங்களில் 3,45,000 ஆட்சேர்ப்பு

*பாடசாலை மட்டத்தில் ஜப்பான் மொழிப் பயிற்சி - அமைச்சரவை தீர்மானம்*

**ஷம்ஸ் பாஹிம்**

அடுத்துவரும் 05 ஆண்டுகளில் விசேட நிபுணத்துவ வேலைவாய்ப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 3,45,000 தொழிலாளர்கள் ஆட்சேர்ப்புச் செய்வதற்கு ஜப்பான் திட்டமிடப்பட்டுள்ளதுடன், இலங்கை உள்ளிட்ட 07 நாடுகளுடன் ஜப்பான் ஒப்பந்தங்களை மேற்கொண்டுள்ளது.

இதனை இலக்கு வைத்து பாடசாலை மட்டத்தில் ஜப்பான் மொழித் தேர்ச்சி வழங்க அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

இலங்கை அரசுக்கும் ஜப்பான் அரசுக்குமிடையில் கையொப்பமிடப்பட்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பிரகாரம், தொழிநுட்ப சேவைக்காலப் பயிலுநர்களாக, விசேட நிபுணத்துவங்களுடன் கூடிய வேலைவாய்ப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 14 துறைகளில் தொழிலுக்கு விண்ணப்பிப்பதற்காக இலங்கையர்களுக்கு வாய்ப்புக் கிடைத்துள்ளது.

அதற்காக, ஜப்பான் மொழித் தேர்ச்சி கட்டாயமான தகைமையாக இருப்பதுடன், பல கட்டங்களாக நடத்தப்படும் பரீட்சைகள் மூலம் இத் தகைமையைப் பெற்றுக்கொள்ள வேண்டும். அடுத்து வரும் 05 ஆண்டுகளில் விசேட நிபுணத்துவ வேலைவாய்ப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 3,45,000 தொழிலாளர்கள் ஆட்சேர்ப்புச்





செய்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதுடன், இலங்கை உள்ளிட்ட 07 நாடுகளுடன் ஜப்பான் ஒப்பந்தங்களை மேற்கொண்டுள்ளது.

இவ் விடயங்களைக் கருத்தில் கொண்டு, தற்போது பாடசாலைகளில் நடைமுறைப்படுத்தப்படும் தொழிநுட்பவியல் பாடவிதானத்தின் கீழ் ஜப்பான் மொழி மற்றும் ஆங்கில மொழிக் கற்பித்தல் நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கும், ஜப்பான் வேலைவாய்ப்புக்களை இலக்காகக் கொண்ட பராமரிப்புச் சேவைகள், விருந்தோம்பல் சேவைகள், கட்டிடங்கள் தூய்மையாக்கல், விவசாய நடவடிக்கைகள், மோட்டார் வாகன தொழிநுட்பவியல் அல்லது மின்னியல் மற்றும் இலத்திரனியல் தொழிநுட்பத் துறைகளில் மென்திறன்களை விருத்தி செய்வதற்கும் தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

பாராளுமன்ற அசம்பாவிதங்கள்

# விசாரணை அறிக்கைகளை வெளிப்படுத்துவது அவசியம்

*சபாநாயகரிடம் எதிர்க்கட்சி கோரிக்கை*

**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**

பல்வேறு சந்தர்ப்பங்களில் பாராளுமன்றத்தில் இடம்பெற்றுள்ள அசம்பாவிதங்கள் தொடர்பான விசாரணை அறிக்கைகளை வெளிப்படுத்த சபாநாயகர் நடவடிக்கை எடுக்க வேண்டுமென எதிர்க்கட்சியினர் நேற்று சபையில் கோரிக்கை விடுத்தனர்.

அந்த அறிக்கைகளுக்கு என்ன நடந்தது அவை மறைக்கப்பட்டுள்ளனவா என கேள்வி எழுப்பிய அவர்கள் விரைவாக அதனை சபையில் வெளிப்படுத்த வேண்டும் என்றும் சபாநாயகரைக் கேட்டுக் கொண்டனர்.

அதேவேளை, பாராளுமன்றத்தில் இடம்பெற்ற ஜனாதிபதி தெரிவும் பாராளுமன்ற உறுப்பினர்களை அச்சுறுத்தி வாக்குகள் பெறப்பட்டதா? என்பது தொடர்பிலும் ஆராய வேண்டும் என்றும் எதிர்க்கட்சியினர் நேற்று சபையில் கேள்வி எழுப்பினர்.

பாராளுமளன்றம் நேற்று சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவின் தலைமையில் கூடியது. வழமையான நடவடிக்கைகளைத் தொடர்ந்து ஆளும் கட்சி உறுப்பினர்களான வசந்த யாப்பா அபேவர்தன, திலக் ராஜபக்ஷ ஆகியோர் தமது சிறப்புரிமை மீறப்பட்டமை தொடர்பில் சபையில் தெரிவித்தனர்.

இதன்போது அவர்கள், நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடி மற்றும் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணவும் நாம் அரசியல் தீர்மானம் ஒன்றை மேற்கொண்டிருந்தோம். அதன் காரணமாக எமக்கு பல்வேறு அச்சுறுத்தல்களை எதிர்கொள்ள நேர்ந்துள்ளன. அத்துடன் அது எமது கௌரவத்துக்கும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. சிலர் மிக மோசமான வார்த்தைகளால் எம்மை தொலைபேசி மூலம் திட்டித் தீர்த்தனரெனவும் குறிப்பிட்டனர்.

இதன்போது எழுந்த எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார, இந்த உறுப்பினர்களின் குற்றச்சாட்டு மிகவும்

06

சீனக் கப்பல் வருகை விவகாரம்

# இந்தியாவை பகைத்துக் கொள்ளும் வகையில் அரசு செயற்படக்கூடாது

*இராதாகிருஷ்ணன் எம்.பி சபையில் தெரிவிப்பு*

**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**



சீனக் கப்பல் விவகாரத்தில் இந்தியாவை பகைத்துக் கொண்டு சீனாவுக்கு ஆதரவளிக்கும் வகையில் அரசாங்கம் செயற்படக்கூடாதென இராதாகிருஷ்ணன் எம்.பி பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

சீனக் கப்பல் இலங்கைக்கு வருவதால் பூகோள ரீதியில் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொள்ள நேரிடுமென தெரிவித்துள்ள அவர், அந்த கப்பல் வருவதை தாமதப்படுத்தும் வகையில் அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் சபையில் கேட்டுக் கொண்டார்.

இந்தியா எமக்கு எப்போதும் உதவும் நாடு என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். அண்மைய பொருளாதார நெருக்கடி நிலையில் நான்கு பில்லியன் டொலர்களை இந்தியா இலங்கைக்கு உதவியுள்ளது என்பதையும் மறக்கக்கூடாது என்றும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரை மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கொள்கை விளக்க உரை மிகவும் சிறப்பானது. எனினும் அதனை முழுமையாக நடைமுறைப்படுத்த முடியுமா என்ற கேள்வியே எழுகின்றது. அவ்வாறு அதனை நடைமுறைப்படுத்தினால் நாட்டிற்கு சிறந்த எதிர்காலம் உள்ளது.

யாரால் அவர் ஜனாதிபதியாக வர முடிந்ததோ அவர்களுக்கு எதிராக அவர் செயற்பட்டு அவர்களை கைது செய்வதன் மூலம் அவர் சர்வதேச ரீதியாகவும் மனித உரிமை அமைப்புகளினது எதிர்ப்பையும் சம்பாதித்து வருகிறார்.

06

# கொ/தமிழ் சங்கத்தில் "அற்றைத்திங்கள்"

தமிழின் மூத்த படைப்பாளிகளும் தகைசான்ற ஆளுமைகளும். தமது வாழ்வியல் அனுபவங்கள், கலை, இலக்கிய நட்புஎழுகைகள், பண்பாட்டுத் தாக்கங்கள், படைப்பு முயற்சிகள் முதலியவற்றைப் பகிர்ந்து கொள்ளும் அற்றைத்திங்கள் நிகழ்வு நாளை (11) வியாழக்கிழமை மாலை 4.00 மணிக்கு கொழும்பு தமிழ் சங்கத்தில் நடைபெறவுள்ளது.

கொழும்புத் தமிழ்ச்சங்கத் தலைவர் சட்டத்தரணி நடராஜர் காண்டீபன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் கொழும்புத் தமிழ்ச் சங்க பேரவை உறுப்பினர் கலாபூஷணம் இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு உரை நிகழ்த்தவுள்ளார்.

# முச்சக்கரவண்டிகள் மேற்பார்வை; ஒரு மாத காலத்தில் புதிய திட்டம்

**ஷம்ஸ் பாஹிம்**

முச்சக்கரவண்டிகளை மேற்பார்வை செய்வதற்காக ஒரு மாத காலத்தினுள் திட்டமொன்றை முன்னெடுக்க இருப்பதாகவும் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் கீழ் சகல பயணிகள் போக்குவரத்து சேவைகளையும் மேற்பார்வை செய்ய உள்ளதாகவும் அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

முச்சக்கர வண்டிகளை மேற்பார்வை செய்வது தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளித்த அமைச்சர், ஆட்டோக்களில் ஒவ்வொரு அளவு கட்டணம் அறவிடப்படுவதோடு முறைகேடுகள் நடைபெறுவதாக முறைப்பாடுகள் கிடைத்து வருகிறது. மீற்றர் இன்றி ஓடுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. முச்சக்கர வண்டி உரிமையாளர்களுடன் கலந்துரையாடினோம்.

முச்சக்கர வண்டிகளை மேற்பார்வை செய்வதற்காக தனியார் பஸ்களை போன்று மேற்பார்வை நிறுவனமொன்று அவசியம். புதிய நிறுவனமொன்றை ஆரம்பிக்காது முச்சக்கர வண்டிகள் உட்பட சகல பயணிகள் போக்குவரத்து சேவைகளையும் மேற்பார்வை செய்வதற்காக தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவுக்கு வழங்க இருக்கிறோம்.இதற்காக சட்டத்தில் திருத்தம் செய்யப்படும். மோட்டார் சைக்கிள்கள் கூட சில நாடுகளில் பயணிகள் போக்குவரத்திற்கு பயன்படுத்தப்படுகிறது.

மாகாண பயணிகள் போக்குவரத்து ஆணைக்குழுக்களையும் பயன்படுத்தி முச்சக்கர வண்டிகளை முகாமைத்துவம் செய்யும் திட்டம் ஒரு மாதத்தில் முன்னெடுக்கப்படும் என்றார். (பா)



நீதி, சிறைச்சாலை, மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர், ஜனாதிபதி சட்டத்தரணி கலாநிதி விஜேயதாச ராஜபக்ஷவை சர்வகட்சி போராட்டக்காரர்கள் அமைப்பின் பிரதிநிதிகள் நேற்று (09) நீதியமைச்சில் சந்தித்து உரையாடினர். இச் சந்திப்பின் போது 22ஆவது திருத்தம் தொடர்பாக சர்வகட்சி போராட்டக்காரர்களால் முன்மொழியப்பட்ட 07 விடயங்கள் தொடர்பான யோசனைகளும் அமைச்சரிடம் கையளிக்கப்பட்டது.

**நாணய மாற்று**

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 246.73 | 258.44 |
| கனடியன் டொலர் | 276.09 | 289.20 |
| யூரோ | 361.55 | 376.29 |
| ஜப்பான் யென் | 2.5659 | 2.6696 |
| சிங்கப்பூர் டொலர் | 257.32 | 268.29 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 431.68 | 449.77 |
| சுவிஸ் பிராங்க் | 369.23 | 386.78 |
| அமெரிக்க டொலர் | 357.22 | 368.54 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரின் டினார் | 957.32 | கட்டார் ரியால் | 98.04 |
| குவைத் டினார் | 1,176.03 | சவூதி ரியால் | 95.99 |
| ஓமான் ரியால் | 937.45 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 98.26 |

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம் : 834

தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279

பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சுபகிருது வருடம் ஆடி மாதம் 25ஆம் நாள் புதன்கிழமை

ஹிஜ்ரி வருடம் 1444 முஹர்ரம் பிறை 11

## குறள் தரும் சிந்தனை



கற்றுக்கண் அஞ்சான் செலச்சொல்லிக் காலத்தால்
தக்கது அறிவதாம் தூது

கற்றறிவாளனாகவும், பகைவரின் கனல்கக்கும் பார்வைக்கு அஞ்சாதவனாகவும், உள்ளத்தில் பதியுமாறு உரைப்பவனாகவும், உரிய நேரத்தில் உணர வேண்டியதை உணர்ந்து கொள்பவனாகவும் இருப்பவனே சிறந்த தூதனாவான்.

## நெருக்கடி நிலைமை தணிவதில் துளிர்விடும் நம்பிக்கைகள்!

இலங்கை முகம் கொடுத்துள்ள பொருளாதார நெருக்கடி தணிய ஆரம்பித்துள்ளது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் இப்பொருளாதார நெருக்கடியை தணித்துக் கட்டுப்படுத்துவதற்கு முன்னெடுக்கப்பட்டு வரும் வேலைத்திட்டங்களின் பிரதிபலனாகவே இந்நிலைமை ஏற்பட்டு இருக்கின்றது என்பதில் ஐயமில்லை.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த மே மாதம் பிரதமராகப் பதவியேற்றதைத் தொடர்ந்து நாடு எதிர்கொண்டுள்ள தீவிர பொருளாதார நெருக்கடியை கட்டுப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை விரிவான முறையில் ஆரம்பித்தார். அவர் ஜனாதிபதியாகப் பதவியேற்றதும் அந்நடவடிக்கைகள் முழு அளவில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதன் பிரதிபலனாக, விலைக்குறைப்பும் பொருட்களைப் பெற்றுக் கொள்வதில் நிலவிய நெருக்கடிகளில் தணிவும் ஏற்பட்டிருப்பதை பரவலாக அவதானிக்க முடிகின்றது. குறிப்பாக வாரக்கணக்கில் சமையல் எரிவாயுவைப் பெற்றுக் கொள்வதில் நிலவிவந்த நெருக்கடி முடிவுக்குக் கொண்டு வரப்பட்டு, அதனை நெருக்கடிகள் இன்றி பாவனையாளர்கள் பெற்றுக் கொள்ளக் கூடிய நிலைமை ஏற்பட்டுள்ளது. அத்தோடு இந்த எரிவாயுக்கு நேற்றுமுன்தினம் நள்ளிரவு முதல் விலைக்குறைப்பும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன்படி 12.5 கிலோ கிராம் எடைகொண்ட எரிவாயு சிலிண்டர் ஒன்றுக்கு 246.00 ரூபாவும், 5 கிலோ கிராம் எடை கொண்ட எரிவாயு சிலிண்டர் ஒன்றுக்கு 99.00 ரூபாவும் 2.3 கிலோ கிராம் எடை கொண்ட சிலிண்டர் ஒன்றுக்கு 45.00 ரூபாவும் விலை குறைப்பு செய்யப்பட்டுள்ளது.

அதேபோன்று நாட்டில் இரண்டு மூன்று வாரங்கள் நிலவிய பெற்றோல், டீசல் இல்லாத நிலை தற்போது முடிவுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளதோடு, அவற்றுக்கும் விலைக்குறைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் எரிபொருள் பற்றாக்குறைக்கு மத்தியில் இடம்பெற்று வந்த எரிபொருளை அடிப்படையாகக் கொண்ட பலவித முறைகேடுகள் கியூ.ஆர் முறைமையின் ஊடாக கட்டுப்படுத்தப்பட்டுள்ளன. இம்முறைமை அறிமுகப்படுத்தப்பட்டதன் ஊடாக நாட்டில் எல்லா மட்டத்தினரும் எரிபொருளைப் பெற்றுக் கொள்ளக் கூடிய நிலைமை உருவாகியுள்ளது.

இதன் பயனாக எரிபொருளைப் பெற்றுக் கொள்வதற்காக நீண்ட வரிசைகளில் நாட்கணக்கில் எரிபொருள் நிரப்பும் நிலையங்களில் காத்திருக்க வேண்டிய நிலையும் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. அத்தோடு இந்த கியூ.ஆர். முறைமையின் ஊடாக எரிபொருளை பெற்று பதுக்கி அதிக விலைக்கு விற்பனை செய்யும் முறைகேடும் பெரிதும் குறைவடைந்துள்ளது. அதனால் கடந்த காலங்களைப் போன்று எரிபொருளைப் பெற்றுக் கொள்வதற்காக நாட்கணக்கிலும் நீண்ட வரிசைகளிலும் காத்திருப்போரின் எண்ணிக்கையும் பெரிதும் குறைவடைந்துள்ளது.

இவ்வாறான சூழலில் எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர, 'எரிபொருள் போதியளவில் இருப்பதால் வரிசைகளில் காத்திராமல் அதனைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

இதேவேளை, மின்வெட்டு நேரமும் ஒரு மணித்தியாலயத்தினால் குறைக்கப்பட்டு, பஸ் கட்டணமும் குறைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான நிலையில், தேநீரின் விலையையும் உணவுப் பொதியின் விலையையும் குறைப்பதற்கு அகில இலங்கை சிற்றுண்டிச்சாலைகள் உரிமையாளர்கள் சங்கமும் நடவடிக்கை எடுத்துள்ளது. பொருளாதார நெருக்கடிக்கு உள்ளாகியுள்ள நாட்டின் மக்கள் மத்தியில் புதிய நம்பிக்கையையும் எதிர்பார்ப்பையும் இவை ஏற்படுத்தியுள்ளன.

நாடு எதிர்கொண்டுள்ள தீவிர பொருளாதார நெருக்கடி தணிந்து வருவதை இவை அனைத்தும் வெளிப்படுத்தி நிற்கின்ற நிலையில், இப்பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு கோரிய ஆர்ப்பாட்டங்களும் கடந்த காலங்களைப் போன்றல்லாமல் பெரிதும் குறைவடைந்துள்ளன.

இவை அனைத்தையும் ஒட்டுமொத்தமாக எடுத்து நோக்கும் போது, நாடு கடந்த காலத்தில் எதிர்கொண்ட பொருளாதார நெருக்கடிகளை வெற்றிகரமாகக் கையாண்டு பெற்றுள்ள அனுபவமும் பரந்த அரசியல் அனுபவமும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு தற்போதைய நெருக்கடியையும் தணித்து வீழச்சி நிலைக்கு கொண்டு செல்ல பெரிதும் துணை புரிந்திருக்கின்றன என்பது தெளிவாகிறது. தீவிர பொருளாதார நெருக்கடிக்கு உள்ளாகியுள்ள நாட்டின் ஜனாதிபதி பதவியை ஏற்ற சில வாரங்களுக்குள் இவ்வாறான அடைவுகளை அடைந்து கொள்வதற்கு அவரது அனுபவமும் ஆளுமையுமே பக்கபலமாக அமைந்திருக்கின்றன.

அதன் காரணத்தினால் நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடியைத் தணித்து கட்டுப்படுத்துவதற்கும் பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்டெடுப்பதற்கும் ஜனாதிபதி முன்னெடுக்கும் நடவடிக்கைகளுக்கும் வேலைத்திட்டங்களுக்கும் ஆதரவும் ஒத்துழைப்பும் நல்கப்பட வேண்டும். பாரம்பரிய அரசியல் பாரம்பரியத்துக்கும், கட்சி அரசியல் பேதங்களுக்கு அப்பாலும் எல்லா தரப்பினரும் ஒன்றுபட்டு நாட்டை மீட்டெடுக்க வேண்டும். அதற்கான தேவை மேலெழுந்துள்ள காலமிது. இன்றைய அவசரத் தேவையும் அதுவேயாகும். அதனால் மக்களினதும் நாட்டினதும் நலன்களை முன்னிலைப்படுத்தி செயற்பட வேண்டியது ஒவ்வொருவரதும் பொறுப்பாகும்.

editor.tkn@lakehouse.lk

# நாட்டின் நெருக்கடியைத் தீர்ப்பதற்கான வல்லமை படைத்தவர் ஜனாதிபதி ரணில்

## அனைவரையும் வெளியேறுமாறு கூறினால் நாட்டின் பிரச்சினையைத் தீர்ப்பது யார்?

## பேராதனை பல்கலைக்கழக முகாமைத்துவ பீடாதிபதி பேராசிரியர் மில்டன் ராஜரத்ன பேட்டி



நாட்டின் இன்றைய நெருக்கடியைத் தீர்க்கும் வல்லமை உள்ளவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க என்று கூறுகின்றார் பேராதனை பல்கலைக்கழக முகாமைத்துவ பீடாதிபதி பேராசிரியர் மில்டன் ராஜரத்ன.

கேள்வி: தற்போதைய பொருளாதார பிரச்சினைக்கான தீர்வை விரைவாக எதிர்பார்க்க முடியுமா? முடிவுக்கு வர எவ்வளவு காலம் எடுக்கும்?

பதில்: தற்போதைய சமூகம் நகர்வை அடிப்படையாகக் கொண்ட சமூகமாகும். மக்கள் தொழிலுக்காக, சந்தை தேவைகளுக்காக இடத்துக்கிடம் பயணம் செய்ய வேண்டியுள்ளது. எரிபொருள் பிரச்சினை காரணமாக அது பாதிப்படைந்துள்ளது. அதனால் ஏற்பட்ட நிலைமை மக்களின் வருமானம் மற்றும் நுகர்வுக்கு பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

மக்களின் நடைமுறை வாழ்க்கை மிகக் குறுகிய காலத்தில் வீழ்ச்சியடைந்துள்ளது. மீண்டும் விரைவாக பழைய நிலைமைக்கு திரும்புவதே அவர்களின் எதிர்பார்ப்பாகும். அது இயற்கையே.

ஜப்பான் போன்ற நாடுகளில் இவ்வாறான சந்தர்ப்பங்களில் அவர்கள் இவ்விதம் நடந்து கொள்ள மாட்டார்கள். அவர்கள் மிகவும் பொறுமையாக செயல்படக் கூடியவர்கள். பிரச்சினை ஏற்பட்ட வேகத்தில் தீர்வு கிடைக்காது என அவர்கள் அறிவார்கள். அவர்கள் அவ்வாறான சந்தர்ப்பங்களில் அரசாங்கத்துடன் இணைந்து செயல்படுவார்கள். இலங்கையின் தன்மை வேறானது. அவர்கள் அரசாங்கத்தை கவிழ்ப்பதன் மூலமோ அல்லது வீடுகளை எரிப்பதன் மூலமோ அதை நிறைவேற்றிக் கொள்ள முடியும் என எதிர்பார்க்கின்றார்கள். அனைவரையும் வெளியேறுமாறு கூறினால் பிரச்சினையை தீர்க்க யாருமில்லை.



கேள்வி: ரணில் விக்கிரமசிங்க தலைமைக்கு வருகின்ற எல்லாச் சந்தர்ப்பங்களிலும், அவர் மக்களை இடுப்புப் பட்டியை இறுக்கிக் கொள்ளுமாறு கூறுகிறார் என குற்றச்சாட்டு எழுகிறதல்லவா?

பதில்: நாடு இவ்வாறு வீழ்ச்சி அடைந்தமைக்கு காரணம் பொருளாதார நிலைமையை சரியாக வெளிப்படுத்தாமையாகும். இன்றைக்கு இரண்டு வருடங்களுக்கு முன்னர் 'எமது பொருளாதார அடிப்படை மிகவும் வலுவானது' என முன்னாள் மத்திய வங்கி ஆளுநர் லக்ஷ்மன் தெரிவித்தார். அதற்குப் பின்னர் வந்த கப்ரால் 'எம்மிடம் கடனை செலுத்த போதுமான அளவு கையிருப்பு உள்ளது' எனக் கூறினார்.

ஆனால் ரணில் விக்கிரமசிங்க 2015 இல் உண்மையைக் கூறினார். அவ்வேளையில் அரசாங்கத்தின் வருமானம் மிகவும் குறைந்த மட்டத்தை அடைந்திருந்தது. 'இடுப்புப் பட்டியை இறுக்கிக் கொள்ளுங்கள்' என்று அவர் மக்களிடம் கூறினார். அரச வருமானம் மற்றும் செலவுக்கிடையான இடைவெளி 1:2 அளவில் காணப்பட்டது.

அரசு ஊழியர்களுக்கு சம்பளத்தை கூட செலுத்த முடியாத அரசாங்கமே அன்று அவருக்குக் கிடைத்தது. இன்றைய நிலைமை போன்றுதான் காணப்பட்டது. அவர் வரியை அதிகரித்து அரச வருமானத்தை உயர்த்தினார். அவர் அரசாங்கத்தை பொறுப்பேற்ற இரண்டு வருட காலத்துக்குள் அரசின் நடப்புக் கணக்கை அதிகரித்துக் கொண்டார். அவ்வேளையில் பொருட்களின் விலை அதிகரித்திருக்கவில்லை. பொருட்களும் தட்டுப்பாடின்றிக் கிடைத்தன.

எம்மிடம் அந்நிய செலாவணி கையிருப்பு இல்லை. அதன் காரணமாக இறக்குமதி செய்யக் கூடிய நிலைமை இல்லை. இதுவே யதார்த்தம். யதார்த்தத்தை ஏற்றுக் கொள்ளாமல் பிரச்சினைக்கு விடை காண முடியாது. ஜனாதிபதி இந்த சிரமமான நிலைமையை மறைக்காது கூறினார். அதேவேளை அவர் அதற்கான தீர்வு யோசனைகளையும் தெரிவித்துள்ளார்.

கேள்வி: மத்திய வங்கி அந்நிய செலாவணி பரிமாற்று வீதத்தை சுதந்திரமாக முடிவு செய்ய இடமளித்தாலும் அந்நிய செலாவணி கையிருப்பு அதிகரிக்கவில்லை. இவ்வாறான பொறிமுறை முற்றாக வெளியேறும் வரை நாட்டிற்கு பணம் அனுப்புவது இல்லை என வெளிநாட்டில் உள்ள சில பணியாளர்கள் கூறுகின்றார்கள். இது பற்றிய உங்களது கருத்தென்ன?

பதில்: முன்னாள் மத்திய வங்கி ஆளுநர் தொலைநோக்கற்று எடுத்த முடிவு காரணமாகவே இந்தப் பிரச்சினை ஏற்பட்டது. நாட்டில் பணம் இல்லாத போது பலாத்காரமாக டொலரின் பெறுமானத்தை 202 வீதமாக வைத்திருந்ததால் கறுப்புச்சந்தையில் அதன் வீதம் 260 வரை சென்றது. வங்கியிடமிருந்து அந்த வீதம் கிடைக்கவில்லை. இந்தச் சந்தை எதிர் விளைவை மத்திய வங்கியோ, நிதி அமைச்சரோ அறிந்திருக்கவில்லை. ரூபாவை உடனடியாக மிதக்க விட்டதால் பெருமளவு பணவீக்கம் ஏற்பட்டது. விலை மட்டமும் அதிகரித்தது.

ஆட்சியைக் கைப்பற்றும் எண்ணத்தில் உள்ளவர்களுக்கு எவ்விதத்திலாவது பொருளாதாரத்தை வீழ்த்த வேண்டிய தேவை உள்ளது. அந்நிய செலாவணி அதற்காக பயன்படுத்தப்பட்ட முக்கிய ஆயுதமாகும். முன்னர் மாதம் ஒன்றிற்கு 500 மில்லியன் டொலர் தொடக்கம் 600 மில்லியன் டொலர் வரை கிடைத்தது. ரூபாவை பலாத்காரமாக பிடித்து வைத்ததால் டொலர் களவாக நாட்டிற்குள் வரத் தொடங்கியது. தற்போது அதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வெளிநாட்டில் வசிப்பவர்கள் அதிகளவு பணத்தை பெறுவதற்காக களவாக பணத்தை அனுப்புகிறார்கள். அவர்கள் அவ்வாறு பணத்தை அனுப்புவது ஆர்ப்பாட்டக்காரர்களின் வேண்டுகோளுக்கல்ல. வெளிநாடுகளுக்கு வேலைவாய்ப்பினை பெற்று சென்றுள்ள அநேகமானோருக்கு இலங்கைக்கு காசு அனுப்பாமல் இருக்க முடியாது. அவரது குடும்பத்தவர்கள் அவர் அனுப்பும் பணத்திலேயே தங்கியுள்ளார் கள். வெளிநாடு சென்றவர்களில் சிலரில் அடிப்படைவாதிகள் இருக்கலாம். தற்போது அதிகளவு ரூபாய் கிடைப்பதால் எதிர்காலத்தில் டொலர் பிரச்சினைக்கு தீர்வு கிடைக்கும்.

கேள்வி: சர்வ கட்சி அரசாங்கம் அமைக்கும் முயற்சி எவ்விதத்தில்லாவது தோல்வி அடைந்தால், கடன் மீளமைப்புக்கு பாதிப்பை ஏற்படுத்துமா?

பதில்: அழுத்தம் இல்லை என்று கூற முடியாது. ஆனால் ஜனாதிபதிக்கு பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவு கிடைத்துள்ளது. சர்வதேசம் எதிர்பார்க்கும் அனுபவம் மற்றும் அரசியல் ஈடுபாடு ரணிலுக்கு அதிகமாக உள்ளது. சர்வதேச சமூகத்துடன் நடவடிக்கைகள் ஈடுபடும் திறமை உள்ளது. அவர் ஜனநாயகவாதி.

**சந்தன ஜயவீர...**
தமிழில்: வீ.ஆர். வயலட்

# பூநகரி பிரதேசத்தில் முன்பள்ளிச் சிறார்கள் ஆயிரம் பேருக்கு போசாக்குணவு விநியோகம்

## IMHO–USA, Ratnam Foundation–UK அமைப்புக்களின் நிதிப்பங்களிப்பில் செயல்திட்டம்

நாட்டில் தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடி காரணமாக முன்பள்ளிச் சிறார்களில் பெரும்பாலானோர் போசாக்கு இன்றி பாதிக்கப்பட்டுள்ளதோடு, அவர்களது வரவும் முன்பள்ளிகளில் குறைந்து செல்கின்றது என்ற ஆதங்கம் பலராலும் முன்வைக்கப்பட்டுள்ளது.

இந்த இக்கட்டான சூழ்நிலையை கருத்தில் கொண்டு கிளிநொச்சி தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளரின் கோரிக்கைக்கு அமைவாக பூநகரி பிரதேசத்திலுள்ள 51 முன்பள்ளிகளில் பயின்று வரும் 1000 சிறார்களுக்கு போசாக்கு உணவு வழங்கும் செயற்பாடு IMHOUSA மற்றும் Ratnam Foundation UK அமைப்புகளால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நாள்தோறும் வழங்கப்பட வேண்டிய உணவு பற்றிய அறிவுறுத்தல்கள் முன்பள்ளி ஆசிரியர்களுக்கு முன்பள்ளிக்கு பொறுப்பான உதவிக் கல்வி பணிப்பாளரினால் வழங்கப்பட்டுள்ளன. நெத்தலி, மரக்கறி வகைகள், முட்டை மற்றும் தானியங்கள் சேர்ந்ததான உணவு மற்றும் பசும்பால், பழவகைகளையும் சேர்க்க அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

இதன் ஆரம்ப வைபவம் சில தினங்களுக்கு முன்னர் அடைக்கல அன்னை(பூநகரி) மற்றும் மழலைகள் (வடபூநகரி) முன்பள்ளிகளில் சம்பிரதாய பூர்வமாக IMHO அமைப்பின் வதிவிட பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமாரினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வுகளில் முன்பருவ பிள்ளை பிரிவு உதவிக்கல்விப் பணிப்பாளார் க.யுவராசா, அருட்தந்தை அஜித் துலக்சன் அடிகளார், பூநகரி பிரதேச செயலக சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர் மற்றும் இணைப்பாளர்கள், பெற்றோர் கலந்து கொண்டிருந்தனர். போசாக்கு உணவின் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வும் பெற்றோருக்கு வழங்கப்பட்டது.

இறுதியில் IMHOUSA அமைப்பின் தலைவர் வைத்திய கலாநிதி திருமதி ராஜம் தெய்வேந்திரம் மற்றும் Ratnam FoundationUK அமைப்பின் ஸ்தாபகரும் அதன் தலைவருமான கலாநிதி இரத்தினம் நித்தியானந்தன் போன்றோரது அர்ப்பணிப்பானதும் மனிதநேயம் மிக்கதுமான அனைத்து செயல்பாடுகளுக்கும் மனப்பூர்வமான நன்றி தெரிவிக்கப்பட்டது.









# பெண் தலைவிகளின் முன்மொழிவுகளை விளக்கும் நிகழ்வு

'பெண்கள் மற்றும் பிள்ளைகளை சமாதான நல்லிணக்க செயட்பாடுகளில் வலுப்படுத்தல்' (WAGE) எனும் திட்டத்தின் செயற்பாடுகளில் ஒன்றான 'கூட்டிணைந்த செயற்திட்டத்துக்காக' (Collaborative action plan) பயிற்றப்பட்ட பெண் தலைவிகளால் எழுதப்பட்ட திட்ட முன்மொழிவுகளை, பல தரப்பட்ட பங்குதார குழு (Multi Stake Holders Working Group ) உறுப்பினர்களுக்கு விரிவாக விளக்கும் நிகழ்வு சமீபத்தில் கல்முனை ஹோட்டலில் இடம்பெற்றது.

'சேர்ச் ஃபோர் கொமன் கிரவுன்ட்' (Search for common ground) நிதி நிறுவனத்தின் அனுசரணையுடன் அக்கரைப்பற்றை தளமாகக் கொண்டியங்கும் 'பாதிக்கப்பட்ட பெண்கள் அரங்கு' (AWF) நிறுனத்தால் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

ஐந்து பிரதேச செயலாளர் பிரிவுகளில் அமைக்கப்பட்டுள்ள கிராம மட்ட கழக உறுப்பினர்களால் (WILL) இந்தத் திட்ட முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டன. இந்த நிகழ்வில் 'சேர்ச் ஃபோர் கொமன் கிரவுன்ட்' (Search for common ground) நிறுவன ஆலோசகர் நளினி ரெட்னராஜா, கண்காணிப்பு முகமையாளர் சதாத் மொஹமட், கிரமீன் பௌண்டேசன் இந்தியா (GRAMEEN FOUNDATION INDIA) நிறுவன வியாபார திட்ட ஆலோசகர் கே. சுபாஜினி, 'பாதிக்கப்பட்ட பெண்கள் அரங்கு' நிறுவன இணைப்பாளர் வாணி சைமன், 'பெண்கள் மற்றும் பிள்ளைகளை சமாதான நல்லிணக்க செயட்பாடுகளில் வலுப்படுத்தல்' (WAGE) திட்ட இணைப்பாளர் கமலவாணி சுதாகரன் மற்றும் பிரதேச சபைகளின் பெண் உறுப்பினர்கள், சிவில் சமூக பெண்கள், சமூக மட்ட தலைவர்கள், அரச – அரச சார்பற்ற மேல்நிலை உத்தியோகத்தர்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் சமயத் தலைவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.



**றிசாத் ஏ.காதர்...**
(ஒலுவில் மத்திய விசேட நிருபர்)

# மாணவர்கள் மத்தியில் நிலவுகின்ற பிரதான பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பது எவ்வாறு?

**இன்று பாடசாலையானது மிகப் பெரிய நிறுவனமாக வளர்ந்திருப்பதுடன் அது பாரிய சவால்களுக்கும் முகம்கொடுத்து வருகின்றதை அவதானிக்க முடிகின்றது. இவ்வேளையில் பாடசாலையிலுள்ள மாணவர்கள் பல்வேறுபட்ட பிரச்சினைகளுக்கு உள்ளாகி வருகின்றமை துரதிர்ஷ்டவசமான நிலையாகும். இதிலிருந்து மீள்வதற்கு பல்துறைசார்ந்த செயற்பாடுகள் தேவைப்பாடாகக் காணப்படுகின்றன.**



குறிப்பாக unicef நிறுவனம் கொவிட் தொற்றுக்குப் பிறகு கல்வித்துறை சாரந்த பல்வேறு ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்ற நிலையில், பாடசாலை மட்டத்தில் பிரதானமாக ஆறு பிரச்சினைகள் பிள்ளைகள் மத்தியில் உருவாகியுள்ளன என்பதை தெளிவாக இனங்கண்டுள்ளனர். ஒவ்வொரு பிரச்சினையிலும் மாணவர்கள் சாதாரண நிலை, தீவிர நிலை மற்றும் அதிதீவிர நிலைகளில் காணப்படுகின்றார்கள் என்றும் அந்த ஒவ்வொரு நிலையிலும் அதன் தாக்கவீத அளவு வேறுபடுகின்றது என்பதையும் கண்டறிந்துள்ளனர்.

அதற்காக அவர்களை எவ்வாறு உளவளத்துணை ஆலோசனையின் அடிப்படையில் மீட்டெடுக்கலாம் என்பது தொடர்பாக மிக ஆழமான செயற்பாடுகளை இனங்காட்டியுள்ளனர். இதனை பாடசாலை சமூகம் சரியாக நடைமுறைப்படுத்துமாக இருந்தால் அனைத்து மாணவர்களையும் பல்வேறுபட்ட பிரச்சினைகளிலிருந்து மீளக் கட்டியெழுப்பலாம்.

அவ்வறிக்கையில் பாடசாலையில் கொரோனாவுக்கு பின்னராக பிரதானமாக பாடசாலை வரவின்மை, குறைந்த கல்விமட்ட அடைவு, மனநல சிக்கல்கள், ஒழுக்காற்றினை மேம்படுத்தல், சுகாதார பிரச்சினைகள் மற்றும் தொழில்நுட்பத்திற்கு அடிமையாதல் என்ற 6 பிரதான பிரச்சினைகளை இனங்கண்டு அதற்கான தீர்வும் வழங்கப்பட்டுள்ளது.

பாடசாலைகளில் மிகமுக்கியமான பிரச்சினைகளில் ஒன்றாக குறைந்த கல்விமட்ட அடைவு காணப்படுகின்றது. இந்நிலையில் அதனைத் தீர்ப்பதற்கான முறையான வேலைத்திட்டம் செய்தால்

இப்பிரச்சினையை இலகுவாக தீர்த்துக் கொள்ளலாம். இன்று மாணவர்கள் மத்தியில் அதிக தாக்கம் செலுத்தும் பிரச்சினையாக மனநல சிக்கல் காணப்படுகின்றது. இப்பிரச்சினையிலும் பாடசாலைகளில் மூன்று நிலைகளிலும் காணப்படுகின்றார்கள். உளவளத்துணையை மேற்கொள்ளுதல், பெற்றோர் கூட்டம், வகுப்பாசிரியர், பாடஆசிரியர், வழிகாட்டல் ஆலோசனை பொறுப்பான ஆசிரியர், உளவளத்துணை இணைந்த பெற்றோர் கூட்டம் ஒன்றை ஏற்பாடு செய்தல் என்பன அவசியமாகின்றன.

15 நிமிடங்கள் தனிப்பட்ட வகுப்புக்கள் எடுத்தல், பெற்றோர் கூட்டம், வழிகாட்டல் ஆலோசனை, பரிந்துரைகள் வழிகாட்டல் அவசியம்.

பாடசாலைகளில் அதிதீவிர பிரச்சினையாக தற்காலத்தில் பார்க்கப்படுவதில் ஒழுக்காற்று பிரச்சினையும் மிகமுக்கியமானதாக காணப்படுகின்றது. இது பாடசாலைகளில் மாணவர்கள் மத்தியில் தற்காலத்தில் பல்வேறு வகைகளில் தாக்கம் செலுத்தி வருகின்றது. கொரோனாவுக்கு பின்னரான காலப்பகுதியில் வீட்டிலும் சரி பாடசாலையிலும் சரி பல்வேறுபட்ட சுகாதார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பாடசாலையிலும் சுகாதாரம் தொடர்பான பல்வேறுபட்ட பிரச்சினைகள் உருவாகியுள்ளன. இதனை நிவர்த்தி செய்தால்தான் பாடசாலையை இயக்க முடியும். அந்த வகையில் பாடசாலை மாணவர்கள் மத்தியில் சுகாதாரம் தொடர்பான பல்வேறுபட்ட பிரச்சினைகள் உருவாகியுள்ளன. அதனை நிவர்த்திப்பதற்கு பல்வேறு படிமுறைகளை செய்து கொள்ள முடியும்.

தற்காலத்தில் பாடசாலை மாணவர்கள் தொழில்நுட்ப கருவிகளை கையாளத் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற நோக்கில் பாடசாலையில் கலைத்திட்ட செயற்பாட்டு வேலைகள் பல்வேறு வழிமுறைகளில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றனது. விரும்பியோ விரும்பாமலோ இன்று இப்பிரச்சினைக்கு வீடு, பாடசாலை, சமூகம், தனிப்பட் நபர்கள் ஆளாகியுள்ளனர். அதிலும் குறிப்பாக பாடசாலை மாணவர்கள் தற்காலத்தில் செய்யப்படுகின்றன *zoom class, whats app, youtube* போன்றவற்றின் காரணமாக ஏதோவொரு வகையில் பாதிக்கப்பட்டுள்ளனர். இப்பாதிப்பு

சாதாரண நிலை, தீவீர நிலை, அதிதீவீர நிலைக்கு இட்டுச் செல்வதை காணமுடியும். இதனை ஒவ்வொரு கட்டத்திலும் தவிர்ப்பதற்காக பல்வேறு முறைகள் அமுல்படுத்தப்படுகின்றது. குறிப்பாக 80 வீதமான மாணவர்கள் சாதாரண நிலையில் பாதிக்கப்படுகின்றனர்.

இவர்களை அதிலிருந்து மீட்டெடுப்பதற்காக மேற்பார்வை ஊடான நிகழ்நிலை நேரம், பெற்றோர் கட்டுப்பாட்டு முறை, தொழில்நுட்பம் இல்லாத மணித்தியாலயம், முழு வகுப்பு கலந்துரையாடல் மற்றும் பெற்றோர் ஆதரவு இவைகளை செய்ய முடியும்.

அதேமாதிரி 15 வீதமான மாணவர்கள் இப்பிரச்சினையில் தீவீர நிலையில் இருந்தால் அவர்களை அதிலிருந்து விடுவிப்பதற்காக சிறிய குழு ஆதரவு, எழுத்து மூலமான ஆதரவு மற்றும் பெற்றோர் கூட்டம் என இந்த வழிமுறைகளை செய்து கொள்ள முடியும். அதேமாதிரி 5 வீதமான மாணவர்கள் இப்பிரச்சினையில் அதிதீவீர நிலையில் காணப்படுவார்கள் அவர்களை அதிலிருந்து விடுவிப்பதற்காக வீடு – பாடசாலை திட்டம், தனிப்பட்ட உளவளத்துணை மற்றும் பரிந்துரைகள் போன்றவற்றை செய்வதன் மூலம் இதனை நிவர்த்திக்க முடியும்.

மேற்கூறப்பட்ட பிரதான பிரச்சினைகளுக்கு பாடசாலை மட்டத்தில் ஆசிரியர் மற்றும் அதிபர் குழாத்தினர் மிகக் கரிசனையோடு ஈடுபடுவார்களாக இருந்தால் சிறந்ததொரு பாடசாலையை உருவாக்கிக் கொள்ள முடியும். இல்லாத பட்சத்தில் அது பாரிய பிரச்சினைகளை தோற்றுவிக்கும் என்பது நிதர்சனமாகும்.

**A.W.Mohamed Kiyas...**
BA (Hons)

# கும்பல் பெரஹறா ஊர்வலத்துக்கு தாயுடன் சென்ற குழந்தையைக் கடத்திய இளைஞர்!

**கண்டியில் நடைபெற்ற எசல பெரஹறாவின் இரண்டாவது கும்பல் பெரஹறா ஊர்வலத்தைக் காண்பதற்கு தனது தாயுடன் சென்ற குழந்தையைக் கடத்தியதாகக் கூறப்படும் நபர் கண்டி நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டதன் பின்னர் எதிர்வரும் 19 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.**

கண்டி, அகஸ்டாவத்த பகுதியைச் சேர்ந்த 30 வயதுடைய நபர் ஒருவரே இவ்வாறு சந்தேகத்தின் பேரில் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார். விளையாட்டுப் பொம்மைகளை எடுத்து வருவதற்காக குழந்தையை அழைத்துச் சென்றதாக சந்தேக நபர் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

இது இவ்வாறிருக்க, குறித்த நபர் இதற்கு முன்பும் ஒரு குழந்தையைக் கடத்த முயன்றுள்ளார் என பொலிஸாருக்கு தகவல் கிடைத்துள்ளது.

சந்தேக நபர், கடந்த 5 ஆம் திகதி குறித்த குழந்தையுடன் கொழும்பு கோட்டையில் இருந்து அவிசாவளை நோக்கி ரயிலில் பயணம் செய்து கொண்டிருந்த வேளையில், குழந்தை தனது தாயிடம் செல்ல விரும்புவதாகக் கூறி ரயிலில் இருந்து குதிக்க முற்பட்டுள்ளது.

அவ்வேளையில் அக்குழந்தையின் நடவடிக்கைகள் குறித்து கவனம் செலுத்திய பயணிகள், அக்குழந்தையிடம் விபரங்களைக் கேட்டுள்ளனர். அதன் போது பயணிகளுக்கு அந்த இளைஞர் மீது சந்தேகம் தோன்றியுள்ளது. அந்த இளைஞர் ரயிலில் வைத்து பயணிகளால் பிடிக்கப்பட்டு மஹரகம பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

இதன் பின்னரே அக்குழந்தை கடத்தப்பட்ட விடயம் தெரியவந்துள்ளது.

கண்டி மணிக்கூண்டுக் கோபுரத்திற்கு அருகாமையில் நின்று கொண்டிருந்த பொழுது குறித்த சந்தேக நபர் குழந்தையுடன் பேச பல தடவைகள் தொடர்பு கொள்ள முயற்சித்ததாக குழந்தையின் தாய் அனோமா தில்ருக்ஷி பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

மேலும் குறித்த நபரின் சந்தேகத்திற்கிடமான நடத்தை காரணமாக, தனது கையடக்கத் தொலைபேசியிலிருந்து அவரை வீடியோ எடுத்து மேலதிக விசாரணைக்காக பொலிஸாரிடம் அந்த வீடியோவை ஒப்படைத்ததாகவும் தாய் தெரிவித்துள்ளார்.

குழந்தையின் தாய், கண்டி மாநகரசபையில் கூலித் தொழிலாளியாக பணிபுரிகிறார். இரண்டாம் நாள் உற்சவ ஊர்வலம் முடிந்ததும் கண்டி மணிக்கூண்டுக்கு அருகில் வெற்றிலை விற்றுக் கொண்டிருந்த தனது அம்மாவின் அருகில் குழந்தையை நிறுத்திவிட்டு, மாநகர சபைக்குச்



சென்ற போது சந்தேகநபர் குழந்தையை கடத்தி சென்றுள்ளதாக விசாரணைகளிலிருந்து தெரிய வந்துள்ளது.

குழந்தையை மருத்துவ பரிசோதனைக்கு அனுப்ப பொலிஸார் நடவடிக்கை எடுத்திருந்தனர். இது தொடர்பான விசாரணைகள் நடைபெற்று வருகின்றன.

## கொழும்பிலிருந்து அவிசாவளை சென்ற ரயிலுக்குள் வைத்து கைது!

**எம்.ஏ.அமீனுல்லா...**





# தம்பல்கொடவில் புதிய தொடர்பாடல் கோபுரம்

**நாடு முழுவதிலும் உள்ள கிராமங்கள் மற்றும் தொலைதூர கிராமப்புற சமூகங்களுக்கு தொடர்பாடல் இணைப்பை விரிவுபடுத்தும் தனது உறுதிமொழியை நிலைநிறுத்தி, இலங்கையின் மிகப்பெரிய வலையமைப்பான டயலொக் ஆசிஆட்டா பி.எல்.சி அதன் 'நாற்திசையும் டயலொக் ' செயற்திட்டத்தின் கீழ் கேகாலை மாவட்டத்தில் உள்ள தம்பல் கொட கிராமத்தில் ஒரு தொடர்பாடல் கோபுரத்தை அண்மையில் நிறுவியது.**



நாட்டின் ஒவ்வொரு மூலையிலும் மேம்படுத்தப்பட்ட இணைப்புடன் இலங்கையரின் வாழ்வை வலுவூட்டும் மற்றும் வளப்படுத்தும் பயணத்தில், கேகாலை மாவட்டத்தில் உள்ள மலல்பொல மற்றும் முவாப்பிட்டிய கிராமங்களிலும் மேலதிக தொலைத் தொடர்புக்கோபுரங்களுடன் தம்பல்கொடவில் புதிய கோபுரம் நிறுவப்பட்டுள்ளது. காலி மாவட்டத்தில் தவலம, டொரல மற்றும் பின்கந்த மற்றும் களுத்துறை மாவட்டத்தில் அதிகாரிகுடா ஆகிய இடங்களிலும் தொலைத்தொடர்புக் கோபுரங்கள் நிறுவப்பட்டுள்ளன.

இந்த நெருக்கடியான காலங்களில் வலையமைப்பை விரிவுபடுத்துவதற்கும் வாடிக்கையாளர்களுக்கு ஆதரவளிப்பதற்குமான தன்னுடைய தொடர்ச்சியான முயற்சிகள் மூலம், 2022 ஏப்ரலில் டயலொக் தன் வலையமைப்பில் 4550 மொபைல் 4G தளங்களை அடைந்துள்ளது, இது இலங்கையிலே பதிவு செய்யப்பட்ட மிக உயர்ந்த கோபுர எண்ணிக்கையாக அமைகிறது.

டயலொக் 95% 4G டேட்டா மக்கள் தொகை கவரேஜை பெற்றுள்ளதுடன் அதன் கவரேஜை விரைவாக விரிவடையச் செய்வதில் *Green field* கோபுரங்களைப் பயன்படுத்தி, தொலைதூர கிராமப்புற சமூகங்களைச் சென்றடைகிறது. மேலும் செறிவான பகுதிகளில் அவசரத் திறன் தேவைகளைப் பூர்த்தி செய்ய *Lamp pole* தீர்வுமுறையை கையாள்கிறது.

தனது கவரேஜ் தடத்தை மேம்படுத்துவதற்கான *Dialog* இன் அர்ப்பணிப்பு, வலையமைப்பு பரிசோதனையில் உலகளாவிய அளவில் முன்னணியில் உள்ள நிறுவனங்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது, இதன் தொடர்ச்சியாக *Open Signal* ஆனது 'சிறந்த 4G கவரேஜ் அனுபவம்' மற்றும் 'வேகமான பதிவேற்றம் மற்றும் பதிவிறக்க வேக அனுபவம்' ஆகிய விருதுகளை வழங்கியுள்ளது.



# சன்மார்க்க அறிஞர் ஹாசீம் மௌலவியின் மறைவு முஸ்லிம் சமூகத்துக்கு பேரிழப்பு

**தும்புளுவாவ ஜமாஅத்தைச் சேர்ந்தவரும், ஹெம்மாதகம ஜம்இய்யதுல் உலமாசபையின் முன்னாள் உபதலைவரும், ஓய்வு பெற்ற அதிபருமான ஹாசீம் மௌலவி (வயது 88) கடந்த திங்கட்கிழமை (08) காலமானார். தும்புளுவாவை கிராமத்தில் 1934 ஆம் ஆண்டு பிறந்த ஹாசீம் ஆலிம், காலி பஹ்ஜத்துல் இப்ராஹிமிய்யா அரபுக் கல்லூரியில் 1958 ஆம் ஆண்டு சன்மார்க்கக் கல்வியைக் கற்று மௌலவி பட்டம் பெற்றார்.**

அன்னாரது மறைவு குறித்து ஹெம்மாதகம ஃபோரம் விடுத்துள்ள அனுதாபச் செய்தியில்

'ஹெம்மாதகமை பிரதேசத்திலும் மற்றும் இலங்கைத் தீவின் பல்வேறு பகுதிகளிலும் பொதுவாகவும் சன்மார்க்கப் பணியில் ஈடுபடக் கூடிய உலமாக்களை உருவாக்குவதற்காக 1970 களின் ஆரம்பத்தில் ஓலனையில் உருவாக்கப்பட்ட ஸஹ்ரிய்யா அரபுக் கல்லூரியினதும், ஹெம்மாதகம ஜம்மிய்யதுல் உலமா அமைப்பினதும் ஸ்தாபக உறுப்பினராகவும் அதன் ஸ்தாபகச் செயலாளராகவும் பல ஆண்டுகள் பணிபுரிந்து சமய சன்மார்க்க வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றிய எம். எச். எம். ஹாசீம் மௌலவியின் மறைவையிட்டு ஹெம்மாதகம போரம் தமது மிகுந்த கவலையைத் தெரிவித்துக் கொள்கிறது' எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பயிற்றுவிக்கப்பட்ட ஆசிரியராகவும் பாடசாலை அதிபராகவும் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் கடமையாற்றிய ஹாசீம் ஆலிம், இறுதியாக கொழும்பு சாஹிரா கல்லூரியில் பணியாற்றி, 2002 இல் ஓய்வு பெற்றார். பல வருட காலங்கள் கிராமத்திற்கு வெளியே பணியாற்றினாலும், தும்புளுவாவை பள்ளிவாசல் உருவாக்கப்பட்ட ஆரம்பகாலத்தில் (1970) அதன் பொறுப்பாளராகவும் சேவையாற்றினார்.

ஹாசீம் ஆலிமின் மறைவு எமது சமூகத்திற்கு பேரிழப்பாகும். சன்மார்க்க அறிஞர்களதும் சமூகத் தலைவர்களதும், கல்விமான்களதும் இறப்புகள் பொதுவாக சமூகங்களில் வெற்றிடங்களை ஏற்படுத்துகின்றன. ஹாஷிம் ஆலிமின் மறைவினால் கவலையுயுற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த கவலையைத் தெரிவித்துக் கொள்கிறோம்' என்றும் அனுதாபச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**எம்.எஸ்.எம்.ஸாகிர்...**



## சீனக் கப்பல் தொடர்பில்...

ஒவ்வொரு நாடுகளினதும் கோரிக்கைகளுக்கமைவாக வர்த்தக நடவடிக்கைகளுக்கும் வேறு தேவைகளுக்கும் இங்கு வர அனுமதி வழங்கப்படுகிறது. அமெரிக்கா, பிரித்தானியா, ஜப்பான் போன்ற நாட்டு யுத்தக் கப்பல்களுக்குக் கூட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

சீன கப்பல் தொடர்பில் வெளிவிவகார அமைச்சு விளக்கமளித்துள்ளது. அமைச்சர் அலி சப்ரி இது தொடர்பில் அமைச்சரவைக்கு விளக்கினார். எரிபொருள் நிரப்புவதற்காக ஒகஸ்ட் 11 முதல் 17 வரை ஹம்பாந்தோட்டை துறைமுகத்தில் நங்கூரமிட அனுமதி கோரப்பட்டது. மேலதிக ஆலோசனை பெறுவதற்காக அந்த கப்பல் ஹம்பாந்தோட்டை துறைமுகத்துக்கு வருவதை ஒத்திவைக்குமாறு சீனாவிடம் கோரப்பட்டுள்ளது. கம்போஜியாவில் நடைபெற்ற மாநாட்டில் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரியும் சீன வெளிவிவகார அமைச்சரும் பேச்சு நடத்தினர்.இராஜதந்திர ரீதியில் தேவையான முன்னெடுப்பு மேற்கொள்ளப்படுகிறது என்றார். அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக மாநாட்டில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலே அவர் இவ்விடயத்தை தெரிவித்தார்.

## குறைநிரப்பு பிரேரணை...

பிரதமர் தினேஷ் குணவர்தனவினால் குறைநிரப்பு பிரேரணை பாராளுமன்றத்தின் அனுமதிக்காக சபையில் சமர்ப்பிக்கப்பட்டது.

இந்த பிரேரணையில் ஜனாதிபதி,பிரதமர் உள்ளிட்ட விசேட செலவினங்களுக்காக 1,34கோடியே 51 இலட்சத்து 1,000 ரூபாவும் நிதி பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சுக்காக 46,720 கோடியே 88 இலட்சத்து 33,000 ரூபாவும் பாதுகாப்பு அமைச்சுக்காக 37,632 கோடியே 56 இலட்சத்து 31,000 ரூபாவும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சுக்காக 11,280 கோடியே 82 இலட்சத்து 60,000 ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

அதைவேளை, சுகாதார அமைச்சுக்கு 24,806 கோடியே 99 இலட்சத்து 98,000 ரூபாவும் போக்குவரத்து மற்றும் நெடுஞ் சாலைகள் அமைச்சுக்கு 30,710 கோடியே 84 இலட்சம் ரூபாவும் விவசாய அபிவிருத்தி அமைச்சுக்காக 13,856 கோடியே 4,85,000 ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் மின்சக்தி,எரிசக்தி அமைச்சுக்கு 26,979 கோடியே 57 இலட்சத்து 50,000 ரூபாவும் கல்வி அமைச்சுக்காக 20,000 கோடி ரூபாவும் பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள், மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி சபைகள் அமைச்சுக்காக 7,346 கோடியே 74 இலட்சம் ரூபாவும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சுக்காக 1,592 கோடியே 20 இலட்சம் ரூபாவும் மீதமான நிதி ஏனைய அமைச்சுக்களுக்கும் ஒதுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தேநீர், உணவுப் பொதி...

விலை நேற்றுமுன்தினம் நள்ளிரவு முதல் குறைக்கப்பட்டதை தொடர்ந்து உணவு பொதி உள்ளிட்ட சிற்றுண்டிசாலை உணவு பொருட்களின் விலையினை குறைக்க அவதானம் செலுத்தப்பட்டதாக சிற்றுண்டிச்சாலை உரிமையாளர் சங்கத்தின் தலைவர் அசேல சம்பத் தெரிவித்தார்.

முதற்கட்டமாக உணவு பொதி ஒன்றின் விலையை 10 சதவீதத்தினாலும்,தேநீர் கோப்பை ஒன்றின் விலையை 30 ரூபாவினாலும் குறைக்க தீர்மானிக்கப்பட்டது.

எதிர்வரும் நாட்களில் உணவு உற்பத்திக்கான மூலப்பொருட்களின் விலை குறைக்கப்பட்டால் பெரும்பாலான உணவுகளின் விலைகளும் குறைக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார். இதேவேளை பாண் உள்ளிட்ட வெதுப்பக (பேக்கரி) உணவு பொருட்களின் விலையை குறைக்க முடியாது என அகில இலங்கை வெதுப்பக உரிமையாளர் சங்கத்தின் தலைவர் ஜயவர்தன தெரிவித்தார்.

வெதுப்பகத்தில் பயன்படுத்தப்படும் எரிவாயு சிலிண்டரின் விலை குறைக்கப்படவில்லை.விலை குறைக்கப்பட்டால் பாண் உள்ளிட்ட வெதுப்பக உணவு பொருட்களின் விலையை குறைப்போம் என அவர் தெரிவித்தார்.

## இந்தியாவை பகைத்துக்...

03ஆம் பக்கத் தொடர்

அந்த விடயத்தில் அவரை சர்வதேச நாடுகள் ஏற்றுக் கொள்ளவில்லை. அந்த நடவடிக்கைகள் தொடர்பில் பெரும் விமர்சனங்கள் எழுகின்றன.

நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காணும் சிறந்த நடவடிக்கைகளுக்கு எதிர்க்கட்சி மற்றும் தமிழ் முற்போக்கு முன்னணி என்ற வகையில் நாம் முழுமையான ஆதரவை வழங்குவோம். எமக்கு அமைச்சு பதவிகள் அவசியமில்லை.

மலையக மக்கள் பெரும் பிரச்சனைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றனர். அவர்களின் பிரச்சினைகளுக்கு அரசாங்கம் தீர்வு பெற்றுக் கொடுக்க வேண்டும். நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக மலையக பகுதிகளில் ஆறு பேர் மரணமடைந்துள்ளனர். மேலும் பெருமளவிலானவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு நிவாரணம் மற்றும் நட்டஈடுகளை வழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நகர சபைகளை மாநகர சபைகளாகவும் பிரதேச சபைகளை நகர சபைகளாகவும் மாற்றும் நடவடிக்கைகள் தற்போது அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அந்த வகையில் மலையகத்தில் ஹட்டன் நகர சபை உட்பட பல நகர சபைகள், பிரதேச சபைகள் தரம் உயர்த்தப்பட வேண்டும்.அது தொடர்பில் நாம் தொடர்ந்தும் அரசாங்கத்திற்கு கோரிக்கைகளை விடுத்து வருகின்றோம். அது தொடர்பில் அரசாங்கம் முழுமையான கவனம் செலுத்த வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## விசாரணை அறிக்கைகளை...

03ஆம் பக்கத் தொடர்

பாரதூரமானது. இதற்கு நாங்களும் பொறுப்புக்கூறவேண்டும்.

ஏனெனில் கடந்த காலத்தில் எமது கட்சியைச்சேந்த, தற்போது அமைச்சராக பதவி வகிக்கும் மனுஷ நாணயக்காரவுக்கு அமைச்சர் கஞ்சன விஜேசேகரவினால் பாராளுமன்ற வளாகத்துக்குள் அச்சுறுத்தப்பட்டுள்ளது.

அவர் அவரைத் தாக்குவதற்கும் முற்பட்டிருந்தார். அதுதொடர்பாக விசாரணை நடத்த குழு அமைக்கப்பட்டது. அந்த குழு பல தடவைகள் கூடிய போதும் அந்த குழுவின் அறிக்கை வெளியிடப்படவில்லை.அதற்கு என்ன நடந்தது? அன்று நாம் நடவடிக்கை எடுத்திருந்தால், இன்று இந்த பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு சக பாராளுமன்ற உறுப்பினர்களால் அச்சுறுத்தல் ஏற்பட்டிருக்காது. அதனால் விசாரணைக்குழு அறிக்கையின் தீர்வு என்ன என்பது சபைக்கு அறிவிக்கப்பட வேண்டும் என்றார். அதனைத் தொடர்ந்து எழுந்த ஹர்ஷ டி சில்வா எம்.பி கடந்த சில தினங்களாக ஜனாதிபதி மாளிகையில் ஜனாதிபதியின் ஆசனத்தில் அமர்ந்தவர்களைத் தேடி, கைதுசெய்யும் நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன. ஆனால் இந்த சபைக்குள் குழப்பத்தை ஏற்படுத்தி, சபாநாயகர் ஆசனத்தை சேதப்படுத்தியமை தொடர்பாக விசாரணை மேற்கொள்ள குழு அமைக்கப்பட்டிருந்த போதும் அந்த குழுவின் அறிக்கை இதுவரை வெளியிடப்படவில்லை. அந்த அறிக்கை எங்கே? ஏன் அந்த அறிக்கைகள் மறைக்கப்படுகின்றன. இவ்வாறு சென்றால் இன்னும் பல பயங்கரமான நிலைமைகளை எதிர்கொள்ள நேரும் என்றும் அவர் தெரிவித்தார்.

## தொழிலாளர்களுக்கு ...

03ஆம் பக்கத் தொடர்

ரூபாய் சம்பளம் என்பது போதுமானதல்ல. எனவே மற்றுமொரு சம்பள உயர்வை நோக்கி இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் செயற்படும் என தெரிவித்துள்ளார்.

## கனுல் வெல்ல ...

03ஆம் பக்கத் தொடர்

அவர்களது நிலைமை மோசமாக இல்லையெனவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. லொறியின் சாரதி பிபில பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். பிபில பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி செனரத்தின் அறிவுறுத்தலின் பேரில் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஆர்.எம்.பிரசாத் சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்தி வருகிறார்.

## அத்துமீறும் இந்திய படகுகள்...

கையறு நிலையில் இருக்கும் வாய்ப்பைப் பயன்படுத்தி இந்திய இழுவைப்படகுகள் இவ்வாறு நுழைந்து கடல் வளங்களை எடுத்துச் செல்வதால் உள்ளூர் மீனவர்கள் பாதிக்கப்படுகின்றனர். இது குறித்து உரிய தரப்பினர் கவனம் செலுத்த வேண்டுமென மீனவ சமூகம் கோரிக்கை விடுக்கிறது.

## இந்த வருடத்தில் மட்டும்...

கடந்த ஜூன் மாதத்தில் மாத்திரம் 11 ஆயிரத்து 437 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இந்த மாதத்தின் இதுவரையான காலப்பகுதியில் ஆயிரத்து 916 பேர் இனங்காணப்பட்டுள்ளதாக தேசிய டெங்கு தடுப்பு பிரிவின் பணிப்பாளர் விசேட வைத்தியர் சுதத் சமரவீர குறிப்பிட்டுள்ளார்.

## பெற்றோல் வரிசையில் நடந்த...

இந்நிலையில், அந்த கார் தரித்து நின்ற பகுதியில் கட்டிட நிர்மாண பணிகள் இடம்பெற்று வந்துள்ளது.

இதன்போது கட்டிட நிர்மாணப் பணிக்கு பயன்படுத்தப்படும் இரும்புக் குழாய்யொன்று மேலிருந்து காரின் மீது வீழ்ந்ததில் காரின் முன் பக்க கண்ணாடியை துழைத்துக் கொண்டு சாரதியின் இருக்கையை நோக்கி வந்துள்ளது. எனினும் சாரதி மயிரிழையில் உயிர்தப்பியுள்ளார். இந்த விபத்துச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## தனது கோரிக்கைகளை...

தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கும், அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளுக்கும் இடையில் இடம்பெற்ற சந்திப்பை அடுத்து கருத்து வெளியிடும் போது அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அத்தோடு தம்மால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளை நிறைவேற்றுமாறு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் மீண்டும் கோரிக்கை வைப்போம் என்றும் சி.வி.விக்னேஸ்வரன் கூறினார்.

## அறிவிக்கப்பட்ட தினத்தில் அனைத்து...

தெரிவித்தார். பாராளுமன்றத்தில் நேற்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச எழுப்பிய 27ன் கீழ் 2 கேள்விகளுக்குப் பதிலளிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அது தொடர்பில் மேலும் தெரிவித்த அமைச்சர்:

கொரோனா வைரஸ் பரவல் சூழ்நிலை பாதிப்பு காரணமாக கடந்த இரண்டரை வருடகாலமாக கல்வித்துறை பாதிக்கப்பட்டுள்ளது என்பதை அனைவரும் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

2020ஆம் ஆண்டு முதல் பரீட்சைகள் பிற்போடப்பட்டுள்ளதுடன் பாடத்திட்டங்களையும் முழுமைப்படுத்துவதில் காலதாமதம் ஏற்பட்டுள்ளது.

இவ்வருடம் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் நலன் கருதி விசேட கற்பித்தல் நடவடிக்கைகள் பாடசாலை மட்டத்தில் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

எதிர்வரும் நாட்களில் உயர்தர பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்காக பயிற்சியளிக்கப்பட்ட ஆசிரியர்களின் ஊடாக கற்பித்தல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

2022ஆம் ஆண்டுக்கான உயர்தரப் பரீட்சை எதிர்வரும் நவம்பர் மாதத்தில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. திட்டமிட்ட வகையில் பரீட்சைகள் நடத்தப்படும். 2021ஆம் ஆண்டுக்கான உயர்தரப் பரீட்சை பெறுபேற்றை இம்மாதத்துக்குள் வெளியிட தீர்மானித்துள்ளோம்.

கொரோனா வைரஸ் சூழ்நிலை காரணமாக பாதிக்கப்பட்ட பாடசாலை கல்வி நடவடிகைகள் தற்போது கட்டம் கட்டமாக சீர் செய்யப்பட்டு வருகிறது. எரிபொருள் நெருக்கடிகளுக்கு தற்போது தீர்வு காணப்பட்டு வரும் நிலையில் இம்மாதத்துக்குள் பாடசாலைகளில் கல்வி நடவடிக்கைகளை வழமைக்கு கொண்டு வர முடியும்.

இக்காலங்களில் பாடசாலைக்கு வருகை தரும் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களை நோக்கும் போது வடக்கு மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் வருகை அதிகரித்து காணப்படுகிறது.வடக்கிலுள்ள மாணவர்கள் யுத்த காலத்திலும் கல்விக்கு முன்னுரிமை வழங்கினர். இப்போதும் அத்தகைய நிலை காணப்படுகின்றமை தொடர்பில் மகிழ்ச்சியுற முடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## இலத்திரனியல் ஆட்டோக்களை...

வாய்ப்பு வழங்குமாறு பல்வேறு தரப்பினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். ஆனாலும், அதற்கான சட்ட ஏற்பாடுகள் மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் காணப்படாமையால், இச்சட்டம் திருத்தம் செய்யப்பட வேண்டியுள்ளது. அதற்கமைய, இலத்திரனியல் முச்சக்கர வண்டிகளை பதிவு செய்வதற்கு இயலுமை கிட்டும் வகையில் இச் சட்ட ஏற்பாடுகளை உள்வாங்கி மோட்டார் வாகன சட்டத்தை திருத்தம் செய்வதற்காக போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

## அத்துமீறி நுழைந்த...

சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார். மே மாதம் 28 ஆம் திகதி கோட்டை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட இலங்கை வங்கி மாவத்தை பகுதியில் சட்டவிரோதமாக மக்கள் கூட்டத்தை ஒன்று சேர்த்து, அரச சொத்துக்களுக்கு சேதம் விளைத்தமை தொடர்பில் மற்றும் ஜூலை மாதம் 9 ஆம் திகதி அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தின் போது ஜனாதிபதி மாளிகைக்குள் அத்துமீறி நுழைந்த குற்றச்சாட்டுடன் தொடர்புடைய சந்தேக நபர் 8 ஆம் திகதி கொழும்பு மத்திய குற்றப்புலனாய்வு பிரிவில் முன்னிலையாகிய பின்னர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதன் போது கைது செய்யப்பட்டவர் 32 வயதுடைய ஒருவர் எனவும் அவர் கொஸ்வத்த பிரதேசத்தைச் சேர்ந்தவர் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், அலரிமாளிகையில் அத்துமீறி நுழைந்து அரச சொத்துக்களுக்கு சேதம் விளைத்த குற்றச்சாட்டுடன் தொடர்புடைய ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஜூலை மாதம் 9 ஆம் திகதி கொள்ளுப்பிட்டிய பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் உள்ள அலரிமாளிகையில் அத்துமீறி உள்நுழைந்து அரச சொத்துக்களுக்கு சேதம் விளைவித்த குற்றச்சாட்டின் அடிப்படையில் கொழும்பு தெற்கு குற்றத்தடுப்பு பிரிவினரால் அந்த நபர் கைது செய்யப்பட்டு கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்டவர் 53 வயதுடைய ஒருவர் எனவும் அவர் கொழும்பு பிரதேசத்தைச் சேர்ந்தவர் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொழும்பு தெற்கு குற்றத்தடுப்பு பிரிவினர் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளார்கள்.

## பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்காக...

இது தொடர்பில் கருத்து வெளியிட்டபோதே ஜீவன் தொண்டமான் இவ்வாறு தெரிவித்தார்.

" தொழிலாளர்களுக்கு நியாயமான சம்பள உயர்வை பெற்றுக் கொடுப்பதற்குகாங்கிரஸ்போராடிது. அதில் வெற்றி கண்டது. எனினும், நிர்வாக தரப்பு நீதிமன்றம் சென்றது. சம்பள உயர்வு வெற்றியை தக்க வைத்துக்கொள்ள சட்ட ரீதியாகவும் காங்கிரஸ் பாடுபட்டது. இன்று அதில் வெற்றி கிடைத்துள்ளது.

தொழிலாளர்களுக்கு சம்பள உயர்வை பெற்றுக்கொடுப்பது குறித்து கவனம் செலுத்தியுள்ளோம். எமது மக்களுக்காக எல்லா வழிகளிலும் போராடுவோமென்றும் ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

## அமைச்சுப் பதவி பருப்பு...

தொடர்பில், ஐக்கிய மக்கள் கூட்டணிக்குள்ளே நாம் இரவு பகலாக உரையாடிக்கொண்டிருக்கிறோம்.

ஜனாதிபதியை, ஐக்கிய மக்கள் கூட்டணியாக 5ம் திகதி சந்தித்தோம். தமிழ் முற்போக்கு கூட்டணியாக 10ம் திகதி சந்திக்க உள்ளோம். நாம் பிரதிநிதித்துவம் செய்யும் எமது மக்களின் அபிலாஷை சவால்கள் பற்றி உரையாடுவோம். இதற்குள் "அமைச்சு பதவிகளுக்காக கூட்டணிக்குள் முரண்பாடு" என தினசரிகள் மற்றும் சில மஞ்சள், கடும் மஞ்சள் இணையங்கள் எழுதுகின்றன.

ஏற்கனவே தமிழ் தேசிய கூட்டமைப்புக்குள், “டலசுக்கு எத்தனை பேர், ரணிலுக்கு இத்தனை பேர்” என கும்மி அடித்து, சிரித்து முடித்தாகிவிட்டது. அதை பார்த்து, இப்போ தமிழ் முற்போக்கு கூட்டணியையும் அசைக்க யாரும் முயல வேண்டாம். இங்கே இந்த நெருப்பில் அந்த பருப்பு வேகாது. நாம் ஒருசேரத்தான் முடிவுகள் எடுப்போம் என தெரிவித்துள்ளார்.

## பெண்களின் வேலை...

தெரிவித்தார். இது தொடர்பில் மேலும் கருத்து தெரிவித்த அமைச்சர், “தற்போது நாட்டில் பல வணிக நிறுவனங்கள் தகவல் தொழில்நுட்பத்தின் அடிப்படையில் பிற நாடுகளில் அமைந்துள்ள வணிக நிறுவனங்களுக்கு கணக்கு நிர்வாகம் மற்றும் தொழில்நுட்ப வேலை மற்றும் அலுவலக வேலைகளை நடத்துகின்றன. அந்த நிறுவனங்களின் தன்மைக்கு ஏற்ப, அங்கு பணிபுரியும் ஊழியர்கள் வேலை செய்ய வேண்டும். ஆனால் கடை மற்றும் அலுவலக பணியாளர்கள் சட்டம் எண். 19ன் கீழ், குறைந்த எண்ணிக்கையிலான வேலைகள் மட்டுமே மாலை 6 மணிக்குப் பிறகு பெண்களை வேலைக்கு அமர்த்த முடியும். அதனால்தான், குறிப்பாக இலங்கையில் தகவல் தொழில்நுட்பத்தின் அடிப்படையில் இயங்கும் நிறுவனங்கள், அந்தந்த நாடுகளில் உள்ள நேர வித்தியாசத்தைப் பொறுத்து, நமது நாடு நள்ளிரவில் அல்லது மறுநாள் காலையில் அவற்றை சமாளிக்க வேண்டும் என்ற யோசனையை தொழிலாளர் அமைச்சர் முன்வைத்தார். இணையம் மூலம், மின்னணு முறை மூலம் வெவ்வேறு நேரங்களில் நாட்டில் அதிக எண்ணிக்கையிலான கோல் சென்டர்கள் இயங்கி வருகின்றன. அதில் பயிற்சி பெற்ற ஏராளமான பெண் தொழிலாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். ஆனால் இந்தச் சட்டத்தின்படி மாலை 6 மணிக்குப் பிறகு பெண்களை வேலைக்கு அமர்த்துவது பல வேலைகளில் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. அத்தகைய அங்கீகரிக்கப்பட்ட மின்னணு செயல்முறைக்குத் தேவையான பெண்களின் உழைப்பை எளிதாகப் பெறுவதற்கு இந்தச் சட்டம் திருத்தப்பட்டுள்ளது” என அவர் தெரிவித்துள்ளார்.

## சமையல் எரிவாயு இனி...

பந்துல குணவர்தன தெரிவித்தார். மக்களுக்கு அதிகளவு நிவாரணங்களை பெற்றுக்கொடுக்கும் நோக்குடனேயே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. அத்தோடு பெற்றோலிய உற்பத்திப் பொருட்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தைத் திருத்தம் செய்யவும் அமைச்சரவை அனுமதியளித்துள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டார். சமையல் எரிவாயு விலைகள் நேற்று முன்தினம் 246 ரூபாவினால் குறைக்கப்பட்டது. 12.5 கிலோ கிராம் எரிவாயு விலை 246 ரூபாவினாலுத் 05 கிலோ எரிவாயு விலை 99 ரூபாவினாலும் 2.3 கிலோ எரிவாயு சிலிண்டர் விலை 45 ரூபாவினாலும் குறைக்கப்பட்டது. இதற்கமைய 12.5 கிலோ கிராம் சிலிண்டரின் புதிய விலை 4,664 ரூபாவாகவும் 05 கி.சிலிண்டர் விலை 1,872 ரூபாவாகவும் 2.3 கி.சிலிண்டர் விலை 869 ரூபாவாகவும் குறைக்கப்பட்டுள்ளது. உலக சந்தையில் எரிவாயு விலை உயர்வு மற்றும் டொலர் நெருக்கடி காரணமாக எரிவாயு விலைகள் கடந்த காலங்களில் வெகுவாக அதிகரிக்கப்பட்டன. டொலர் நெருக்கடியால் சந்தையில் எரிவாயு சிலிண்டர் தட்டுப்பாடும் ஏற்பட்டது. சிலிண்டர் பெற பல வாரங்கள் வரிசையில் காத்திருக்கும் நிலை உருவானது. ஆனால் தொடர்ச்சியாக எரிவாயு கப்பல்கள் நாட்டை வந்தடைந்ததால் தற்பொழுது எரிவாயு தட்டுப்பாடு நீக்கியுள்ளதோடு வரிசையின்றி எரிவாயு பெறும் நிலை ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பாராளுமன்றை பாதுகாத்த...

முற்றிலும் மாற்றமாக அமைந்திருக்கும் எனவும் ஜனாதிபதி தெரிவித்தார். எந்தவொரு நபர் மீதும் துப்பாக்கிச் சூடு நடத்தாமல் அமைதியான முறையில் அந்த நடவடிக்கையை முன்னெடுத்த பாதுகாப்புப் படையினருக்கு நன்றி தெரிவிப்பதாகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டார். இராணுவத் தலைமையக வளாகத்தை வந்தடைந்த ஜனாதிபதியை இராணுவத் தளபதி லுதினன் ஜெனரல் விக்கும் லியனகே வரவேற்றதுடன், பின்னர் ஜனாதிபதிக்கு விசேட இராணுவ மரியாதையும் வழங்கப்பட்டது.

ஜனநாயகத்தை பாதுகாக்கும் உன்னத இடமான பாராளுமன்ற வளாகத்துக்குள் வன்முறையாளர்கள் பிரவேசிப்பதை வெற்றிகரமாக தடுத்த பாதுகாப்பு படை வீரர்களுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாராட்டு சான்றிதழ்களையும் வழங்கி வைத்ததோடு, சிரேஷ்ட நிறைவேற்று அதிகாரிகளுடன் குழுப் புகைப்படத்தில் தோன்றியதன் பின்னர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அதிதிகளின் குறிப்பேட்டில் குறிப்பொன்றையும் இட்டார்.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க,

“பாராளுமன்றத்தைப் பாதுகாத்தமைக்காக உங்கள் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவிக்கும் வகையில் இன்று இந்த விசேட நிகழ்வை ஏற்பாடு செய்துள்ளோம். பலருக்கு இதன் முக்கியத்துவம் தெரியாது. எனவே விஷேடமாக இதைப் பற்றி சில விடயங்களைக் குறிப்பிட விரும்பினேன். இந்த நாட்டைப் பாதுகாப்பதும், இந்த நாட்டின் அரசியலமைப்பைப் பாதுகாப்பதும் உங்களின் தலையாய கடமையாகும்.

மக்களின் இறையாண்மையை நடைமுறைப்படுத்த 03 பிரதான நிறுவனங்கள் உள்ளன. பாராளுமன்றம், நிறைவேற்றுத்துறை மற்றும் நீதித்துறை. இந்த 03 நிறுவனங்கள் நடைமுறைப்படுத்தப்படாவிட்டால், இந்த நாடு கட்டுப்பாட்டை இழக்கும். அரசியலமைப்பு சிதையும். ஜனநாயகம் இழந்துவிடும். அப்படிப்பட்டதொரு சூழ்நிலையில்தான் நீங்கள் பாராளுமன்றத்தை பாதுகாத்தீர்கள்.

நிகழ்வுகள் பற்றி பேசுகையில், ஜூலை 09, முன்னாள் ஜனாதிபதி இருந்த ஜனாதிபதி மாளிகை வன்முறையாளர்களால் கைப்பற்றப்பட்டது, பின்னர் ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரத்தை செலுத்தும் ஜனாதிபதி அலுவலகம் கையகப்படுத்தப்பட்டது. ஜனாதிபதியிடம் நடைமுறைப் படுத்த எந்த நிறுவனமும் இல்லை. மாலையில் பிரதமரின் உத்தியோகபூர்வ இல்லமான "அலரி மாளிகை" கையகப்படுத்தப்பட்டது. அந்த அலுவலகத்தின் செயல்பாடுகளை மேற்கொள்ள முடியவில்லை. அப்போது முன்னாள் ஜனாதிபதி கொழும்பில் இல்லாததாலும், அவர் இருக்கும் இடம் தெரியாததாலும், நான் பதவி விலகுவேன் என்ற நம்பிக்கையில் எனது வீட்டுக்கு தீ வைத்தனர். ஆனால் சேர் எர்னஸ்ட் டி சில்வா மாவத்தையில் பிரதமர் அலுவலகம் மாத்திரம் இருந்தது.

கடந்த 13ஆம் திகதி திரும்பி வந்து பிரதமர் அலுவலகத்தை கைப்பற்றினர். அப்போது நிர்வாகத்தை இயக்க எந்தவொரு அலுவலகமும் இல்லை. அப்போது ஜனாதிபதி இருந்த ஜனாதிபதி மாளிகையும் இல்லாமல் போய்விட்டது. நிரைவேற்றுத்துறையாக, இயங்குவதற்கு எந்தவொரு இடமும் இருக்கவில்லை. மாலையில் நிலைமை மாறியது. பாராளுமன்றத்தை முற்றுகையிட முயன்றனர். பாராளுமன்றத்தை கைப்பற்றினால், சட்டத்துறையை அமல்படுத்த முடியாது. சட்டத்துறையை அமல்படுத்த முடியாவிட்டால், நாட்டில் அரசாங்கம் ஒன்று இல்லை.

நீதிமன்றத்தை சுற்றிவளைத்து நீதிமன்றத்தை நிறுத்துவது எளிதான காரியம். மற்ற இரண்டு நிறுவனங்களைப் போல அல்ல. பாராளுமன்றத்தை இழந்தால் அது பெரிய பிரச்சினையாகிவிடும். அதன்படி பாராளுமன்றத்தை கைப்பற்ற வந்தவர்களுக்கு துப்பாக்கிச் சூடு நடத்த வேண்டிய அவசியம் ஏற்படவில்லை. அதற்காக உங்கள் அனைவருக்கும் எனது நன்றியையும் பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறேன். உங்களில் பலர் காயமடைந்துள்ளனர். பாதுகாப்பு இருந்ததால் அடுத்த நாளே நாட்டில் நிலைமை மாறியது. பாராளுமன்றம் பாதுகாக்கப்படாவிட்டால் இன்று நாட்டில் இந்த நிலைமை ஏற்பட்டிருக்காது. பாராளுமன்ற கட்டடத்தை பாதுகாத்து பாராளுமன்றத்தை கூட்டுவதற்கு இடமளித்ததன் மூலம் அரசியலமைப்பு ரீதியான கடமை நிறைவேற்றப்பட்டுள்ளது. அதன் மூலம் நாடும் பாதுகாக்கப்பட்டுள்ளது. உங்களின் நடவடிக்கை இப்போது முடிந்துள்ளது. பாராளுமன்றத்தில் உள்ள அனைவரும் ஒன்றிணைந்து பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும்.

இப்போது பாராளுமன்றத்தில் உள்ள 225 உறுப்பினர்களும் தங்கள் கடமையை நிறைவேற்ற வேண்டும். பிரதமர் மற்றும் சபாநாயகரிடம் தயவு செய்து இதனை பாராளுமன்றத்தில் நினைவூட்டுமாறு கேட்டுக் கொள்கிறேன். இந்த அர்ப்பணிப்பிலிருந்து நாம் பயனடைய விரும்பினால், அனைவரும் ஒன்றிணைந்து பாராளுமன்றத்தை மீண்டும் நாட்டின் நலனுக்காக செயல்படுத்த வேண்டும்.

பிரதமர் தினேஷ் குணவர்தன , சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன, பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் திரான் அலஸ், பாதுகாப்பு செயலாளர் ஜெனரல் கமல் குணரட்ண, ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் சாகல ரத்நாயக்க, பாதுகாப்பு படைகளின் பிரதானி ஜெனரல் சவேந்திர சில்வா மற்றும் சிரேஷ்ட பாதுகாப்பு அதிகாரிகள் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## ஏழு நகர சபைகள் மாநகர...

மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சராக, பிரதமர் தினேஷ் குணவர்தன இது தொடர்பான அமைச்சரவை பத்திரத்தை சமர்ப்பித்தார். நாட்டில் 24 மாநகர சபைகள் மற்றும் 41 நகர சபைகள் மற்றும் 276 பிரதேச சபைகள் உள்ளன.இதன் பிரகாரம் 341 உள்ளூராட்சி சபைகள் உள்ளன. சனத்தொகை மற்றும் உள்கட்டமைப்பு வசதிகளுக்கு ஏற்ப இந்த மாற்றம் செய்யப்படுகிறது. இதற்கமைவாக களுத்துறை, வவுனியா, புத்தளம், திருகோணமலை, மன்னார், அம்பாறை,கேகாலை ஆகிய நகர சபைகளை மாநகர சபைகளாகவும் கிளிநொச்சி, முல்லைத்தீவு,மொனராகலை பிரதேச சபைகள் நகர சபைகளாகவும் தரமுயர்த்தப்படுவதாக அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

## சுமார் ஒன்பது வருடங்களின் பின்...

அதன்படி 30 அலகுகளுக்குக் கீழே 264%, 3160 அலகுகள் 200%, 6190 அலகுகள் 125%, 91120 அலகுகள் 89%, 121180 அலகுகள் 79% உயர்வு இருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## செங்கோலை வடிவமைத்த...

இத்துறையில் கலைஞராக மிக சிறப்பாக ஆக்கங்கள் பலவற்றை உலகுக்கு அளித்துள்ளார். குடியரசு இலச்சினை, செங்கோல், இராணுவ மற்றும் கடற்படை இலச்சினை அவரின் ஆக்கங்களில் சிலவாகும். மேலும் அவர் இரண்டு தடவைகள் 1954 மற்றும் 1956இல் சிறந்த கலை படைப்புக்கான ஆளுநர் விருதையும் வென்றுள்ளார் . தற்போதுள்ள இலங்கை சாரணர் இலச்சினையையும் உருவாக்கியவரும் அவரே. மேலும் சாரணர் இயக்கத்தின் 50 ஆவது ஆண்டு நிறைவையொட்டி வெளியிடப்பட்ட சாரணர் முத்திரை உள்ளிட்ட பத்துக்கும் அதிகமான நினைவு முத்திரைகளையும் உருவாக்கியவரென்பது குறிப்பிடத்தக்கது.

## நாட் சம்பளமாக ரூ.1000 வழங்குமாறு...

தின் யோசனையை இரத்து செய்யக் கோரி மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் மார்ச் 2021 இல் முதலாளிகள் சம்மேளனம் தாக்கல் செய்திருந்த ரிட் மனுவே, நேற்று (09) தள்ளுபடி செய்யப்பட்டது.

அத்துடன், நாட் சம்பளமாக 1,000 ரூபாய் வழங்கப்படவேண்டும் என்ற தீர்மானத்தை 22 கம்பனிகளும் கடைப்பிடிக்கவேண்டும். மேலும் தொழிலாளர்களுக்கு தினசரி ஊதியம் 1000 ரூபாயை வழங்க வேண்டும் என்றும் தீர்ப்பளித்துள்ளது.



பெலவத்த, அக்குரேகொடவில் அமைந்துள்ள இராணுவத் தலைமையகத்திற்கு நேற்று (09) முற்பகல் விசேட உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை இராணுவத் தளபதி லுதினன் ஜெனரல் விக்கும் லியனகே வரவேற்றதுடன், ஜனாதிபதிக்கு விசேட இராணுவ மரியாதையும் வழங்கப்பட்டது.

# அமைச்சரவை முடிவுகள்

### பிராந்திய கைத்தொழில் அபிவிருத்தி வேலைத்திட்டம்

பிராந்திய மட்டத்தில் கைத்தொழிற்றுறையை மேம்படுத்தும் நோக்கில் கைத்தொழில் அமைச்சின் மூலம் 'பிராந்திய கைத்தொழில் அபிவிருத்தி வேலைத்திட்டம்' நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. அதற்கமைய, இவ் வேலைத்திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்டுள்ள 25 முதலீட்டாளர்களுக்கு 13 கைத்தொழில் பேட்டைகளில் காணித் துண்டுகளை ஒதுக்கி வழங்குவதற்காக கைத்தொழில் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### iRoad 2 திட்டத்தின் 04 ஆம் கட்டம் 200 மில்.டொ. பெற ADBயுடன் பேச்சு

ஆசிய அபிவிருத்தி வங்கி நிதியனுசரணை வழங்குகின்ற ஒருங்கிணைந்த வீதி முதலீட்டு வேலைத்திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் i Road 1 மற்றும் i Road 2 கருத்திட்டங்களின் கீழ் 6,250 சதுர கிலோமீற்றர் கிராமிய வீதிகளும், 750 சதுர கிலோ மீற்றர் தேசிய வீதிகளும் அபிவிருத்தி செய்து, பராமரிப்பதற்காக 140 சிவில் வேலை ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இதுவரை 4,800 சதுர கிலோமீற்றர் கிராமிய வீதிகளும், 300 சதுர கிலோ மீற்றர் தேசிய வீதிகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

### அமைச்சரவையில் கொள்கை ரீதியான தீர்மானங்களை எடுப்பதற்கு அமைச்சரவை உப செயற்குழு

அமைச்சரவைக் கூட்டத்தில் கொள்கை ரீதியான தீர்மானங்களை எடுப்பதற்கு அதிக நேரத்தை ஒதுக்குவதற்கு இயலுமை கிட்டும் வகையில் சட்டரீதியான மற்றும் ஏனைய ஏற்புடைய விடயங்களை ஆழமாக ஆராய்ந்து தீர்மானங்களை மேற்கொள்ள வேண்டிய விடயதானங்களுக்கு அமைவாக சமர்ப்பிக்கப்படும் அமைச்சரவை பத்திரங்கள் தொடர்பாக அமைச்சரவைக்குப் பரிந்துரைகளைச் சமர்ப்பிப்பதற்கு இயலுமாகும் வகையில் அமைச்சரவை உப செயற்குழுக்களை நிறுவுதல் பொருத்தமானதென கண்டறியப்பட்டுள்ளது. அதற்கமைய, புதிய கருத்திட்டங்களை ஆரம்பித்தல் மற்றும் பெறுகைக் கோரல் நடவடிக்கைகள் போன்ற அரச செலவுகள் தொடர்பான யோசனைகள் பற்றி கொள்கை ரீதியான பரிந்துரைகளை அமைச்சரவைக்குச் சமர்ப்பிப்பதற்காக ஜனாதிபதி தலைமையில் அரச செலவுகள் முகாமைத்துவம் தொடர்பான அமைச்சரவை உப செயற்குழுவொன்றை நியமிப்பதற்காகவும், அரச சேவை நியமனங்கள், பதவியுயர்வு, இடமாற்றம் மற்றும் ஒழுக்காற்று நடவடிக்கைகள் போன்ற நிறுவன ரீதியான நடவடிக்கைகள் தொடர்பான விடயங்கள் பற்றி சமர்ப்பிக்கப்படும் யோசனைகளை ஆராய்ந்து அமைச்சரவைக்கு கொள்கை ரீதியான பரிந்துரைகளைச் சமர்ப்பிப்பதற்காக பிரதமர் தலைமையில் நிறுவன ரீதியான விவகாரங்கள் தொடர்பான அமைச்சரவை உப செயற்குழுவை நியமிப்பதற்காவும் ஜனாதிபதியினால் சமர்ப்பிக்கப்பட்ட யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### ஜப்பான் நிதியத்தால் 03 மில்.டொ ADB மூலம் வழங்க உடன்பாடு

வறுமைக்குறப்பட்டவர்கள் மற்றும் இடர்களுக்கு உள்ளாகியவர்களின் உணவுப் பாதுகாப்பு மற்றும் வாழ்வாதாரங்களைப் பாதுகாக்கும் நோக்கில் "உணவுப் பாதுகாப்பு மற்றும் வாழ்வாதார மீட்சி அவசர நிவாரண உதவித் திட்டம்" எனும் கருத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. இக் கருத்திட்டத்திற்குத் தேவையான நிதி, ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியனுசரணையின் கீழ் தற்போது நடைமுறைப்படுத்தப்படும் கருத்திட்டங்கள் சிலவற்றில் காணப்படும் மேலதிக நிதியை மீளாய்வின் மூலம் ஒதுக்கிக் கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும், கருத்திட்ட செயற்பாடுகளின் நிதியிடலுக்காக சுபீட்சமான மற்றும் ஆசிய பசுபிக் வலய துரிதமீட்சிக்கான ஜப்பான் நிதியத்தால் 03 மில்லியன் அமெரிக்க டொலர்களை ஆசிய அபிவிருத்தி வங்கி மூலம் வழங்குவதற்கு உடன்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தோட்டத் தொழிலாளர்களுக்கு சம்பள உயர்வை பெற்றுக்கொடுப்பது தொடர்பில் இன்று தொழில் அமைச்சில் விசேட பேச்சு

ஹற்றன் சுழற்சி நிருபர்



மேல்முறையீட்டு நீதிமன்ற தீர்பையடுத்து தோட்டத் தொழிலாளர்களுக்கு சம்பள உயர்வை பெற்றுக் கொடுப்பது குறித்து இன்று விசேட கலந்துரையாடல் ஒன்று தொழில் அமைச்சில் நடைபெறும். இதன் போது, இ.தொ.காவின் பொது செயலாளர் ஜீவன் தொண்டமான் மற்றும் கட்சியின் உயர்பீடத்தின் ஊடாக விசேட தீர்மானங்கள் எடுக்கப்படவுள்ளதாகவும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் உப தலைவரும், சர்வதேச விவகாரங்களுக்கான செயலாளருமான பாரத் அருள்சாமி தெரிவித்துள்ளார்.

பெருந்தோட்டத்துறை தொழிலாளர்களுக்கு நாட் சம்பளமாக ஆயிரம் ரூபா வழங்க வேண்டும் என்ற சம்பள நிர்ணய சபையின் தீர்மானத்துக்கு எதிராக, முதலாளிமார் சம்மேளனத்தால் தாக்கல் செய்யப்பட்ட மனுவை மேல்முறையீட்டு நீதிமன்றம் நேற்று (09) தள்ளுபடி செய்துள்ளது.

மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு நாட் சம்பளமாக ஆயிரம் ரூபா வழங்கப்பட வேண்டும் என கூட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும் தொழிற்சங்கங்கள் உட்பட அனைத்து சங்கங்களும் கூட்டாக கோரிக்கை விடுத்தன. இதனை ஏற்பதற்கு முதலாளிமார் சம்மேளனம் மறுத்துவிட்டது.

கூட்டு ஒப்பந்தம் மூலம் இப்பிரச்சினைக்கு தீர்வு காண முடியாமல் போனாதால், தொழில் அமைச்சு தலையிட்டது. அதன் பின்னர் சம்பள நிர்ணய சபை ஊடாக நாட் சம்பளமாக ஆயிரம் ரூபா நிர்ணயிக்கப்பட்டது.

இந்த முடிவை முதலாளிமார் சம்மேளனம் ஏற்கவில்லை. சம்பள நிர்ணய சபையின் முடிவுக்கு எதிராக நீதிமன்றத்தை நாடினர்.

இது தொடர்பான மனு நேற்று விசாரணைக்கு வந்தபோது, மேன்முறையீட்டு நீதிமன்றத்தால் மனு தள்ளுபடி செய்யப்பட்டது என பாரத் அருள்சாமி குறிப்பிட்டார்.

## மாகாணசபை தேர்தல் திருத்த சட்ட மூலம்; இழைக்கப்பட்ட அநீதிக்கு தீர்வை முன்வைக்க வேண்டும்

### கணபதி கனகராஜ் தெரிவிப்பு

தலவாக்கலை குறூப் நிருபர்



மாகாண சபைத் தேர்தலை நடத்த விடாமல் தடுத்து நிறுத்திய மாகாண சபை தேர்தல் திருத்த சட்ட மூலத்தின் மூலம் இழைக்கப்பட்ட அநீதிக்கு தீர்வை முன்வைக்க வேண்டும் என முன்னாள் மத்திய மாகாண சபை உறுப்பினரும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பிரதித் தலைவருமான கணபதி கனகராஜ் தெரிவித்துள்ளார்.

13வது அரசியல் யாப்பு திருத்தத்தின் படி மாகாண சபை முறை நாட்டில் நடைமுறையில் இருக்க வேண்டும். கடந்த காலங்களில் மாகாணசபை அதிகாரங்கள் படிப்படியாக குறைக்கப்பட்டு வந்திருக்கிறது. அதன் தொடர்ச்சியாக இறுதியில் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கான முறைமையே இல்லாமல் செய்யப்பட்டிருக்கிறது. இந்த நடவடிக்கைக்கு தமிழ் மக்களை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற பாராளுமன்ற பிரதிநிதிகள் துணை போயிருக்கிறார்கள் என்பது வரலாற்றில் மறக்க முடியாத உண்மையாகும்.

தற்போது நாட்டில் சர்வகட்சி அரசாங்கமொன்று அமைக்கப்பட இருக்கின்றது. இந்த சர்வ கட்சி அரசாங்கத்தில் கடந்த காலத்தில் இழைக்கப்பட்ட பிழைகளுக்கும், அநீதிகளுக்கும் தீர்வு காணமுடியும் என நம்பிக்கையும் இருக்கிறது.

தற்போதைய நிலையில் ஜனாதிபதி பல்வேறு அரசியல் தரப்பினரையும் சந்தித்து சர்வகட்சி அரசாங்கம் தொடர்பாக கலந்துரையாடல்களை மேற்கொண்டு வருகிறார். இந்த சந்தர்ப்பத்தை சரியாகப் பயன்படுத்திக் கொண்டு மாகாண சபைகளை மீண்டும் மக்கள் பிரதிநிதிகளுடன் இயங்க வைப்பதற்கான நடவடிக்கைகளை சிறுபான்மை கட்சிகளே எடுக்க வேண்டும்.

சிறுபான்மை மக்களின் அதிகாரப்பகிர்வை தற்போதைய மாகாண சபை முறையை அடிப்படையாகக் கொண்டே அடுத்த கட்டத்துக்கு கொண்டு செல்ல முடியும். இதற்கான சந்தர்ப்பத்தை நாட்டில் அமைய வருகின்ற சர்வகட்சி அரசாங்கத்தின் மூலம் நிறைவேற்றிக் கொள்ள வேண்டும். எனவும் தெரிவித்துள்ளார்.

## கலஹா பழைய நில்லம்பை அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் திருவிழா

நாவலப்பிட்டி சுழற்சி நிருபர்

கண்டி பகுதியைச் சேர்ந்த கலஹா பழைய நில்லம்பை அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய வருடாந்த அலங்கார திருவிழா இன்று ஆரம்பம்மாகிறது.

இன்று காலை 9.00 மணியளவில் அனுக்கிரகம், ஸ்தாபன அபிஷேகம், சிம்ம கொடியேற்றம், காப்புகட்டுதல் இடம்பெற்று இரவு 9.00 மணியளவில் கங்கையில் கரகம் பாலித்தல் இடம்பெறும். அதைத் தொடர்ந்து ஆறு நாட்கள் திருவிழா நடைபெறவுள்ளது.சனிக்கிழமை (13) காலை 7.00 மணிக்கு நில்லம்பை தீர்த்த கரையில் இருந்து பறவை காவடி குருக்கலை சித்திவிநாயகர் ஆலயம் சென்று பாற்குடபவனியுடன் ஆலயம் வந்தடையும். தொடர்ந்து தீ மிதிப்பு வைபவம் தூக்குகாவடி என்பன இடம்பெற்று நண்பகல் 1.00 மணியளவில் மகேஸ்வர பூஜையுடன் அன்னதானம் வழங்கப்படும். இரவு 8.00 மணிக்கு விசேட அலங்கார வசந்த மண்டப பூஜைகளுடன் பக்த அடியார்கள் புடைசூழ கரகம் காவடி மேளதாள மங்கள வாத்தியங்கள் முழங்க மின்விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட முத்தேர்களில் அம்பாள் சகிதம் விநாயகப் பெருமாள் மற்றும் முருகப் பெருமானுடன் ரதபவனி நடைபெறும்.(14) ஆம் திகதி தீர்த்த உற்சவத்துடன் விழா நிறைவடையும்.

## ஹற்றன் தனியார் பஸ்களில் அதிகரித்த கட்டணங்களே அறவிடப்படுகின்றன

தனியார் பஸ் கட்டணங்களை அரசாங்கம் குறைத்திருந்தாலும் ஹற்றனிலிருந்து பல பகுதிகளுக்கு சேவையில் ஈடுபடும் பல தனியார் பஸ்கள் கட்டண குறைப்பை முன்னெடுக்காமல் அதிகரித்த கட்டணத்தையே அறவிடுவதாக பயணிகள் தெரிவிக்கின்றனர்.

பஸ் கட்டணங்கள் அதிகரிக்கப்படும் போது உடனடியாக பஸ் கட்டணங்களை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கும் தனியார் பஸ்கள், கட்டணங்களை குறைக்கும் போது பயணிகளிடம் கட்டண குறைப்பை முன்னெடுப்பதில்லை என பொது மக்கள் குறைகூறுகின்றனர். பல பஸ்களின் நடத்துனர்கள் அதிகரித்த கட்டணத்தையே தற்போதும் அறவிடுவதுடன், பல நடத்துனர்கள் மிகுதி பணம் இல்லையென தெரிவித்து, அதிக கட்டணத்தை அறிவிடுவதாகவும் தெரிவிக்கின்றனர்.

இதற்கமைய ஹற்றனிலிருந்து தலவாக்கலை, மஸ்கெலியா, பொகவந்தலாவை, போடைஸ், சாஞ்சிமலை, சாமிமலை ஆகிய வீதிகளில் சேவையில் ஈடுபடும் தனியார் பஸ்களே கட்டணங்களை குறைக்காமல் சேவையில் ஈடுபடுவதாகவும் தெரிவிக்கின்றனர்.



பதுளை மாவட்ட சர்வமத. செயற்குழு கூட்டம் பதுளை ரிவர் சைட் விடுதியில் நேற்று நடைபெற்றது. இக்கூட்டத்தில் கலந்து கொண்ட சர்வமதத் தலைவர்களையும், வளவாளர்களையும் படங்களில் காணலாம்.

படம் பதுளை தினகரன் விசேட நிருபர்

## மஸ்கெலியாவில் குறைக்கப்படாத சமையல் எரிவாயுவின் விலை

மஸ்கெலியா தினகரன் விசேட நிருபர்

வீட்டு பாவனைக்கான லிட்ரோ எரிவாயு சிலிண்டர்களின் விலைகள் நேற்று முன்தினம் நல்லிரவு முதல் குறைக்கப்பட்டாலும் மஸ்கெலியா பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள விநியோகத்தர்கள் விலை குறைப்பு செய்யாமல் பழைய விலைக்கே விற்பனை செய்ததாக தெரிவிக்கப்படுகிறது. அத்தோடு அத்தியாவசிய விலை பொருட்களின் மொத்த விலைகள் குறைக்கப்பட்டாலும் மத்திய மலைநாட்டில் உள்ள அனைத்து வர்த்தக நிலையங்களிலும் பொருட்களின் விலை குறைப்பு நடைமுறைப்படுத்தப்படவில்லை.இது குறித்து பாவனையாளர்கள் விசனம் தெரிவிக்கின்றனர். விலை அதிகரித்தால் உடனே விலை அதிகரிப்பை மேற்கொள்ளும் வியாபாரிகள் விலை குறைப்பை பொருட்படுத்தாமல் பழைய விலைக்கே வாங்கியதாகவும் தெரிவித்து தட்டிகழிப்பதாக நுகர்வோர் விசனம் தெரிவிக்கினறனர்.


**வர்த்தக, வணிக மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சு**

**2022ஆம் ஆண்டிற்காக இந்திய கடன் திட்டத்தின் கீழ் அத்தியாவசியப் பொருட்களின் இறக்குமதிக்காக இறக்குமதியாளர்களை பதிவு செய்தல் - கட்டம் II**

இந்திய மற்றும் இலங்கை அரசிற்கிடையில் மேற்கொள்ளப்பட்டுள்ள உடன்பாட்டின் அடிப்படையில் 2022ம் ஆண்டிற்காக இந்தியாவிலிருந்து கீழ்க்காணும் அத்தியாவசியப் பொருட்களை இறக்குமதி செய்வதற்காக இறக்குமதியாளர்களை வர்த்தக, வணிக மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சில் பதிவு செய்து கொள்வதற்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

- அத்தியாவசிய உணவுப் பொருட்கள்
- விலங்குணவு மூலப் பொருட்கள்/ விலங்கு உணவு சேர்க்கை மற்றும் கால்நடை மருந்துகள்

மேற்படி அத்தியாவசிய பொருட்களை இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்வதற்கு எதிர்பார்க்கும் இறக்குமதியாளர்களுக்கு பதிவு செய்வதற்காக வர்த்தக அமைச்சில் https://www.trade.gov.lk என்ற இணைய தளத்திற்கு பிரவேசித்து 2022.08.15ம் தனி முதல் 2022.08.22ம் திகதி வரை ஒன்லைன் வழியாக விண்ணப்பிக்கலாம்.

இது பற்றிய மேலதிக தகவல்களை வர்த்தக அமைச்சின் பணிப்பாளர் திரு. குமுது விதானகேயை, தொ.பே. இலக்கம் 071-8246920/ 011-2110574 ஐ அழைத்து பெற்றுக் கொள்ளலாம்.

**செயலாளர்**
**வர்த்தக, வணிக மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சு,**
**இல. 492, ஆர்.ஏ.த. மெல் மாவத்த, கொழும்பு-03**
**2022.08.10**



திகதி 08.08.2022 திங்கட்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம்: 4841
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 7,868,070.00
ஆங்கில எழுத்து E வெற்றி இலக்கங்கள் 8 3 8 3 5 6
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 31,425,803.60

ராசி சுப பலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம்: 150
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 5,576,180.00
இலக்கினம் மகரம் வெற்றி இலக்கங்கள் 04 21 40 47
விசேட இலக்கினம் மகரம்
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 3,641,991.60

கொவிசெத Govisetha
சீட்டிழுப்பு இலக்கம் 3083
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,955,040.00
ஆங்கில எழுத்து I வெற்றி இலக்கங்கள் 49 52 55 60
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 68,019,218.00

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம்: 871
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,118,040.00
வெற்றி இலக்கினம் K வெற்றி இலக்கங்கள் 10 27 44 45
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 120,700,756.40

கோடி 26+ Mega POWER மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1189
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,352,060.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 264,620,510.00
Z 14 05 09 35 44
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

தேசிய லொத்தர் சபை National Lotteries Board
தொலைபேசி: 011-4607000, 011 - 4607001 - 2 பெக்ஸ்: 011-4669475
Email : info@nlb.lk Web : www.nlb.lk
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01




# அமைச்சர் டக்ளஸின் தலையீட்டையடுத்து கிளிநொச்சி போ.சபை பணிப்புறக்கணிப்பு முடிவு

கிளிநொச்சி மாவட்ட வட பிராந்திய போக்குவரத்து சபை ஊழியர்கள் மேற்கொண்ட பணிப்புறக்கணிப்பு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் தலையீட்டையடுத்து முடிவுக்கு வந்தது.

பரந்தன் – முல்லைத்தீவு சாலை போக்குவரத்தில் ஈடுபட்ட சாரதி, நடத்துநர் தாக்கப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து, குற்றவாளிகள் கைதுசெய்யப்பட்டு தண்டனைக்கு உட்படுத்தப்படவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து போக்குவரத்து சபை ஊழியர்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டிருந்தனர்.

முரசுமோட்டைப் பகுதியில் பஸ்சில் ஏறிய மாணவியொருவர் தவறி விழுந்து காயப்பட்ட சம்பவம் தொடர்பில், புளியம்பொக்கணை பகுதியில் பஸ் சாரதியும், நடத்துநரும் ஒரு குழுவினரால் தாக்கப்பட்டுள்ளதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக உடனடியாகவே சாரதி, நடத்துநரைத் தாக்கியவர்களில் மூவரை தர்மபுரம் பொலிஸார் கைதுசெய்து நீதிமன்றத்தில் நிறுத்தியுள்ளனர்.

விபத்தில் காயமடைந்த செல்வராஜா ரேனுஜா என்ற மாணவியும், தாக்கப்பட்ட சாரதி மற்றும் நடத்துநரும் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.



விபத்துடன் தொடர்புடைய பஸ் கிளிநொச்சி பொலிஸாரால் எடுத்துச் செல்லப்பட்டு பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு இணைத்தலைவர், கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் பணிப்பின் பேரில், அமைச்சரின் இணைப்பாளர், முன்னாள் மாகாணசபை உறுப்பினர் வை.தவநாதன் மாவட்டச் செயலாளர் ரூபவதி கேதீஸ்வரன் ஆகியோருடன் ஆலோசித்த மேலதிக இணைப்பாளர் கோடீஸ்வரன் றுஷாங்கன், நேரில் சென்று பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்ட ஊழியர்களைச் சந்தித்தார்.

அவர்களது கோரிக்கைகள் தொடர்பாக, கிளிநொச்சி வ.பி.போ.ச. தொழிற்சங்க பிரதிநிதிகளான மணிமாறன், தர்ஷன் ஆகியோருடனும், கிளிநொச்சி சாலை முகாமையாளர் கிருஷ்ணகுமார் மற்றும் வட பிராந்திய போக்குவரத்து கட்டுப்பாட்டு முகாமையாளர் லம்பேர்ட் ஆகியோருடனும் கலந்துரையாடல் நடாத்தி, பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளவர்களது கோரிக்கைகளைக் கேட்டறிந்தார்.

அதன்பின்னர், சம்பவத்தில் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள மாணவி ரேனுஜா செல்வராஜா மற்றும் தாக்குதலுக்குள்ளான சாரதி, நடத்துநர் ஆகியோரை வைத்தியசாலையில் சென்று நலம் விசாரித்த அவர், பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்டுவரும் சிகிச்சைகள் தொடர்பாகவும் வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்தியர் சுகந்தன் அவர்களிடம் கேட்டறிந்தார்.

சாரதி, மற்றும் நடத்துநரைத் தாக்கியதாகச் சந்தேகிக்கப்படும் 3 பேர் இதுவரையில் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டுள்ளதாகவும், ஏனையோரைக் கைதுசெய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாகவும் தெரிவித்த பொலிஸ் பொறுப்பதிகாரி, மாணவி காயமடைந்த சம்பவம் தொடர்பான விசாரணைகளுக்காக சம்பவத்துடன் தொடர்புபட்ட பஸ் பொலிஸ் நிலையத்துக்கு எடுத்துவரப்பட்டிருப்பதாகவும், சாரதி, நடத்துநரிடம் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்படும் என்றும் குறிப்பிட்டார்.

இதனையடுத்து, நிலைமைகளின் முன்னேற்றம் குறித்து பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்ட சாலை ஊழியர்களுக்கு விளக்கிய அமைச்சரின் மேலதிக இணைப்பாளர், பொலிஸாரின் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவதுடன், பொதுமக்களுக்கு தொடர்ந்து அசௌகரியம் ஏற்படாத வகையில் முடிவெடுக்குமாறு கேட்டுக்கொண்டதையடுத்து, உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும் என்ற நிபந்தனைகளின் அடிப்படையில் பணிப்புறக்கணிப்பைக் கைவிடுவதாக அவர்கள் தெரிவித்தனர்.

# மணற்காடு சவுக்கம் தோப்பு விசமிகளால் திட்டமிட்டு அழிப்பு

**கரவெட்டி தினகர் நிருபர்**

யாழ்.வடமராட்சி கிழக்கிலுள்ள மணற்காடு சவுக்கம் தோப்பு விறகுக்காக அழிக்கப்படுவதாக கடற்படையினர் தெரிவிக்கின்றனர். இதுவரை 12 சைக்கிள் விறகு வியாபாரிகள் கடற்படையால் கைது செய்யப்பட்டு பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். சவுக்கமர குற்றிகள் ஏற்றியவாறு சைக்கிள்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளன. இவர்களை பருத்தித்துறை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சவுக்கம் தோப்பு விசமிகளால் திட்டமிடப்பட்டு தீ வைத்து எரிப்பதும், பின்னர் அதனை தறித்து விறகாக்குவதும் நடந்தேறிவருகிறது. மணற்காடு மக்களால் இதனை சமுதாயத் தோப்பாக அறிவிக்குமாறு கோரி வரும் நிலையில், அரசு இந்தக் காட்டை வனவளத் திணைக்களத்தின் ஆளுகைக்குள் கொண்டுவர கடும் பிரயத்தனம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. ஆனாலும் மக்களின் கடும் எதிர்ப்பினால் முயற்சி கைவிடப்பட்டுள்ளது. இந்நிலையில் சவுக்கம் தோப்பு உரிய பராமரிப்பின்றி சமூக விரோதிகளால் திட்டமிடப்பட்டு அழிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# கொவிட் 19 தொற்றுக்குள்ளான 6 பேருக்கு யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை

**யாழ்.விசேட நிருபர்**

யாழ்.போதனா வைத்தியசாலையில் கடந்த ஒரு வாரத்தில் கொரோனா தொற்றுக்குள்ளான ஆறு பேர் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பெறுவதாக யாழ். போதனா வைத்தியசாலை பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் சி.யமுனாநந்தா தெரிவித்துள்ளார்.

வைத்தியசாலைக்கு வரும் நோயாளர்களில் சிலரில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையிலேயே இந்த நபர்கள் தொற்றாளர்களாக அடையாளப்படுத்தப்பட்டனர். இவர்கள் அனைவரும் ஏற்கனவே கொரோனா தடுப்பூசியை ஒரு வருடத்துக்கு முன்னர் பெற்றுக் கொண்டவர்கள் என பிரதிப்பணிப்பாளர் மேலும் தெரிவித்தார்.

அதேவேளை கடந்த ஜூலை மாதம் கொரோனா தொற்றால் யாழ்ப்பாணத்தில் இருவர் உயிரிழந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு

**(புதுக்குடியிருப்பு விசேட நிருபர்)**

முல்லைத்தீவு கடலில் கடந்த இரண்டு நாட்களாக இந்திய இழுவைப்படகுகள் தொடர்ச்சியாக காணப்படுவதாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இவற்றை கட்டுப்படுத்த கடற்படையினர் மற்றும் கடற்றொழில் நீரியல்வளத்திணைக்களம் கடற்றொழில் அமைச்சிற்கு தெரியப்படுத்தியும் எந்த நடவடிக்கையும் எடுக்காமையால் முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட கடற்தொழிலாளர் சங்கங்களின் சம்மேளன தலைவர் என வி.அருள்நாதனினால் இந்த முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டுள்ளது.

மண்ணெண்ணெய் இன்மையால் முல்லைத்தீவு மாவட்ட மீனவர்கள் கடந்த மூன்று மாதங்களாக கடலுக்கு செல்லமுடியாது அவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதாக அரச திணைக்களங்கள் மற்றும் அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தியும் இலங்கை கடல்வளத்தினை இந்திய மீனவர்கள் எடுத்துச்செல்கின்றனர்.

எங்கள் நாட்டின் கடல்வளத்தினை நாங்கள் பாதுகாக்கவேண்டும் எங்கள் மீனவர்கள் கடலுக்கு சென்று மீன்பிடிக்க முடியாத நிலையில் கடந்த இரண்டு நாட்களுக்கு மேலாக முல்லைத்தீவு மாவட்ட கடலில் சாலை தொடக்கம் நாயாறு வரையான கடற்பகுதியில் நூற்றுக்கணக்கான இந்திய இழுவைப்படகுகள் கடல் வளத்தினை சூறையாடி வருகின்றன.

இந்நிலையில் கடற்படையினர் உள்ளிட்ட அனைத்து அதிகாரிகள் மற்றும் திணைக்கள அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தியும் எந்த நடவடிக்கையும் எடுக்காமையால் முல்லைத்தீவு கடலில் ஆக்கிரமித்து நிற்கும் இந்திய இழுவை படகுகளை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பது தொடர்பில் முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டுள்ளது.

# நல்லைக்குமரன் மலர் வெளியீட்டு நிகழ்வு

**கரவெட்டி தினகரன் நிருபர்**

நல்லைக்குமரன் மலர் வெளியீட்டு நிகழ்வும் யாழ். விருது வழங்கலும் எதிர்வரும் வெள்ளிக்கிழமை நாவலர் கலாசார மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ். மாநகர ஆணையாளரும் சைவ சமய விவகார குழுவின்தலைவருமான இ. த. ஜெயசீலன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாநகர சபை முதல்வர் வி. மணிவண்ணன், சிறப்பு விருந்தினராக இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் அ. உமாமகேஸ்வரன் ஆகியோர் பங்கேற்கவுள்ளனர். இந்நிகழ்வில் முனைவர் திருநாவுக்கரசு கமலநாதன் (அவுஸ்திரேலியா) நல்லைக்குமரன் மலரை வெளியிட்ட முதல் பிரதியை தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் பிரதிநிதி பெற்றுக்கொள்வார். அத்துடன், திருக்கேதீச்சர ஆலய திருப்பணி சபைக்கு யாழ். விருது வழங்கப்படும். ஆலய திருப்பணிக்கு பேருதவி புரிந்த இந்திய அரசு சார்பில் இந்திய துணைத் தூதரகத்துக்கு சிறப்பு பாராட்டு கௌரவமளிக்கப்படவுள்ளது.

# பூநகரி கறுக்காய் தீவுக்கான பஸ் சேவை ஆரம்பம்

**முல்லைத்தீவு குறூப் நிருபர்**

கிளிநொச்சி பூநகரி கறுக்காய் தீவுக்கான இலங்கை போக்குவரத்து சபையின் பஸ் சேவை நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. பூநகரி பிரதேச சபையின் தவிசாளர் சி.சிறிரஞ்சனினால் இலங்கை போக்குவரத்து சபையின் கிளை முகாமையாளரிடம் கடித மூலமாகவும் நேரடியாகவும் விடுக்கப்பட்ட வேண்டுகோளின் அடிப்படையில் பஸ் சேவை நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

முற்பகல் 7.30 மணிக்கு பூநகரி வாடியடியில் இருந்து ஞானிமடம் ஊடாக கறுக்காய் தீவினை பஸ் சென்றடையும். இதே வழித்தடத்தில் பிற்பகல் 1.30 மணிக்கும் பஸ் சேவை நடைபெறும். இப்பகுதியில் ஞானிமடம் பாடசாலை, கறுக்காய் தீவு மகா வித்தியாலயம், அண்மையில் திறக்கப்பட்ட பூநகரி கல்விக் கோட்ட பணிமனை என்பன உள்ளன.



ஞானிமடம், கொல்லங்குறிச்சி ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் வாழ்கின்ற 300 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் பூநகரி பிரதேச வைத்தியசாலைக்கு வருவதற்கு போக்குவரத்து நெருக்கடியினை எதிர்கொண்டிருந்தனர்.

இந்நிலையில் மீண்டும் பஸ் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளதால் பெரும் உதவியாகவுள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர். பாடசாலைகளுக்குச் செல்கின்ற மாணவர்கள் ஆசிரியர்களின் போக்குவரத்திற்கு பெரும் நன்மை ஏற்பட்டுள்ளது. இதேவேளை பூநகரியின் வலைப்பாடு, பள்ளிக்குடா, செம்மங்குன்று ஆகிய கிராமங்களுக்கும் இலங்கை போக்குவரத்து சபையின் பஸ் சேவைகள் இடம் பெற வேண்டும் என்பது மக்களின் கோரிக்கையாகும்.

# கிளிநொச்சி வட்டக்கச்சி பிரதேச வைத்தியசாலை மருத்தகம் தீக்கிரை



**(பரந்தன் குறூப் நிருபர்)**

கிளிநொச்சி வட்டக்கச்சி பிரதேச வைத்தியசாலையின் மருத்தகம் தீக்கிரையாகியுள்ளது. இச்சம்பவம் நேற்றுமுன்தினம் (08.08.2022) இரவு இடம்பெற்றுள்ளது. மருந்தகத்தில் ஏற்பட்ட மின்னொழுக்கு, தீவிபத்துக்கு காரணமாக இருக்கலாம் என நம்பப்படுகிறது.

இதன்போது, மருந்தகத்தில் வைக்கப்பட்டிருந்த மருந்துகள் உட்பட பல பொருட்கள், தளபாடங்களுக்கு சேதம் ஏற்பட்டுள்ளதாக சுகாதார துறையினர் தெரிவித்துள்ளனர்.

இருப்பினும் அன்றையதினம் மருத்துவசேவைகள் தடையின்றி சிறப்பாக ஒழுங்குபடுத்தப்பட்ட மக்களுக்கான மருத்துவசேவை தடையின்றி நடைபெற்று வருகிறது.

இச்சம்பவம் தொடர்பில்,கிளிநொச்சி பொலிஸாரும், தடயவியல் பிரிவினரும் மற்றும் பிராந்திய சுகாதார சேவையினரும் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# அராலி, நீர்வேலி, நாரந்தனையில் சிறப்பு சொற்பொழிவுகள்

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் ஆண்டிலே (2022) இளம் இந்துச் சிறார்களிடையே நாவலர் பெருமான் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும்முகமாக, யாழ்.மாவட்ட இந்து சமய அறநெறிப் பாடசாலைகளில் 'வாராந்தச் சொற்பொழிவும் மாதந்தோறும் நாயன்மார் குருபூஜை நிகழ்வும்' நடைபெற்று வருகின்றன.

33 ஆவது சொற்பொழிவு நிகழ்வு அராலி ஐயனார் அறநெறிப் பாடசாலை மண்டபத்தில் எதிர்வரும் 12.08.2022 மாலை 03.30 மணிக்கு இந்து கலாசார உத்தியோகத்தர் திருமதி அஜிதா கோபிநாத் தலைமையில் இடம்பெறவுள்ளது.

நாவலர் குருபூஜை, மற்றும் தலைமையுரை நிகழ்வுகளைத் தொடர்ந்து 'நாவலர் பெருமானின் சமூகப்பணி' எனும் தொனிப்பொருளில் இளம்சைவப்புலவர் நித்தியபாபுதரனின் சிறப்புச் சொற்பொழிவு நிகழ்வு நடைபெறும். அதனைத் தொடர்ந்து சொற்பொழிவிலிருந்து வினாக்கள் தொடுக்கப்பட்டு மாணவர்களுக்கான பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளது.

அதேதினத்தன்று மாலை 5 மணிக்கு நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானத்தில் சமய ஜோதி கதிர்காமன் நிஜலிங்கம் ஒழுங்கமைப்பில் நிகழ்வு நடைபெறும். ஆலய பிரதம குரு சிவஸ்ரீ இராஜேந்திர சுவாமிநாதக்குருக்களின் ஆசியுரையினை தொடர்ந்து பரிபாலன சபைத் தலைவர் த.சோதிலிங்கம் தலைமையுரை ஆற்றுவார். சிறப்புச்சொற்பொழிவினை இளம்சைவப்புலவர் ச.நவநீதன் 'பெரியபுராணத்தில் பெண்ணடியார்கள்' என்னும் விடயப்பொருளில் ஆற்றுவார்.

யாழ்ப்பாணம் ஊர்காவற்றுறை நாரந்தனை வடக்கு பண்டாரபுலம் தான்தோன்றி ஸ்ரீ மனோன்மணி அம்பாள் கோயிலில் மாதாந்த பௌர்ணமி விரதகால சிறப்புச் சொற்பொழிவு நாளை வியாழக்கிழமை மாலை 6.00 மணிக்கு இடம்பெறவுள்ளது. நாவலர் குருபூஜை நிகழ்வைத் தொடர்ந்து தலைமையுரையினை சிவகாந்தனும், சிறப்புச்சொற்பொழிவினை சைவப்புலவர் சி. கா.கமலநாதனும் ஆற்றுவார்கள். 'பஞ்சம் பசி தீர்க்கும் பூரணை' என்னும் விடயப்பொருளில் சொற்பொழிவு நிகழ்வு நடைபெறும். சொற்பொழிவில் இருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

(அ. கனகசூரியர்)

# பிரான்சில் இளம் குடும்பஸ்தர் உயிரிழப்பு

**(புதுக்குடியிருப்பு விசேட நிருபர்)**

இலங்கையைச் சேர்ந்த நபரொருவர் பிரான்சில் உயிரிழந்துள்ளார். உயிரிழந்தவர் 31 வயதுடைய தனபாலசிங்கம் தர்சிகன் என்ற இளம் குடும்பஸ்தர் என தெரியவந்துள்ளது. பிரான்சில் திருமணம் செய்து இரண்டு வருடங்களில் இரத்தப்புற்றுநோய் காரணமாக உயிரிழந்துள்ள இவர் கிளிநொச்சி பளையினை சேர்ந்தவராவார். தாயகத்தில் யுத்தம் மற்றும் ஏனைய காரணங்களினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு விண்மீன் அமைப்பு ஊடாக பல உதவிகளை செய்து வந்தவர்.

# வவுனியாவில் மீண்டும் கொவிட் 19 மரணம்

**வவுனியா விசேட நிருபர்**

வவுனியாவில் மீண்டும் கொவிட் 19 தொற்று காரணமாக ஒருவர் மரணமடைந்துள்ளதாக சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். உயிரிழந்தவர் செட்டிகுளம், நேரியகுளம் பகுதியைச் சேர்ந்த 66 வயதுடைய நபர் என சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். வவுனியா, செட்டிகுளம், நேரியகுளம் பகுதியைச் சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவர் மூச்சு திணறல் காரணமாக வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார். அவரிடம் மேற்கொள்ளப்பட்ட பி.சீ.ஆர் பரிசோதனையில் அவருக்கு கொவிட் 19 தொற்று உறுதி செய்யப்பட்டது. இந்நிலையில் வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த போது சிகிச்சை பலனின்றி கொவிட் 19 தொற்று காரணமாக குடும்பஸ்தர் நேற்று (09.08) மரணமடைந்துள்ளார்.

# கிழக்கின் குரல்



பொத்துவில் கிரான் கோவை விவசாய காணியில்

## சிவில் பாதுகாப்புப் படையினர் நெற்செய்கை மேற்கொள்ளும் அனுமதி தற்காலிக நிறுத்தம்

**ஒலுவில் விசேட நிருபர்**



எஸ்.எம்.எம்.முஷாரப் எம்.பி

நெற் செய்கை பண்ணுவதற்காக சிவில் பாதுகாப்பு படையினருக்கு அனுமதி வழங்கி இருந்த பொத்துவில் கிரான் கோவை விவசாய காணியில் செய்கை பண்ணுவதை தற்காலிகமாக இடைநிறுத்தியுள்ளதாக, அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம். முஷாரப் தெரிவித்தார்.

இது தொடர்பான உயர் மட்ட கலந்துரையாடல் அம்பாறை மாவட்ட செயலகத்தில் திங்கட்கிழமை (08) நடைபெற்றது. இதில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கமைய செய்கை பண்ணுவதற்கு துப்பரவு செய்யப்பட்ட காணிகளை தற்காலிகமாக இடை நிறுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும், இது தொடர்பாக மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்படும் வரை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

பொத்துவில் கிரான் கோவை விவசாய காணியை அதன் உரிமையாளர்களுக்கு மீள வழங்குவதற்குரிய நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு இது தொடர்பாக மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ள நிலையில் சிவில் பாதுகாப்பு படையினருக்கு செய்கை பண்ணுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

இக் கலந்துரையாடலில் மாவட்ட அரசாங்க அதிபர் ஜே.எம்.ஏ. டக்ளஸ், லகுகல, பொத்துவில் பிரதேச செயலாளர்கள், வன இலாகா மற்றும் வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## இந்திய கொன்சுலேட் ஜெனரல் சம்மாந்துறைக்கு விஜயம்

**சவளக்கடை குறூப் நிருபர்**



ஹம்பாந்தோட்டையிலுள்ள இந்திய கொன்சுலேட் ஜெனரல் அலுவலகத்தின் கொன்சல் ஜெனரல் டிபின் பி. ஆர். சம்மாந்துறைக்கு நேற்று முன்தினம் திங்கட்கிழமை (08) விஜயமொன்றை மேற்கொண்டார்.

இவ்விஜயத்தின் போது சம்மாந்துறை பிரதேச சபை தவிசாளரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான ஏ.எம்.முஹம்மட் நௌஷாடை பிரதேச சபை அலுவலகத்தில் சந்தித்து கலந்துரையாடினார்.

இதன்போது பிரதேசத்தின் கல்வி, கலாசாரம், அபிவிருத்தி மற்றும் சமகால அரசியல் தொடர்பாக இவர் கேட்டறிந்து கொண்டதுடன், இலங்கையில் நிலவும் பொருளாதார நெருக்கடி மற்றும் அரசியல் ஸ்திரத்தன்மையற்ற நிலைமையால் மக்கள் மீது சுமத்தப்பட்ட பொருளாதார நெருக்கடிகள் தொடர்பாகவும் விலைவாசி உயர்வு காரணமாக மக்கள் எதிர் நோக்கும் துன்பங்களுக்கு முகங்கொடுத்து வருகின்றமை தொடர்பாகவும் எடுத்துக் கூறப்பட்டது.

எதிர்காலத்தில் இப்பிரதேசத்தின் கல்வி உள்ளிட்ட மக்களின் அடிப்படை தேவைகளையும் மேம்படுத்த இந்திய அரசாங்கத்தின் ஒத்துழைப்பின் அவசியம் குறித்தும் தவிசாளர் நௌஷாத் தெரிவித்தார்.

## கொக்கட்டிச்சோலையில் மாணவியின் சடலம் மீட்பு

**மண்டூர் தினகரன் நிருபர்**

கொக்கட்டிச்சோலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மகிழடித்தீவு பிரதேசத்தில் இளம் யுவதி தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்ட சம்பவம் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மகிழடித்தீவு (தெற்கு) கொக்கட்டிச்சோலை பிரதேசத்தைச் சேர்ந்த மாணவியான குருகுலசிங்கம் டிவைனா (14) என்பவரே தனது வீட்டு அறையிலிருந்து தூக்கிட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டவராவார்.

சம்பவ தினத்தன்று மாணவியின் பெற்றோர் தங்களின் வயலினை பார்வையிட சென்றிருந்த போது வீட்டில் யாரும் இல்லாத நிலையில் பாடசாலை கற்கையினை முடித்துவிட்டு வீடு திரும்பிய நிலையில் சுருக்கிட்டு தற்கொலை செய்து கொண்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

மட்டக்களப்பு மாவட்ட நீதிமன்ற நீதிவான் பீற்றர் போல் சம்ப இடத்திற்கு சென்று சடலத்தினை பார்வையிட்டார். பின்னர் பிரேதத்தை பிரேத பிரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கும் படி பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.சம்பவம் பற்றிய மேலதிக விசாரணைகளை கொக்கட்டிச்சோலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## மட்டக்களப்பு – கொக்குவில் சந்தை கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டல்

**மட்டக்களப்பு குறூப் நிருபர்**



உலக வங்கியின் 5 மில்லியன் ரூபாய் நிதி அனுசரணையுடன் அமைக்கப்படவுள்ள மட்டக்களப்பு கொக்குவில் சந்தை கட்டடத்திற்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்று நடைபெற்றது.

பொது மக்களின் நலன் கருதி அப்பகுதி மக்கள் பொருட்களை இலகுவாக பெற்றுக் கொள்ளும்நோக்குடனும்,வியாபாரிகள் தமது பொருட்களை பாதுகாப்பாக விற்பனை செய்யவும் அமைக்கப்படவுள்ள குறித்த சந்தை கட்டடம் பயனுள்ளதாக அமையவுள்ளது.

மட்டக்களப்பு மாநகர ஆணையாளர் நா.மதிவண்ணன் தலைமையில் இடம்பெற்ற அடிக்கல் நடும் நிகழ்விற்கு பிரதம அதிதியாக மட்டக்களப்பு மாநகர முதல்வர் தியாகராஜா சரவணபவன் கலந்துகொண்டு அடிக்கல்லினை நாட்டி வைத்து வேலைத்திட்டத்தினை ஆரம்பித்து வைத்துள்ளார்.

அம்கோர் நிறுவனத்தால் பல்கலை

## மாணவர்களுக்கு திறன் விருத்தி செயற்பாடுகள்

**புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்**

கெல்விட்டாஸ் மற்றும் GCERF நிறுவனங்களின் நிதி அனுசரணை மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் தேசிய செயலகத்தின் பங்குபற்றலுடன் அம்கோர் தேசிய தன்னார்வ தொண்டு நிறுவனத்தினால் மட்டக்களப்பு மாவட்டத்தில் கிழக்கு பல்கலைக்கழக மாணவர்களுக்கிடையில் அமுல்படுத்தப்படும் 'இளைஞர்கள் மத்தியில் வன்முறை தீவிரவாதத்தை இல்லாதொழித்தல்' எனும் வேலைத்திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட பல்கலைக்கழக மாணவர்களுக்கான திறன் விருத்தி செயற்பாடுகள் உட்பட பல்வேறு செயற்பாடுகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

அதன் முதற்கட்டமாக கடந்த வெள்ளிக்கிழமை தெரிவு செய்யப்பட்ட 20 மாணவர்களுக்கான மூன்று நாள் வதிவிட பயிற்சிப்பட்டறை தன்னாமுனை மியானி மண்டபத்தில் ஆரம்பிக்கப்பட்டது.

ஆரம்ப நிகழ்வில் கிழக்கு பல்கலைக்கழக தொழில் வழிகாட்டல் பிரிவின் தொழில் வழிகாட்டல் ஆலோசகர் பி.விவேகானந்தன், கெல்விட்டாஸ் நிறுவன திட்ட உத்தியோகத்தர் ரமேஷ், AMCOR நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ப.முரளிதரன் மற்றும் AMCOR நிறுவனத்தின் சிரேஷ்ட நிகழ்ச்சித்திட்ட முகாமையாளர் யோ.சிவயோகராஜன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம்

**பாலமுனை விசேட நிருபர்**



அட்டாளைச்சேனை பிரதேசத்தைச் சேர்ந்த ஆதம்லெவ்வை நியாஸ் சட்டத்தரணியாக உயர் நீதிமன்ற நீதியரசர்கள் முன்னிலையில் அண்மையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

அட்டாளைச்சேனை அந்நூர் மகா வித்தியாலயம், அட்டாளைச்சேனை தேசிய பாடசாலை ஆகியவற்றின் பழைய மாணவரான இவர், சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தராகவும் பணியாற்றி வருகின்றார்.

இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் கலைத்துறையில் (சமூகவியல்) விசேட பட்டத்தினையும், இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் சட்டமாணி பட்டத்தினையும் பெற்றுள்ளார்.

இவர், அட்டாளைச்சேனையைச் சேர்ந்த ஐ.எல்.ஆதம்லெவ்வை, எம்.கதீஜா உம்மா தம்பதியினரின் சிரேஷ்ட புதல்வராவார்.

## கல்முனையில் கட்டாக்காலி மாடுகளால் விபத்துக்கள்

**பாண்டிருப்பு தினகரன் நிருபர்**



கல்முனை பிரதேசத்தில் கட்டாக்காலி மாடுகளின் தொல்லை அதிகரித்துள்ளது. இதன் காரணமாக வீதியில் பயணிப்போர் விபத்துக்குள்ளாகி வருகின்றனர். கல்முனை மாநகர சபை இவ் கட்டாக்காலி மாடுகளின் தொல்லையை இல்லாதொழிப்பதற்கு உறுதியான நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும்எனபொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

அண்மைக்காலமாக கல்முனை நகர் பகுதி அதனை அண்டிய பிரதேசங்களிலும் கட்டாக்காலி மாடுகள் அங்கும் இங்குமாக நடமாடிவருகின்றது. வீதியின் நடுவில் படுத்துறங்குவதும், போக்குவரத்துக்கு இடைஞ்சலாக நிற்பதுமாக மாடுகள் அலைவதனால் வாகனங்களில் பயணிப்போர் மிகுந்த அசௌகரியங்களுக்குள்ளாகிவருவதுடன், விபத்துக்களுக்கும் உள்ளாகி வருகின்றனர். அத்துடன் பாதையோரங்களில் பயணிக்கும் பாடசாலை மாணவர்கள், முதியோர்கள் இக் கட்டாக்காலி மாடுகளால் ஆபத்துக்களையும் சந்தித்து வருகின்றனர்.

கடந்த காலங்களிலும் கல்முனை மாநகரசபையினால் கட்டாக்காலி மாடுகளின் தொல்லையைக் கட்டுப்படுத்த பல்வேறு தீர்மானங்கள் கொண்டுவரப்பட்ட போதிலும் அவை நடைமுறைப்படுத்தப்படவில்லை என பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

கல்முனையில் மாட்டிறைச்சி வியாபாரத்தில் மாபியா;

## இறைச்சிக்கடைகள் இழுத்து மூடப்பட்டாலும் கட்டுப்பாட்டு விலையை விட்டுக்கொடுக்கத் தயாரில்லை

**கல்முனை விசேட நிருபர்**

முதல்வர் றகீப் உறுதி



கல்முனை மாநகராட்சி ஆள்புல எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் மாட்டிறைச்சியின் விலை கட்டுக்கடங்காமல் செல்வதைக் கருத்தில் கொண்டு, கட்டுப்பாட்டு விலையை நிர்ணயம் செய்து, அதனை இறுக்கமாக அமுல்படுத்துவதற்கு எடுத்துள்ள நடவடிக்கைகளில் இருந்து ஒருபோதும் பின்வாங்கப் போவதில்லை என மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப் தெரிவித்துள்ளார்.

இறைச்சி வியாபாரத்தில் இருந்து வருகின்ற மாபியாவை ஒழிப்பதற்கு பொது மக்கள் ஒத்துழைப்பு வழங்க முன்வர வேண்டும் எனவும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்திருப்பதாவது;

2022.08.06ஆம் திகதி சனிக்கிழமை தொடக்கம் கட்டுப்பாட்டு விலையில் மாட்டிறைச்சியை விற்பதற்கு வியாபாரிகள் இணக்கம் தெரிவித்திருந்தனர். ஆனாலும் அன்றைய தினத்தில் இருந்து பெரும்பாலான இறைச்சி வியாபாரிகள் மாடறுத்து இறைச்சிக் கடைகளை திறக்காமல், வியாபாரத்தை நிறுத்தியுள்ளனர். இன்னும் சில நாட்களுக்கு இந்நிலை தொடரலாம்.

உண்மையில், நிர்ணய விலைக்கு இறைச்சியை விற்காமல், தமது தீர்மானத்தை மீறும் இறைச்சிக் கடைகளை இழுத்து மூடுவதற்கு நான் தயாராக இருந்தேன். அதற்காக பொலிஸ் மற்றும் மாநகர சபை உத்தியோகத்தர்கள் சகிதம் கள விஜயம் மேற்கொண்டு கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள ஏற்பாடாகியிருந்தது. ஆனால் வியாபாரம் நடத்தாமல் கடைகளை அவர்களாகவே மூடியிருந்தமை முதல் வெற்றியாகும்.

மாட்டிறைச்சி வியாபாரிகளின் இணக்கப்பாட்டுடனேயே இத்தீர்மானங்களை மேற்கொண்டிருந்தோம்.

உண்மைகள் மறைக்கப்பட்டு, செலவீனங்கள் அதிகமாகக் காட்டப்பட்டே மாட்டிறைச்சி வியாபாரத்தில் கொள்ளை இலாபம் அடிக்கப்படுகின்றமை நிரூபிக்கப்பட்டுள்ளதால், இந்த மாபியாவை எந்த வகையிலும் அனுமதிக்க முடியாது. இந்த விடயத்தில் எத்தகைய விமர்சனங்கள், சவால்கள் வந்தாலும் அவற்றை முறியடித்து,மக்களுக்கு நியாய விலையில் மாட்டிறைச்சி கிடைப்பதை உறுதிப்படுத்துவதற்கு அதீத பிரயத்தனங்களை மேற்கொண்டு வருகின்றோம் என்றார்.

## சட்ட விரோதமாக சாராயம் விற்றவருக்கு 10,000 ரூபா அபராதம்

**பாலமுனை தினகரன் நிருபர்**

திருக்கோவில் பொலிஸ் பிரிக்கு உட்பட்ட தாண்டியடி பகுதியில் அனுமதிபத்திரமின்றி சட்ட விரோத சாராய விற்பனையில் ஈடுபட்டவருக்கு 10,000 ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

180 மில்லி லீட்டர் சாராயத்தையும், 625 மில்லி லீட்டர் பியர் ஆகியவற்றையும் அனுமதி பத்திரமின்றி விற்பனை செய்தமைக்காக திருக்கோவில் பொலிஸார் ஒருவரை கைது செய்து அக்கரைப்பற்று நீதிமன்ற நீதிபதி எம். எச்.எம்.ஹம்ஸா முன்னிலையில் ஆஜர் செய்த போது மேற்படி குற்றங்களுக்காக 10,000 ரூபா அபராதம் விதித்தார்.

அண்மைக் காலமாக திருக்கோவில் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் அனுமதிபத்திரமின்றி போதைப்பொருள் விற்பனையில் ஈடுபடுவோர் எண்ணிக்கை அதிகரித்து காணப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.



## தியாகி அறக்கொடை நிதியத்தினால் ஊடகவியலாளர்களுக்கு உதவி

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி மிக்க இச்சூழலில் பல்வேறு சவால்களுக்கு மத்தியில் செய்தி சேகரிப்பு பணியில் ஈடுபட்டு சமூகப் பொறுப்போடு செய்திகளை சம்பந்தப்பட்டவர்களுக்கு கொண்டு செல்லும் பல்வேறு ஊடகங்களில் பிராந்திய செய்தியாளர்களாக களப் பணியாற்றும் மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த தமிழ், முஸ்லிம் ஊடகவியலாளர்களுக்கு தலா பத்தாயிரம் ரூபாய் (10,000) வீதம் அன்பளிப்பு தொகை வழங்கி வைக்கப்பட்டது.

தியாகி அறக்கொடை நிதியத்தின் ஸ்தாபகத் தலைவரும் சமூக செயற்பாட்டாளருமான 'சமூகஜோதி' வாமதேவன் தியாகேந்திரனிடம் மட்டக்களப்பு கல்குடா மீடியா போரத்தின் பணிப்பாளரும் ஊடகவியலாளருமான எம். ரீ.எம்.பாரிஸ் விடுத்த வேண்டுகோளுக்கிணங்க தெரிவு செய்யப்பட்ட 30 தமிழ், முஸ்லிம் ஊடகவியலாளர்களுக்கு பணப் பரிசு வழங்கி வைக்கப்பட்டது.

இதற்கமைவாக இவ் அன்பளிப்பு தொகையினை வழங்கும் நிகழ்வு கல்குடா மீடியா போரத்தின் பணிப்பாளர் எம்.ரீ.எம்.பாரிஸ் தலைமையில் ஏறாவூர் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இந்நிகழ்வின் பிரதம அதிதியாக மட்டு மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன் கலந்து சிறப்பித்தார்.

# நகர்வலம்











ஜனாதிபதியின் தொழிற்சங்கங்களின் பணிப்பாளர் நாயகமாக நியமிக்கப்பட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சமன் ரத்னபிரிய நேற்று காலை கடமைகளை பொறுப்பேற்றார். இந்நிகழ்வில் கலந்துகொண்ட இரத்தினபுரி மாவட்ட ஐக்கிய தேசிய கட்சியின் பிரதம அமைப்பாளர் எஸ். ஆனந்தகுமார் அவருக்கு வாழ்த்துக்களை தெரிவித்துக்கொண்ட போது எடுத்த படம்.

நகர்ப்புற குடியிருப்புக்களில் அதிகரித்து வரும்

# போதைப்பொருள் கடத்தல் மற்றும் சமூக விரோத செயல்களை தடுக்க அரசாங்கம் நடவடிக்கை

*அமைச்சர் பிரசன்ன ரணதுங்க*

நகர்ப்புற குடியிருப்புக்களை அண்மித்து வாழுகின்ற குழந்தைகள் மற்றும் இளைஞர்களை இலக்கு வைத்து செயல்படுகின்ற போதைப்பொருள் மற்றும் சமூக விரோத செயற்பாடுகளை நிறுத்துவதற்கு அரசாங்கம் விஷேட கவனம் செலுத்தியுள்ளதாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு வசதிகள் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க (8) தெரிவித்தார்.

தேவைப்பட்டால் அதற்கான புதிய சட்டத்தை உருவாக்கவும் தயார் எனவும் அவர் மேலும் வலியுறுத்தினார்.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் கீழ் நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் பொரளை 'அக்கியூனஸ்' உயர் கல்வி நிறுவனத்துடன் இணைந்து நகர்ப்புறத்தில் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் சிறுவர்களுக்காக இலவசமாக செயற்படுத்தப்படுகின்ற 3 மாத ஆங்கில மொழிப்பாடநெறியின் சான்றிதழ் வழங்கும் வைபவத்திலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.



இந்தப் பாடநெறியைப் பயின்ற ஒரு குழந்தைக்காக நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபையால் மாதாந்தம் ரூபா 15000 செலவிடப்படுகிறது. அதற்கேற்ப இந்தப் பாடநெறிக்காக குறித்த அதிகார சபையால் ஐந்து இலட்சத்திற்கு மேற்பட்ட தொகை செலவிடப்பட்டுள்ளது. இந்தப் பாடநெறியில் கலந்து கொண்ட 33 மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வு அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவின் தலைமையில் அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

அமைச்சர் இங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

நகர்ப்புற குறைந்த வருமானம் பெறும் குடியிருப்புக்களை அண்மித்துள்ள பகுதிகளில் போதைப் பொருள் பிரச்சினை மற்றும் சமூக விரோதச் செயல்கள் அதிகமாக இருக்கின்றன. போதைப்பொருள் வர்த்தகர்கள் தற்போது சிறுவர்களை தமது பிடிக்குள் கொண்டு வந்து கொண்டிருக்கிறார்கள். இந்தப் பிரச்சினையில் இருந்து சமூகத்தைப் பாதுகாப்பதற்காக அரசு அர்ப்பணிப்புடன் வேலை செய்கின்றது. போதைப் பொருள் பாவனையின் பாதகங்களைப் பற்றி பொலிஸ் மற்றும் மத வழிபாட்டு நிலையங்களை அடிப்படையாகக் கொண்டு மக்களை அறிவுறுத்தும் வேலைத்திட்டங்களை நாங்கள் தற்போது செயற்படுத்தி வருகின்றோம்.

போதைப்பொருள் வர்த்தகர்களுக்கு எதிராக சட்டத்தை இறுக்கமாக நடைமுறைப்படுத்துவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாதுகாப்புத் தரப்பினருக்கு கட்டளை இட்டுள்ளார். நகர்ப்புற குடியிருப்புக்களை அண்மித்து போதைப்பொருள் குற்றச் செயல்களை தடுப்பதற்காக நாங்கள் எதிர்காலத்தில் விஷேசமான வேலைத் திட்டங்களை செயற்படுத்துவோம். தேவைப்பட்டால் அதற்காக புதிய சட்டங்களைக் கொண்டு வருவதற்கும் நாங்கள் தயாராக இருக்கின்றோம்.

நாம் 21 ஆம் நூற்றாண்டின் தொழில்நுட்ப உலகில் வாழ்கிறோம். இன்றைய குழந்தைகள் தொழில்நுட்பத்துடன் வாழ்கின்றனர். உலகை வெல்ல நாங்கள் தொழில்நுட்பத்துடன் இணைந்து முன்னேற வேண்டும். தொழில்நுட்பத்தை மறந்து வேலை செய்ய முடியாது.

ஜனாதிபதியின் தலைமையின் கீழ் புதிய அரசு எப்போதும் இந்த குழந்தைகள் பரம்பரையை புதிய உலகுக்குப் பொருத்தமான வகையில் வடிவமைப்பதற்கு முயற்சி எடுக்கிறது. நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சுக்கு அதற்காக விஷேட வேலைத்திட்டங்கள் வழங்கப்பட்டிருப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

## தென் மாகாணத்தில் எலிக்காய்ச்சல் தொற்றுக்கு உள்ளானோர் 362 பேர்

**(மாத்தறை தினகரன் நிருபர்)**

தென் மாகாணத்தில் எலிக்காய்ச்சல் நோய் அதிகரித்து வருவதாகவும் பொதுமக்கள் எலிக்காய்ச்சல் நோய் பற்றி மிக அவதானமாக இருக்கவேண்டும் என்றும் கடந்த ஏழு மாத காலத்தில் எலிக்காய்ச்சல் நோய் பீடிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 362 ஆக அதிகரித்துள்ளதாக தென் மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் சந்திம சிறிதுங்க தெரிவித்தார்.

இவர்களில் காலி மாவட்டத்தில் 202 நோயாளர்களும் இரண்டு மரணங்களும் சம்பவித்துள்ளதாகவும் மாத்தறை மாவட்டத்தில் எலிக் காய்ச்சல் நோய் பீடிக்கப்பட்டவர்களின் தொகை 160 ஆகவும் ஆறு மரணங்கள் பதியப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வயல்வெளிகள் மற்றும் ஓடைகள் நீர்தேங்கியுள்ள இடங்களில் வெறுங்காலுடன் நடமாடுவதால் இந் நோய் ஏற்பட வாய்ப்பு உண்டென சுகாதாரப் பிரிவினர் தெரிவிக்கின்றனர்.

## இலங்கையின் துணை உயர் ஸ்தானிகர் அவுஸ்திரேலிய தூதரக அதிகாரி சந்திப்பு

சென்னையில் உள்ள அவுஸ்திரேலிய துணைத் தூதரக அதிகாரி சாரா கிர்லேவ், சென்னையில் உள்ள இலங்கைக்கான துணை உயர் ஸ்தானிகர் டாக்டர் டி. வெங்கடேஷ்வரனைச் சந்தித்து இலங்கையிலிருந்து சட்டவிரோத இடம்பெயர்வு, கடல்சார் பாதுகாப்பு மற்றும் பிராந்தியத்தின் பாதுகாப்பு குறித்து கலந்துரையாடினார்.



அவுஸ்திரேலிய எல்லைப் படையின் செயல் தளபதி கிளாரி ரீஸ், அவுஸ்திரேலிய எல்லைப் படையின் ஆலோசகர் திருமதி ஜோப்ரியர் மற்றும் அவுஸ்திரேலிய மிஷனைப் பிரதிநிதித்துவப் படுத்தும் கூட்டு முகவர் பணிக்குழுவின் உதவி இயக்குநர் பிரேம் வாசுதேவன் மற்றும் முதல் செயலாளர் திருமதி பிரசாந்தி கிருஷ்ணமூர்த்தி மற்றும் இக்கலந்துரையாடலில் இலங்கை தூதரகத்தின் பிரதிநிதியாக இரண்டாவது செயலாளர் சுபுன் தேசபிரேமவும் கலந்து கொண்டார்.

## தேசிய கராத்தே போட்டியில் இரு தங்கம் வென்ற மாணவன்



தேசிய கராத்தே சம்மேளத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட 12 வது தேசிய கராத்தே போட்டிகளில் பங்குப்பற்றிய வாழைச்சேனை வை. அஹமட் வித்தியாலயத்தை சேர்ந்த அரபாத் மொஹமட் அதீப் 8வது பிரிவில் 2 தங்கப்பதக்கங்களை வென்று பாடசாலைக்கும் வாழைச்சேனை மண்ணுக்கும் பெருமை சேர்த்துள்ளார். இவர் வாழைச்சேனையின் பிரபல்யமான கிரிக்கெட் துடுப்பாட்ட வீரர் யாசீர் அரபாத் மற்றும் பாத்திமா ஆகியோரின் புதல்வராவார்.

## புத்தளத்தில் இரத்ததான முகாம்

**(புத்தளம் தினகரன் நிருபர்)**

புத்தளம் ஜனாதிபதி விஞ்ஞான கல்லூரியின் பழைய மாணவர் சங்கம் ஏற்பாடு செய்த இரத்ததான நிகழ்வு அண்மையில் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நடைபெற்றது.

கல்லூரி அதிபர் ஐ.எல்.சிராஜுதீனின் வழிகாட்டலில் புத்தளம் தள வைத்தியசாலையுடன் இணைந்து ஜனாதிபதி விஞ்ஞான கல்லூரியின் பழைய மாணவர் சங்கம் இந்த இரத்ததான முகாமை ஏற்பாடு செய்திருந்தது.

பிரதேசத்தைச் சேர்ந்த ஆண்கள், பெண்கள் என 150 க்கும் மேற்பட்ட பொதுமக்கள் இந்த இரத்ததான நிகழ்வில் ஆர்வத்துடன் பங்கேற்றனர்.



வெலிகம பிரதேச செயலகத்தில் இயங்கிவரும் சர்வமத குழுவினரின் ஒன்று கூடலும் பயிற்சி நெறியொன்றும் அண்மையில் இடம் பெற்றது. இதில் இஸ்லாம், பௌத்தம், கிறிஸ்தவ மதகுருமார்களும் கிராம உத்தியோகத்தர்களும் மற்றும் அதிகாரிகளும் கலந்து சிறப்பிப்பதை படங்களில் காணலாம். (படங்கள்: வெலிகம தினகரன் நிருபர்)

தென் மாகாண பாடசாலை மாணவர்களுக்கு

## சிசு செறிய பஸ் சேவையை அதிகரிக்க நடவடிக்கை

**(மாத்தறை தினகரன் நிருபர்)**

தென் மாகாணத்தில் பாடசாலை பஸ் சேவையை அதிகரிக்க நடவடிக்கையெடுக்கப்பட்டுள்ளதாக இலங்கை போக்குவரத்துச் சபையின் றுகுணு பிரதேச முகாமையாளர் ஆர். என். பிரபாத் குமார் தெரிவித்தார்.

தென் மாகாணத்தில் பாடசாலைக்குச் செல்லும் மாணவர்களின் நலன் கருதி அவர்கள் உரிய நேரத்தில் கஷ்டமின்றி பாடசாலைகளுக்கு செல்வதற்காக வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதே இதன் நோக்கமாகும் என்றும் அவர் தெரிவித்தார்.



இதுவரை தென் மாகாணத்தில் 52 சிசு செறிய பஸ் வண்டிகளே சேவையிலீடுபடுத்தப்பட்டிருந்த நிலையில் இந்த எண்ணிக்கையை 68ஆக அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

## பசுமாடுகளை திருடிய கடற்படை சிப்பாய் கைது

**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**

மூன்று பசுமாடுகளை திருடி மூன்று இலட்சம் ரூபாவிற்கு விற்பனை செய்த ஹொரவப்பொத்தானை விலோவெவ பகுதியைச் சேர்ந்த கடற்படை சிப்பாய் ஒருவரை ஹொரவப்பொத்தானை பொலிஸார் (07) காலை கைது செய்துள்ளனர்.

கொழும்பு கடற்படை தலைமையகத்தில் கடமையாற்றி வரும் ஹொரவப்பொத்தானை விலோவெவ பகுதியைச் சேர்ந்த 29 வயது சிப்பாய் ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளவராவர்.

8. அனைத்து விலைமனுக்களுடனும், சேவை வழங்குநர் ஏற்றுக்கொள்ளும் விதமாக விலைமனுப்பிணையம் மாதிரிப்படிவத்திற்கமைவாக (இதற்காக நிர்மாணப் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனம் (Institute for Construction, Training & Development ICTAD) மூலம் வெளியிடப்படும் அங்கீகாரம் பெற்ற விலைமனு ஆவணத்தில் அடங்கியுள்ள தொகுதி இலக்கம் 09 (Standared Bidding Document - Section 09) இல் அடங்கியுள்ள விலைமனுப் பிணையத்திற்கான மாதிரிப் படிவம் உபயோகப்படுத்தப்படல் வேண்டும்.) இலங்கையில் நடைமுறைப்படுத்தப்படும் வங்கியொன்றிலிருந்து (இலங்கை மத்திய வங்கியில் பதிவு செய்யப்பெற்றுள்ள) பெற்றுக் கொள்ளப்பட்ட அல்லது நிர்மாணக் காப்புறுதி நிதியத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட விலைமனுப் பிணையமொன்று அல்லது உரித்தான விலைமனுப் பிணையத்திற்கான தொகையைப் பல்கலைக்கழக சிறாப்பரிடம் வைப்புச் செய்து பெற்றுக்கொள்ளும் பற்றுச்சீட்டு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

**தலைவர், திணைக்களப் பெறுகைக்குழு,**
**களனிப் பல்கலைக்கழகம்**
**தளுகம, களனிய.**
**2022.08.08**


BE BETTER INFORMED!

News you can trust now free on your mobile pho

Dinamina Daily News Thinakaran

AVAILABLE AT



Visit - apps.lakehouse

DOWNLOAD TODAY!

LAKE HOUSE


# இலங்கை சனநாயக சோஷலிச குடியரசு அரசாங்கம்
## நெடுஞ்சாலைகள் அமைச்சு
## வீதி அபிவிருத்தி அதிகாரசபை
# விலைமனுக்களுக்கான அழைப்பு

1. கீழே விபரிக்கப்பட்டுள்ள செயற்றிட்டங்களுக்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் சார்பாக, அதிவேக நெடுஞ்சாலை செயற்பாடு பராமரிப்பு மற்றும் முகாமைத்துவ பிரிவு பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை கோருகின்றார்.

| ஒப்பந்த இலக்கம் | செயற்றிட்டத்தின் பெயர் | இடை நிகழ்வுகள் அடங்கலாக பொறியியலாளரின் மதிப்பீடு (மில். ரூபாவில்) | ஒப்பந்தக் காலம் (நாட்காட்டி நாட்களில்) | CIDA தரம் | விலை மனுப்பிணை |
|---|---|---|---|---|---|
| RDA/EOM&M/ GOSL/CKE/ Corr/@APP /2022/07 | RECTIFICATION OF SETTLEMENTS AT APPROACHES OF STRUCTURES ON COLOMBO KATUNAYAKE EXPRESSWAY | 34.7 mn | 56 | C4 & C5 | 450,000.00 |

2. விலைமனுக்கோரலானது தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.

3. ஒப்பந்தத்தை வழங்குவதற்காக, சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையுடன் நெடுஞ்சாலைகள் விஷேடத்துவத்தில் C4&C5 தரத்தில் அல்லது உயர் தரத்தில் தற்போது பதிவு பெற்றிருத்தல் வேண்டும்.

4. ஆர்வமுள்ள விலைமனுதாரர் மேலதிக விபரங்களை அலுவலக நேரங்களில், தேவைப்படின், பண்டாரகம, வல்கம, கஹட்டகஹஹேன, வீதி அபிவிருத்தி அதிகாரசபை (EOM&M) இன் பணிப்பாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். (தொலைபேசி: 011-3047806. தொலைநகல்: 0382289560. என்ற இலக்கத்தின் வழியாக பெற்றுக் கொள்ளலாம்.

5. கேள்விக்கு முன்னரான கூட்டம் 2022.08.30 ஆம் திகதியன்று பி.ப. 1.45 மணிக்கு EOM&M இன் சீதுவ வீதி அபிவிருத்தி அதிகார சபை பராமரிப்பு மற்றும் முகாமைத்துவ பிரிவு, நெடுஞ்சாலை செயற்பாடு மேலதிக பணிப்பாளர் அலுவலகத்தில் நடைபெறுவதோடு தேவைப்படின், அதன் பின்னர் உடனடியாகவே தளவிஜயமொன்று ஒழுங்கு செய்யப்படும்.

கேள்விக்கு முன்னரான கூட்டத்திற்கு சமுகமளிக்காமை விலைமனுவுக்கு தகைமையற்றதாக ஒப்பந்தம் வழங்குவதற்கு தகைமையற்றதாக கொள்ளப்படும்.

6. 2022.08.10 ஆம் திகதியிலிருந்து 2022.09.05 ஆம் திகதி வரையும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 1.15 மணி வரையும் 8,000 + 960 ரூபாவை (பெசேவ) மீளளிக்கப்படாத கட்டணமாக செலுத்திய பின்னர், பண்டாரகம, வல்கம, கஹட்டகஹஹேன, வீதி அபிவிருத்தி சபை, EOM&M பிரிவு பணிப்பாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறைமை ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும். 1987 ஆண்டின் 03 ஆம் இலக்க பொது ஒப்பந்தத்தின் பிரகாரம் முகவர் மற்றும் சித்திகரமான கேள்விதாரர் கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்தில் பதிவு செய்தல் வேண்டும்.

7. ஒவ்வொரு விலைமனுவும் மேலே குறிப்பிட்டவாறுள்ள விலைமனுப்பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருப்பதுடன் 2023.01.03 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.

8. 2022.09.06ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் விலைமனுக்கள் இரு பிரதிகளில் தலைவர், வீதி அபிவிருத்தி அதிகார சபை பெறுகைக் குழு, வீதி அபிவிருத்தி அதிகாரசபை, 1ம் மாடி மகநெகும மஹமெதுர, இல.216, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்ல என்ற முகவரியில் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர் சமுகமளித்திருக்கும் பிரதிநிதிகளின் முன்னிலையில் விரைவாகவே திறக்கப்படும்.

9. விலைமனுக்கள் 2022.12.06 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.

மேலே குறிப்பீடு செய்யப்பட்டுள்ள முகவரியானது பின்வருமாறு.

**தலைவர்,**
**வீதி அபிவிருத்தி பெறுகைக்குழு,**
**வீதி அபிவிருத்தி அதிகார சபை**
**1ம் மாடி, "மகநெகும, மஹமெதுர",**
**இல.216,**
**டென்சில் கொப்பேகடுவ மாவத்த,**
**பத்தரமுல்ல.**

CSIAP THE WORLD BANK

# 2022 ஜூலை 28ஆம் திகதிய விலைக்கோரல் அறிவித்தலின் திருத்தம் பற்றிய அறிவித்தல்

### இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசு, கமத்தொழில் அமைச்சு

## தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல்

### காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய செயற்றிட்டம் (CSIAP)

**செயற்றிட்ட இல.: P163742**

1. LK-MOA-292982-CW-RFB/NWP/DPDO/Canal System (1)/2022/13
2. LK-MOA-292987-CW-RFB/NWP/DPDO/Canal System (8)/2022/14
3. LK-MOA-292999-CW-RFB/NWP/DPDO/Rehb.T (10)/2022/15
4. LK-MOA-292980-CW-RFB/NWP/DPDO/Rehb.T (32)/2022/16
5. LK-MOA-292993-CW-RFB/NWP/DPDO/Rehb.T (36)/2022/17
6. LK-MOA-292998-CW-RFB/NWP/DPDO/Rehb.T (37)/2022/18
7. LK-MOA-292997-CW-RFB/NWP/DPDO/Rehb.T (46)/2022/19
8. LK-MOA-292996-CW-RFB/NWP/DPDO/Rehb.T (47)/2022/20
9. LK-MOA-292990-CW-RFB/NWP/DPDO/Canal System (61)/2022/21
10. LK-MOA-292966-CW-RFB /NWP/DPDO/Rehb.T(63) /2022/22
11. LK-MOA-292968-CW-RFB/NWP/DPDO/Rehb.T (64)/2022/23
12. LK-MOA-265838-CW-RFB/PMU(NWP)/ Rehb.T(5)/2022/18
13. LK-MOA-265923-CW-RFB /PMU(NWP)/ Rehb.T (28)2022/20
14. LK-MOA-265546-CW-RFB /PMU(NWP)/ Rehb.T (31)2022/21
15. LK-MOA-265483-CW-RFB/PMU (NWP)/ Rehb.T(55)2022/23
16. LK-MOA-267015-CW-RFB/PMU (NWP)/ Rehb.T(56)2022/24
17. LK-MOA-265538-CW-RFB /PMU(NWP)/ Rehb.T(65)/2022/26
18. LK-MOA-265540-CW-RFB /PMU(NWP)/ Rehb.T(66)/2022/27
19. LK-MOA-292994-CW-RFB /NWP/DPDO/Rehb.T (02)/2022/024
20. LK-MOA-293000-CW-RFB /NWP/DPDO/Rehb.T (03)/2022/025
21. LK-MOA-292971-CW-RFB /NWP/DPDO/Rehb.T (13)/2022/026

1. மேற்குறிப்பிடப்பட்ட பெறுகைச் செயற்பாடுகளுக்கான விலைமனுக்களுக்கான அழைப்பு 2022 ஜூலை 28ஆம் திகதிய பத்திரிகையில் முன்னர் பிரசுரிக்கப்பட்டது. தற்போது இந்த அழைப்பின் மூலம் அது திருத்தப்படுகின்றது.
2. விலைமனுக்களைச் சமர்ப்பிப்பதற்கான இறுதி நாள் 2022 ஆகஸ்ட் 25ஆம் திகதி பி.ப. 2.00 மணி வரை நீடிக்கப்பட்டுள்ளது, இதன் பிரகாரம் முன்பு பிரசுரிக்கப்பட்ட விலைக்கோரலுக்கான அழைப்பின் 3, 5, 7, 12, 13 மற்றும் 14ஆம் பிரிவுகள் தரப்பட்டுள்ள திகதிகள் பின்வருமாறு திருத்தப்படுகின்றன.
3. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை குருநாகல், யக்காபிட்டிய வீடமைப்பு, இல. 51, மிஹிந்து மாவத்தை, காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய செயற்றிட்டம், பிரதி செயற்றிட்டப் பணிப்பாளர் அலுவலகம் (வடமேல் மாகாணம்), பிரதி செயற்றிட்ட பணிப்பாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி: **037-2227950**, தொலைநகல்: **037-2227950**, மின்னஞ்சல்: **dpdcsiapnwp@gmail.com**) மற்றும் அதே இடத்தில் 2022 ஆகஸ்ட் 25ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 2.00 மணி வரையும் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சித்துப் பார்க்கலாம்.
4. விலைக்கோரல் ஆவணங்களை 2022 ஆகஸ்ட் 25ஆம் திகதி பி.ப. 2.00 மணி வரை கொள்வனவு செய்யலாம்.
5. விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளல் 2022 ஆகஸ்ட் 25ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முடிவுறுத்தப்படும்.
6. விலைமனுக்கள் 2022 டிசம்பர் 21ஆம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும்.
7. விலைக்கோரல் பிணை முறி 2023 ஜனவரி 19ஆம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும்.
8. முன்னைய விலைக்கோரல் அறிவித்தலில் தரப்பட்ட சகல தகவல்களும் மாறாமல் அவ்வாறேயிருக்கும்.

**தலைவர்,**
**சிறிய செயற்றிட்ட பெறுகைக்குழு (வடமேல் மாகாணம்),**
**காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாயத் திட்டம்,**
**பிரதி செயற்றிட்டப் பணிப்பாளர் அலுவலகம் (வடமேல் மாகாணம்),**
**இல. 51, மிஹிந்து மாவத்தை,**
**யக்கஹபிட்டிய வீடமைப்பு,**
**குருநாகல்.**
**திகதி: 2022-08-10.**

# சுகாதார அமைச்சு
# தேசிய இரத்த மாற்று சேவை

**2022 - 2023 ஆம் ஆண்டிற்கான அதிகப்படியான பிளாஸ்மா சிறு பகுதிகளின் (excess Plasma fractionation) ஏற்றுமதிக்காக உள்ளூர் பதிவுசெய்யப்பட்ட கம்பனிகளிடமிருந்து விலைமனுக்களை இலங்கை தேசிய இரத்தமாற்று சேவை (NBTS) அழைக்கின்றது.**

01. கீழ்க்காணும் உருப்படிகளின் வழங்களுக்காக பொறியிடப்பட்ட விலைமனுக்கள் 2022.08.31ம் மு.ப.10.00 மணி வரை, கொழும்பு - 05, நாராஹேன்பிட்ட, எல்விட்டிகல மாவத்த, 555/5D, தேசிய இரத்தமாற்று சேவை, பிராந்திய பெறுகைக்குழு, தலைவரால் பெற்றுக்கொள்ளப்படும்.

02.

| இல | உருப்படி | NBC அலுவலகத்தில் செலுத்த வேண்டிய மீளளிக்கப்படாத கட்டணம் |
|---|---|---|
| 2022 EX-P1-01 | Fresh Frozen Plasma | ரூ.25,000.00 |
| | Cryo poor plasma | |
| | Stored plasma | |

03. தே.இ.மா.சே, கணக்காளருக்கு காசாக மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்துவதன் பேரில் எந்த ஆர்வமுள்ள தகைமையான விலைமனுதாரர், முகவர், பிரதிகள் அல்லது ஓர் முதன்மையானவரின் சார்பாக பெயர் குறிப்பிடப்படுபவரால் கொள்வனவு செய்யப்படும். நகல்களுடனான ஓர் முழுமையான தொகுதி விலைமனு ஆவணங்களில் பொறியிடப்பட்ட விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

விலைமனுவுடன் கீழக்காணும் ஆவணங்களும் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்

அ) கொழும்பு - 05, தேசிய இரத்தமாற்று சேவைப் பணிப்பாளருக்கு எழுத்துமூல விண்ணப்பம்

ஆ) வியாபார பதிவுச்சான்றிதழ், புகைப்பட பிரதியுடன்

இ) விலைமனுதாரர் அவர்களது தயாரிப்பிற்கான உள்ளூர் முகவர்களாக நியமித்த முதன்மையாளர்களால் வழங்கப்படும் ஓர் சான்றிதழ்/கடிதம்

ஈ) விலைமனு ஆவணங்களில் உள்ளடக்கப்பட்டுள்ள மேலே குறிப்பிடப்பட்டுள்ளவைக்கும் மேலதிகமான ஏனைய நிபந்தனைகள்

04. விலைமனு ஆவணங்களை, 2022.08.09 முதல் 2022.08.30 வரை தே.இ.மா.சே கணக்காளரிடம் பெற்றுக்கொள்ள முடியும். (தொ.பே.இல - 0112368585, 2369931-35, நீடிப்பு 221

05. விலைமனுக்கள் தே.இ.மா.சே பணிப்பாளரின் அலுவலகத்தில் விலைமனுக்கள் மூடப்பட்ட பின்பு உடனடியாக திறக்கப்படும்.

06. விலைமனு ஆவணங்களை தே.இ.மா.சே', பணிப்பாளரின் அலுவலகத்தில் இலவசமாக பரிசீலிக்கலாம்.

07. மேலதிக தகவல்களை தே.இ.மா.சே பெறுகைப் பிரிவில் இருந்து பெற்றுக்கொள்ளலாம்.

**பணிப்பாளர்**
**டொக்டர் E.A.L.C.K எதிரிசிங்க**
**தலைவர்/பிராந்திய பெறுகைக்குழு,**
**தேசிய இரத்த மாற்று சேவை**
**555/5D, எல்விட்டிகல மாவத்த,**
**கொழும்பு - 05**

## ஊவா மாகாண சபை

# பெறுகை அறிவித்தல்

### சுத்திகரிப்புச் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்காக விலைமனுக்கோரல் - 2022/2023

01. ஊவா மாகாண சபையின் பிரதிப் பிரதான செயலாளர் (நிருவாகம்) அலுவலகப் பெறுகைக் குழுவின் தலைவரினால் ஊவா மாகாண சபைக் கட்டிடத்தொகுதி மற்றும் ஊவா மாகாண சபையில் விண்ணப்பித்துள்ள ஏனைய நிறுவனங்களிற்காக சுத்திகரிப்பு சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்காக குறைந்தபட்சம் மூன்றாண்டு (03) அனுபவம் உள்ள நிறுவனங்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன.
02. 2022.08.10 முதல் 2022.08.31 அன்று மு.ப.9.00 முதல் பி.ப.2.00 வரை அலுவலக நேரங்களில் பிரதிப் பிரதான செயலாளர் (நிருவாகம்) அலுவலகத்தில் அல்லது www.up.gov.lk இணையத்தில் இதற்கான விலைமனுப்படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
03. உரியவாறு பூரணப்படுத்தப்பட்ட விலைமனுக்கள், இரண்டு பிரதிகளாக பெறுகைக்குழுவிற்கு 2022.08.31 அன்று பி.ப.2.00 இற்கு முன்னர் சமர்ப்பிக்கப்படல் வேண்டுமென்பதுடன், அன்றைய தினம் பி.ப.2.00 இற்கு பதுளை, ஊவா மாகாண சபையின் பிரதிப் பிரதான செயலாளர் (நிருவாகம்) அலுவலகத்தில் விலைமனுத் திறக்கப்படும். இதற்கான மேலதிக விபரங்களை தொ.பே.இல. 055-2229393 ஐ அழைத்து இவ்வலுவலகத்தில் அல்லது www.up.gov.lk இணையதளத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
04. பெறுகைக்குழுவின் தீர்மானம் இறுதித்தீர்மானமாக அமையும்.

**தலைவர்**
**பெறுகைக்குழு,**
**பிரதிப் பிரதான செயலாளர் (நிருவாகம்) அலுவலகம்**
**ஊவா மாகாண சபை, பதுளை**
**2022.08.08**

---

## அரச அச்சுத் திணைக்களம்

### அப்புறப்படுத்தப்படும் அஸ்கொன் கடதாசிகளை (வெள்ளை மற்றும் கலவை) விற்பனை செய்வதற்கான விலைமனுக்கோரல்

N-75

**அரச அச்சுத் திணைக்களத்தின் பாவனையிலிருந்து அப்புறப்படுத்தப்படும் "அஸ்கொன்" கடதாசிகளை (வெள்ளை மற்றும் கலவை) விற்பனை செய்வதற்காக பிரசித்த விலைமனுக் கோரப்படுகின்றது.**

இதற்காக 2022.09.01 முதல் 2023.03.30 வரை மேற்படி அப்புறப்படுத்தப்படும் "அஸ்கொன்" கடதாசிகளிற்காக (வெள்ளை மற்றும் கலவை) விலைமனுச் சமர்ப்பிக்கலாம். குறித்த துறையில் 03 ஆண்டுகால அனுபவத்துடன் கடதாசி நேரடியாக ஏற்றுமதியாளர்கள் மற்றும் இலங்கையில் கடதாசி உற்பத்தி செய்யும் நிறுவனங்களின் உரிமையாளர்கள் மாத்திரம் இதற்காக விலைமனுக்களைச் சமர்ப்பிக்கலாம். (இதற்கான அனுபவங்களை ஆவணங்கள் மூலம் உறுதிப்படுத்துதல் வேண்டும்)

2022.08.10 முதல் 2022.08.23 அன்று பி.ப.2.00 வரை வார வேலை நாட்களில் அலுவலக வேலை நேரங்களில் விண்ணப்பப்படிவமொன்றிற்காக ரூபா 250.00 இற்கான கட்டணம் வீதம் செலுத்தி அரச அச்சுத் திணைக்களத்தின் ஏனைய வழங்கல் பிரிவில் இதற்கான விண்ணப்பப்படிவங்களை பெற்றுக்கொள்ளலாம்.

அனைத்து விலைமனுக்களும் 2022.08.24 அன்று பி.ப.2.00 இற்கு முன்னர் பதிவுத்தபாலில் அனுப்புதல் அல்லது திணைக்களத்தின் ஏனைய வழங்கல் பிரிவில் இதற்கான விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

அனைத்து விலைமனுக்களும் 2022.08.24 அன்று பி.ப.2.00 இற்கு முன்னர் பதிவுத்தபாலில் அனுப்புதல் அல்லது திணைக்களத்தின் ஏனைய வழங்கல் பிரிவில் வைக்கப்பட்டுள்ள விலைமனுப் பெட்டியிற் சேர்த்தல் மேற்கொள்ளலாமென்பதுடன், 2022.08.24 அன்று பி.ப.2.00 இற்கு அதற்கான விலைமனுத்திறக்கப்படும்.

விலைமனுக்களை உள்ளடக்கும் உறையின் இடதுபக்க மேல் மூலையில் "அப்புறப்படுத்தப்படும் கடதாசி அஸ்கொன் (வெள்ளை மற்றும் கலவை) கொள்வனவு 2022/2023" எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

இதற்கான விலைமனுப்பிணைத்தொகையானது, கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ளதென்பதுடன், அத்தொகையைக் காசாக அரச அச்சுத்திணைக்களத்தில் வைப்புச் செய்து பெற்றுக்கொள்ளும் பற்றுச்சீட்டின் மூலப்பிரதியான, விலைமனுக்களுடன் இணைத்து அனுப்பப்படல் வேண்டும்.

| கருமம் | விலைமனுப் பிணைத் தொகை |
|---|---|
| அப்புறப்படுத்தப்படும் கடதாசி அஸ்கொன் (வெள்ளை மற்றும் கலவை) | ரூபா 75,000.00 |

இதற்கான மேலதிக விபரங்களை வார வேலை நாட்களில் மு.ப.8.30 முதல் பி.ப.4.15 வரை தொலைபேசி இலக்கம் 0112673311 ஐ அழைத்துப் பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்**
**திணைக்களப் பெறுகைக்குழ**
**அரச அச்சுத் திணைக்களம்,**
**இல.118, டொக்டர் டனிஸ்டர் டி சில்வா மாவத்தை,**
**கொழும்பு - 08**
**2022.08.05**
**தொலைபேசி - 0112673311**
**தொலைநகல் - 0112671922**
**இணையம் - www.documents.gov.lk**

---

# பெறுகை அறிவித்தல்

## இலங்கை தேசிய பொறியியல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம் (நேர்ட் நிலையம்)

ஏக்கல - ஜாஎல

### 2022/2023 ஆண்டிற்காக நேர்ட் நிலையத்தில் துப்புரவேற்பாடு மற்றும் சுத்திகரிப்புச் சேவைகளை நடத்திச் செல்லல் மற்றும் நிலைய வளாகத்தில் புல் வெட்டுதல்.

**கேள்வி இலக்கம்: NERDC/DPC/Minor(S)/02/22**

நேர்ட் நிலையத்தில் துப்புரவேற்பாட்டு மற்றும் சுத்திகரிப்புச் சேவையை நடத்திச் செல்லல் மற்றும் நிலைய வளாகத்தில் புல்வெட்டும் சேவையை ஒரு வருட கால எல்லைக்கு நடத்திச் செல்வதற்காக பெறுகைக் குழுவின் தலைவரால் குறித்த துறையில் அனுபவமுள்ள வழங்குநர்களிடமிருந்து 2022.08.31 பி.ப. 2.00 வரை பொறியிடப்பட்ட கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

தலைவர், திணைக்கள பெறுகைக் குழு என்ற குறிப்பிடப்பட்ட விண்ணப்பத்தை சமர்ப்பித்து 2022.08.10 முதல் 2022.08.30ம் திகதி வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை மீளளிக்கப்படாத ரூ. 1000/- கட்டணத்தை காசாக செலுத்தி கேள்வி ஆவணங்களை கொள்வனவு செய்யலாம்.

கேள்வி ஆவணங்களை சமர்ப்பிக்கும் போது சகல கேள்விதாரர்களும் மீளளிக்கப்படும் கேள்விப் பிணையொன்றாக ரூ. 10,000.00 தொகையை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை நிறுவனத்தின் காசாளரிடம் செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை கேள்வியின் மூலப் பிரதியுடன் இணைத்தல் வேண்டும்.

துறைசார் பரீசீலனை மற்றும் மேலதிக விபரங்களுக்கு அலவலக நேரங்களில் பெறுகைப் பிரிவை அழையுங்கள்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு**
**இலங்கை தேசிய பொறியியல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம்,**
**2பீ/17பீ, கைத்தொழில் பேட்டை,**
**ஏக்கல- ஜாஎல.**

**தொ.பே.இல:** 0112236284, 2236307
011-5852103
**பெக்ஸ்:** 011-2233153
**மின்னஞ்சல்:** supplies@nerdc.lk

---

# கேள்வி அறிவித்தல்

## இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

### திருகோணமலையில் சீனக் குடாவிலுள்ள 12 எண்ணிக்கையான எண்ணெய் களஞ்சிய தாங்கிகளின் இயந்திரவியல் சுத்திகரிப்புகள்

**B/44/2022**

திருகோணமலை, சீனக்குடாவிலுள்ள 12 எண்ணிக்கையான எண்ணெய் களஞ்சிய தாங்கிகளின் இயந்திரவியல் சுத்திகரிப்பிற்கான ஒப்பந்தத்திற்கு தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவர் அழைக்கின்றார்.

விலைமனுதாரர்கள் விலைமனு ஆவணங்களை மீளளிக்கப்படாத கட்டணமான 2,500 ரூபாவை (ரூ. 2,232.14 + 12% VAT) செலுத்தியதன் பின் எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றைச் செய்வதன் பேரில் கொழும்பு-09, இல. 609, டாக்டர் டெனிஸ்டர் டி சில்வா மாவத்தை, 1ஆம் தளம், இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் முகாமையாளர் (பெறுகைகள் மற்றும் களஞ்சியசாலை) அலுவலகத்திலிருந்து 2022-09-02ஆம் திகதி மு.ப. 9.00 மணி மற்றும் பி.ப. 3.00 மணிக்கிடையில் பெற்றுக்கொள்ளலாம் அல்லது CPC இணையதளத்திலிருந்து தரவிறக்கம் செய்து கொள்ளலாம். உ-ம் http://ceypetco.gov.lk/public-tenders/. தரவிறக்கம் செய்து கொள்பவர்கள் ஆவணக் கட்டணத்தை இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் மக்கள் வங்கியில் (தலைமை அலுவலகம்) பேணப்படும் 004100110208633 எனும் கணக்கிலக்கத்திற்குச் செலுத்தலாம். தயவு செய்து வங்கிப் பற்றுச்சீட்டை மூலப் பிரதியை விலைமனுவுடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

விலைமனுக்கள் 2022-09-05ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு பின்வரும் முகவரியிலுள்ள (பெறுகை மற்றும் களஞ்சியசாலை) முகாமையாளரின் அலுவலகத்தில் முடிவுறுத்தல் நேரத்தின் பின்னர் உடனடியாகவே திறக்கப்படும்.

ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை திரு. எம். அரவிந்தன் அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி: 011-5455288 அல்லது மின்னஞ்சல்: aravinthan.ceypetco@gmail.com.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**மே/பா முகாமையாளர் (பெறுகை மற்றும் களஞ்சியசாலைகள்),**
**இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்,**
**இல: 609, கலாநிதி டனிஸ்டர் டி சில்வா மாவத்தை,**
**கொழும்பு-09,**
**தொலைபேசி: 011-5455335**
**தொலைநகல்: 011-5455424**

---

# பெறுகை அறிவித்தல்

மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு

## இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

### இபெகூ தலைமை அலுவலகத்தின் மத்திய வளிச்சீராக்கி முறைமையின் 02 எண்ணிக்கையான குளிராக்கிக்கு கொன்டன்சரை (Condenser) கட்டமைத்தல் மற்றும் நிறுவுதலுக்காக விலைக்கோரல்

**B/43/2022**

இபெகூ தலைமை அலுவலகத்தின் மத்திய வளிச்சீராக்கி முறைமையின் 02 எண்ணிக்கையான குளிராக்கிக்கு கொன்டன்சரை கட்டமைத்தல் மற்றும் நிறுவும் ஒப்பந்தத்திற்கு அங்கீகரிக்கப்பட்ட ஆர்வமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவர் அழைக்கின்றார்.

ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்குத் தகுதியாக, சித்திகரமான விலைமனுதாரர்கள் அபகீர்த்தியாளர் பட்டியலில் இடம்பெறாதவராகவிருத்தல் வேண்டும் என்பதுடன் விலைமனு ஆவணங்களில் தரப்பட்டுள்ள தகுதிகள் மற்றும் தகைமைத் தகவுத்திறன்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

விலைமனுதாரர்கள் விலைமனு ஆவணங்களை மீளளிக்கப்படாத கட்டணமான 2,000.00 ரூபாவை (ரூ. 1,785.71 + 12% VAT) செலுத்தியதன் பின் எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றைச் செய்வதன் பேரில் கொழும்பு-09, இல. 609, டாக்டர் டெனிஸ்டர் டி சில்வா மாவத்தை, 1ஆம் தளம், இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் முகாமையாளர் (பெறுகைகள் மற்றும் களஞ்சியசாலை) அலுவலகத்திலிருந்து 2022-08-29ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி மற்றும் பி.ப. 3.00 மணிக்கிடையில் பெற்றுக்கொள்ளலாம் அல்லது CPC இணையதளத்திலிருந்து தரவிறக்கம் செய்து கொள்ளலாம். உ-ம் http://ceypetco.gov.lk/public-tenders/. தரவிறக்கம் செய்து கொள்பவர்கள் ஆவணக் கட்டணத்தை இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் மக்கள் வங்கியில் (தலைமை அலுவலகம்) பேணப்படும் 004100110208633 எனும் கணக்கிலக்கத்திற்குச் செலுத்தலாம். தயவு செய்து வங்கிப் பற்றுச்சீட்டை மூலப் பிரதியை விலைமனுவுடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

சகல விலைமனுக்களுடனும் 80,000.00 ரூபா பெறுமதியான விலைமனுப் பிணையொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

விலைமனுக்கள் 2022-08-31ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு பின்வரும் முகவரியிலுள்ள இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் (பெறுகை மற்றும் களஞ்சியசாலை) முகாமையாளரின் அலுவலகத்தில் முடிவுறுத்தல் நேரத்தின் பின்னர் உடனடியாகவே திறக்கப்படும்.

**தலைவர், திணைக்கள பெறுகைக் குழு,**
**மே/பா முகாமையாளர் (பெறுகை மற்றும் களஞ்சியசாலைகள்),**
**பெறுகை மற்றும் களஞ்சியசாலை செயற்பாடுகள்,**
**இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்,**
**இல: 609, கலாநிதி டனிஸ்டர் டி சில்வா மாவத்தை, கொழும்பு-09,**
**தொலைபேசி: 011-5455332, தொலைநகல்: 011-5455424**

---

# கேள்வி அறிவித்தல்

## இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

### சீனக் குடா மேல் தாங்கி பண்ணையிலுள்ள 12 எண்ணிக்கையான எண்ணெய் களஞ்சிய தாங்கிகளின் பரிசீலனை மற்றும் ஆரோக்கிய நிலை மதிப்பீடு

**B/42/2022**

சீனக்குடா மேல் தாங்கி பண்ணையிலுள்ள 12 எண்ணிக்கையான எண்ணெய் களஞ்சிய தாங்கிகளுக்கான இயந்திரவியல் பரிசீலனை மற்றும் ஆரோக்கிய மதிப்பீடு செய்யும் ஒப்பந்தத்திற்கு தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவர் அழைக்கின்றார்.

விலைமனுதாரர்கள் விலைமனு ஆவணங்களை மீளளிக்கப்படாத கட்டணமான 5,000 ரூபாவை (ரூ. 4,464.29 + 12% VAT) செலுத்தியதன் பின் எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றைச் செய்வதன் பேரில் கொழும்பு-09, இல. 609, டாக்டர் டெனிஸ்டர் டி சில்வா மாவத்தை, 1ஆம் தளம், இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் முகாமையாளர் (பெறுகைகள் மற்றும் களஞ்சியசாலை) அலுவலகத்திலிருந்து 2022-09-02ஆம் திகதி மு.ப. 9.00 மணி மற்றும் பி.ப. 3.00 மணிக்கிடையில் பெற்றுக்கொள்ளலாம் அல்லது CPC இணையதளத்திலிருந்து தரவிறக்கம் செய்துகொள்ளலாம். உ-ம் http://ceypetco.gov.lk/public-tenders/. தரவிறக்கம் செய்து கொள்பவர்கள் ஆவணக் கட்டணத்தை இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் மக்கள் வங்கியில் (தலைமை அலுவலகம்) பேணப்படும் 004100110208633 எனும் கணக்கிலக்கத்திற்குச் செலுத்தலாம். தயவு செய்து வங்கிப் பற்றுச்சீட்டின் மூலப் பிரதியை விலைமனுவுடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

விலைமனுக்கள் 2022-09-05ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு பின்வரும் முகவரியிலுள்ள (பெறுகை மற்றும் களஞ்சியசாலை) முகாமையாளரின் அலுவலகத்தில் முடிவுறுத்தல் நேரத்தின் பின்னர் உடனடியாகவே திறக்கப்படும்.

ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை திரு. எம். அரவிந்தன் அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி: 011-5455288 அல்லது மின்னஞ்சல்: aravinthan.ceypetco@gmail.com.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**மே/பா முகாமையாளர் (பெறுகை மற்றும் களஞ்சியசாலைகள்),**
**இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்,**
**இல: 609, கலாநிதி டனிஸ்டர் டி சில்வா மாவத்தை,**
**கொழும்பு-09,**
**தொலைபேசி: 011-5455335**
**தொலைநகல்: 011-5455424**

---

## இலங்கை சுங்கம்
### சுங்க இல்லம்
### கொழும்பு 11

### பாவனையிலிருந்து அகற்றப்பட்ட மோட்டார் வாகனங்களை விற்பனை செய்வதற்கான விலைமனுக்கோரல்

இலங்கை சுங்கத்தின் பாவனையிலிருந்து அகற்றப்பட்ட கீழ்க்காணப்படும் வாகனங்களை கேள்வி கோரல் மூலம் விற்பனை செய்வதற்காக இத்தால் விலைமனுக் கோரப்படுகின்றது.

| தொடர் இல. | பதிவு இலக்கம் | வகை | மாதிரி | உற்பத்தி ஆண்டு |
|---|---|---|---|---|
| 1 | WPPR - 1267 | DFSK (MINI TRUCK) | EQ1020DR | 2011 |
| 2 | 65-2127 | TOYOTA (CAR) | CARINA AUTOMATIC | 1997 |
| 3 | WPPR-2102 | DFSK (MINI TRUCK) | EQ1020DR | 2011 |
| 4 | WPPB-4192 | TOYOTA (VAN) | HIACE | 2007 |
| 5 | 57-0173 | MITSUBISHI (CAB) | DOUBLE CAB | 1995 |
| 6 | WPGB-9275 | CARINA (CAR) | CARINA | 2000 |
| 7 | 64-8055 | PAJERO (JEEP) | PAJERO | 1993 |

2022.08.10 முதல் 2022.08.29 வரை வார வேலை நாட்களில் மு.ப. 10.00 முதல் பி.ப. 2.00 வரையான காலப்பிரிவில் கொழும்பு 11, பிரதான வீதி, இலக்கம் 40, சுங்க இல்லம் இலங்கை சுங்க வளாகத்தில் இலவசமாக இவ்வாகனங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

வாகனமொன்றிற்காக மீளளிக்கப்படாத ரூபா 2,000/- இற்கான தொகை மற்றும் மீளளிக்கப்படும் ரூபா 20,000/- இற்கான பிணைத்தொகை 2022.08.10 முதல் 2022.08.31 வரை வார வேலை நாட்களில் மு.ப. 10.00 முதல் பி.ப. 3.00 வரையான காலப் பிரிவில் சுங்கத்திணைக்களத்தின் 02ஆம் மாடியின் சிறாப்பர் பிரிவில் செலுத்தி இதற்கான மாதிரிப்படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

முத்திரையிடப்பட்ட உங்கள் விலைமனுக்கள் 2022.09.01 அன்று பி.ப. 2.00 இற்கு அல்லது அதற்கு முன்னர் இலங்கை சுங்கத்தின் 06ஆம் மாடியின் சேவை மற்றும் வழங்கல் பிரிவில் அதற்காக வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் உள்ளிடலாமென்பதுடன் விலைமனுக்களைத் தாங்கி வரும் உறைகளின் இடது பக்க மேல் மூலையில் 'இலக்கம் .................. என்ற வாகனத்திற்கான கேள்வி விலைமனு' எனத் தெளிவாகக் குறிப்பிட்டு, தலைவர், பெறுகைக்குழு, சுங்க இல்லம், இல. 40, பிரதான வீதி, கொழும்பு -11 என்ற முகவரிக்கு 2022.09.01 அன்று குறிப்பிட்ட நேரத்திற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்பலாம். அன்றைய தினம் பி.ப. 2.00 இற்கு கேள்விகள் திறக்கப்படும்.

**தலைவர்,**
**பெறுகைக்குழு,**
**இலங்கை சுங்கம், சுங்க இல்லம்,**
**இலக்கம் 40, பிரதான வீதி, கொழும்பு 11.**

2022.08.09

---

# றுஹூண பல்கலைக்கழகம்

## விலைமனுக்களுக்கான அழைப்பு

### றுஹூண பல்கலைக்கழகத்திற்கான சுத்திகரிப்பு சேவைகளை வழங்கல்

1. 2022 செப்டம்பர் 14 ஆம் திகதி பி.ப. 2 மணி வரை பின்வரும் ஒப்பந்தங்களுக்காக றுஹூண பல்கலைக்கழகத்தின் துணைவேந்தரின் சார்பில் றுஹூண பல்கலைக்கழக திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை பெற்றுக் கொள்வார்.
   - விலைமனு இல. 01. மாத்தறை வெல்லமடம பிரதான கட்டிடத்தொகுதிக்கு சுத்திகரிப்பு சேவைகளை வழங்கல் - 2022/23 (RU/GA/2022/04)
   - விலைமனு இல. 02. கம்புறுப்பிட்டிய, மாப்பலானவிலுள்ள விவசாயபீட கட்டிடத்தொகுதிக்கு சுத்திகரிப்பு சேவைகளை வழங்கல் -2022/23 (RU/GA/2022/05)
   - விலைமனு இல. 03. காலி, கராப்பிட்டியவிலுள்ள மருத்துவபீட கட்டிடத்தொகுதிக்கு சுத்திகரிப்பு சேவைகளை வழங்கல் - 2022/23 (RU/GA/2022/06)
   - விலைமனு இல. 04. காலி, ஹப்புகளவிலுள்ள பொறியியல்பீட கட்டிடத்தொகுதிக்கு சுத்திகரிப்பு சேவைகளை வழங்கல் - 2022/23(RU/GA/2022/07)
   - விலைமனு இல. 05. கம்புறுப்பிட்டிய கராகொட-உயன்கொட தொழில்நுட்ப பீடத்திற்கு சுத்திகரிப்பு சேவைகளை வழங்கல் - 2022/23(RU/GA/2022/08)
   - விலைமனு இல. 06. காலி, உலுவிட்டிகெ மற்றும் மஹாமோதர இணைந்த சுகாதார விஞ்ஞானங்கள் பீடத்திற்கு சுத்திகரிப்பு சேவைகளை வழங்கல் - 2022/23 (RU/GA/2022/09)
2. 60 நாட்கள் தகுதிகாண் கால எல்லை உட்பட ஒப்பந்தக் கால எல்லை 365 நாட்களுக்கு அமைந்திருத்தல் வேண்டும்.
3. பின்வரும் நிபந்தனைகளை பூர்த்தி செய்யும் சுகாதார சுத்திகரிப்புச் சேவை வழங்குநர்கள் விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கு தகுதியாவார். விலைமனுக்களுடன் அத்தாட்சிப்படுத்தப்பட்ட ஆவணச் சான்றும் வழங்கப்படல் வேண்டும்.
   - 3.1. உரித்தான அரசாங்க அமைப்பில் செல்லுபடியாகும் பதிவைக் கொண்டிருப்பதுடன் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.
   - 3.2. கடந்த 5 வருடங்களில் அரசாங்க திணைக்களம்/ கூட்டுத்தாபனம்/ பல்கலைக்கழகமொன்றில் ஆகக்குறைந்தது ஒரு சுத்திகரிப்புச் சேவையை 01 ஆவது இலக்க விலைமனுவிற்கு 50.0 மில்லியன் ரூபா மற்றும் 02 ஆம் இலக்க விலைமனுவிற்கு 18.0 மில்லியன் ரூபா 03 ஆம் மற்றும் 04 ஆம் இலக்க விலைமனுக்களுக்கு 13.5 மில்லியன் ரூபா 05 ஆம் இலக்க விலைமனுவிற்கு 10.8 மில்லியன் ரூபா மற்றும் 6 ஆம் இலக்க விலைமனுவிற்கு 3.6 மில்லியன் ரூபாவும் வருடாந்த ஒப்பந்தத் தொகைக்கு குறையாமல் இருந்திருத்தல் வேண்டும்.
   - 3.3. கடந்த 5 வருடங்களில் செயற்படுத்தப்பட்ட சுத்திகரிப்பு சேவை ஒப்பந்தங்களின் வருடாந்த சராசரித் தொகை 01 ஆம் இலக்க விலைமனுவிற்கு ஆகக்குறைந்தது 82.5 மில்லியன் ரூபாவும் 02 ஆம் இலக்க விலைமனுவிற்கு 30.0 மில்லியன் ரூபாவும் 03 மற்றும் 04 ஆம் இலக்க விலைமனுக்களுக்கு 22.5 மில்லியன் ரூபாவும் 5 ஆம் இலக்க விலைமனுவிற்கு 18.0 மில்லியன் ரூபாவும் 6 ஆம் இலக்க விலைமனுவிற்கு 6.0 மில்லியன் ரூபாவும் இருந்திருத்தல் வேண்டும்.
   - 3.4. ஏனைய ஒப்பந்த கடப்பாடுகள் மற்றும் இவ்வொப்பந்தத்திற்காக வழங்கப்பட்ட ஏதாவது முன்பணக் கொடுப்பனவுகள் நீங்கலாக ஆகக்குறைந்த திரவச் சொத்துக்கள் மற்றும் அல்லது கடன் வசதிகளின் தேறிய புரள்வு விலைமனு 01 ஆம் இலக்கத்திற்கு 13.75 மில்லியன் ரூபாவிற்கு குறைவில்லாமலும் 02 ஆம் இலக்க விலைமனுவிற்கு 5.0 மில்லியன் ரூபாவிற்கு குறைவில்லாமலும் விலைமனுக்கள் 03 மற்றும் 04 இற்கு 3.75 மில்லியன் ரூபாவிற்கு குறைவில்லாமலும் 05 ஆம் இலக்க விலைமனுவிற்கு 3.0 மில்லியன் ரூபாவிற்கு குறைவில்லாமலும் 06 ஆம் இலக்க விலைமனுவிற்கு 1.0 மில்லியன் ரூபாவிற்கு குறைவில்லாமலும் இருத்தல் வேண்டும்.
   - 3.5. விலைமனு 01 ஆம் இலக்கத்திற்கு கடந்த 3 வருடங்களில் பயிற்சி மற்றும் அனுபவமுள்ள 100 இலங்கை பணியாளர்களும் 02 ஆம் 03 ஆம் மற்றும் 04 ஆம் இலக்க விலைமனுக்களுக்கு 50 பணியாளர்களும் 5 ஆம் இலக்க விலைமனுவிற்கு 30 பணியாளர்களும் 6 ஆம் இலக்க விலைமனுவிற்கு 20 பணியாளர்களும் இருந்திருத்தல் வேண்டும். இதற்கான சான்று மேற்கொள்ளப்பட்ட பங்களிப்புகளின் ஊசேநி மற்றும் ஊநநி ஆகியவற்றின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளினூடாக வழங்கப்படல் வேண்டும்.
4. 2022 டிசம்பர் 14 ஆம் திகதி வரை விலைமனுக்கள் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
5. ஒவ்வொரு விலைமனுவும் பின்வருமாறு அமைந்த ரொக்கப் பணத்திலான மீளளிக்கப்படாத கேள்வி கட்டணமொன்றுடனும் விலைமனுப் பிணையுடனும் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

| கட்டணம் | விலைமனு இல.01 | விலைமனு இல. 02 | விலைமனு இலக்கங்கள் 03 மற்றும் 04 | விலைமனு இல. 05 | விலைமனு இல. 06 |
|---|---|---|---|---|---|
| மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணம் - (ரூபாவில்) | 14,000.00 | 6,750.00 | 5,000.00 | 4,000.00 | 1,750.00 |
| விலைமனுப்பிணை (ரூபாவில்) | 600,000.00 | 250,000.00 | 170,000.00 | 120,000.00 | 40,000.00 |

6. விலைமனுப்பிணையானது இலங்கையில் செயற்படும் எந்தவொரு வர்த்தக வங்கியிலிருந்தும் பெறப்பட்டதும் றுஹூண பல்கலைக்கழக துணைவேந்தரின் பெயரில் வழங்கப்பட்டிருத்தலும் வேண்டும். இப்பிணையானது நியமமாக்கப்பட்ட மாதிரியிலும் சேவைநாடுபவருக்கு ஏற்றுக் கொள்ளத்தக்கதாகவும் 2023 சனவரி 14 ஆம் திகதி வரையிலும் செல்லுபடியாகும் தன்மையிலுமிருத்தல் வேண்டும்.
7. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை 041-2033254/ நீடிப்பு 12014/12015/12016 மாத்தறை, வெல்லமடம, ருஹூணு பல்கலைக்கழக பிரதிப் பதிவாளர் (பொது நிருவாகம் ) இடமிருந்து பெற்று மேலேயுள்ள அலுவலகத்தில் எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப 3 மணி வரை விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.
8. 2022 செப்டம்பர் 14 ஆம் திகதி வரை எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரை மாத்தறை, வெல்லமடம, ருஹூணு பல்கலைக்கழக பிரதிப் பதிவாளர் (பொது நிருவாகம்) இற்கு எழுத்துமூலமான விண்ணப்பமொன்றை நிருணயிக்கப்பட்ட மீளளிக்கப்படாத விலைமனுவை செலுத்தியதற்கான பற்றுச்சீட்டுடன் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்கள் ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம்.
9 மாத்தறை, வெல்லமடம, ருஹூணு பல்கலைக்கழக பிரதிப் பதிவாளருடன் (பொது நிருவாகம்) சந்திப்பு முன்னேற்பாடொன்றின் மூலமாக கணிப்பிடலின் முன்பாக ஒவ்வொரு அமைவிடத்தையும் பார்வையிடுமாறு விலைமனுதாரர்கள் தீவிர மதியுரை வழங்கப்படுகின்றனர்.
10. 2022 செப்டம்பர் 07 ஆம் திகதி மு.ப. 11 மணிக்கு மாத்தறை, வெல்லமடம, ருஹூணு பல்கலைக்கழக மூதவை அறையில் விலைமனு முன்னோடிக் கூட்டமொன்று நடைபெறும்.
11. 2022 செப்டம்பர் 14 ஆம் திகதி பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் கீழுள்ள முகவரிக்கு பதிவுத் தபாலில் விலைமனுக்கள் அனுப்பப்படல் வேண்டும் அல்லது மாத்தறை, வெல்லமடம, ருஹூணு பல்கலைக்கழக பதிவாளரின் அலுவலகத்தில் இந்நோக்கத்திற்காக பேணப்படும் 1 ஆம் இலக்க விலைமனுப் பெட்டியில் அதே திகதியில் மேலேயுள்ள நேரத்திற்கு அல்லது அதற்கு முன்பதாக சேர்க்கப்படல் வேண்டும். தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் **"Provision of Cleaning Service 2022/2023"** என்ற சொற்கள் குறிப்பிடப்படல் வேண்டும். தாமதமான அல்லது பூர்த்தி செய்யப்படாத அல்லது போதுமான தகவலில்லாத விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.
12. அனைத்து விலைமனுக்களும் மேலேயுள்ள முகவரியில் அவைகளை மூடிய பின்னர் உடனடியாகவே திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் திறக்கும் வேளையில் சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**ருஹூணு பல்கலைக்கழகம், வெல்லமடம,**
**மாத்தறை.**
**05.08.2022.**

# 'சர்வதேச லீக் டி20' தொடரில் 8 இலங்கை வீரர்களுக்கு இடம்





முதல் முறையாக நடத்தப்படும் ஐக்கிய அரபு இராச்சியத்தின் சர்வதேச லீக் டி20 தொடருக்கு இலங்கையின் எட்டு வீரர்களின் பெயர் இடம்பெற்றுள்ளது.

அடுத்த ஆண்டு ஜனவரி மற்றும் பெப்ரவரி மாதங்களில் நடைபெறவுள்ள இந்தத் தொடரில் ஆறு அணிகள் இடம்பெற்றுள்ளன. இந்திய பிரிமியர் லீக் தொடருக்கான அணிகளின் உரிமையாளர்களும் இந்தத் தொடருக்கான அணிகளுக்கு உரிமை பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

எனினும் தற்போதைய நிலையில் பங்களாதேஷ், இந்தியா மற்றும் பாகிஸ்தான் வீரர்கள் இடம்பெறவில்லை. வெளிநாட்டு போட்டிகளில் இந்திய வீரர்கள் பங்கேற்பதற்கு அந்நாட்டு கிரிக்கெட் சபை எதிர்ப்பை வெளியிட்டு வருவதோடு, பாகிஸ்தான் வீரர்களுக்கு அந்நாட்டு கிரிக்கெட் சபை அனுமதி அளிப்பதில் சிக்கல் இருப்பதாக கூறப்படுகிறது.

எனினும் இலங்கை, இங்கிலாந்து, மேற்கிந்திய தீவுகள், தென்னாபிரிக்கா மற்றும் நியூசிலாந்து அணிகளின் முன்னணி வீரர்கள் இந்தத் தொடரில் பங்கேற்க ஒப்பந்தமாகியுள்ளனர்.

இலங்கையின் வனிந்து ஹசரங்க, துஷ்மன்த சமீர, பானுக்க ராஜபக்ஷ, லஹிரு குமார, சீகுகே பிரசன்ன, சரித் அசலங்க, இசுரு உதான மற்றும் நிரோசன் திக்வல்ல ஆகிய வீரர்களின் பெயர்கள் இந்தத் தொடரில் இடம்பெற்றுள்ளது.

2023ஆம் ஆண்டு தொடரில் 34 போட்டிகள் இடம்பெறவுள்ளன. அனைத்து அணிகளும் மற்றைய அணியுடன் இரண்டு போட்டிகளில் விளையாடவிருப்பதோடு, தொடர்ந்து இறுதிப் போட்டி உட்பட நான்கு பிளே ஒப் போட்டிகள் இடம்பெறவுள்ளன. போட்டிகள் டுபாய், அபூதாபி மற்றும் ஷார்ஜாவில் நடைபெறும்.

# சோபிக்கத் தவறிவரும் கொஹ்லி ஆசியக் கிண்ணத்திற்கு அழைப்பு



ஆசிய கிண்ண டி20 தொடருக்கான இந்திய அணியில் சோபிக்கத் தவறிவரும் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் விராட் கொஹ்லி அழைக்கப்பட்டுள்ளார்.

வரும் ஒகஸ்ட் 27 தொடக்கம் செப்டெம்பர் 11ஆம் திகதி வரை ஐக்கிய அரபு இராச்சியத்தில் நடைபெறவுள்ள இந்தத் தொடரில் உப தலைவர் கே.எல். ராஹுல் அணிக்குத் திரும்பியுள்ளார். அவர் மே மாதம் முடிவுற்ற ஐ.பி.எல் தொடருக்குப் பின் கொவிட் மற்றும் காயம் காரணமாக இந்திய அணியில் இடம்பெறவில்லை.

எனினும் வேகப்பந்து வீச்சாளர் ஜஸ்பிரிட் பும்ராஹ் காயம் காரணமாக அணியில் இடம்பெறவில்லை.

33 வயதான கொஹ்லிக்கு அண்மைய மேற்கிந்திய தீவுகள் தொடரில் ஓய்வு அளிக்கப்பட்டதோடு 2019 தொடக்கம் எந்த வகைக் கிரிக்கெட்டிலும் சதம் ஒன்றை பெறத் தவறி வருகிறார். கடந்த ஆண்டு அவருக்கு பதில் ரோஹித் ஷர்மா அணித் தலைவராக நியமிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. 6 அணிகள் பங்கேற்கும் இந்தத் தொடரில் இந்தியா வரும் ஒகஸ்ட் 28ஆம் திகதி பாகிஸ்தானை எதிர்கொள்ளவுள்ளது.

**இந்திய அணி:**

**ரோஹித் ஷர்மா (தலைவர்), கே.எல். ராகுல் (உப தலைவர்), விராட் கொஹ்லி, சூர்யகுமார் யாதவ், தீபக் ஹூடா, ரிஷாப் பான்ட், தினேஷ் கார்த்திக், ஹார்திக் பாண்டியா, ரவிந்திர ஜடேஜா, ஆர். அஷ்வின், யுஸ்வேந்திரா சஹல், ரவி பிஷ்னொய், புவனேஷ்வர் குமார், அர்ஷ்தீப் சிங், அவேஷ் கான்.**

44th OBSERVER SLT-MOBITEL SCHOOL CRICKETER OF THE YEAR 2022
Recognizing talent, inspiring greatness
SLTMOBITEL The Connection

44th OBSERVER SLT- MOBITEL

மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர் / வீராங்கனை-2022

உங்களுக்கு விருப்பமான பாடசாலை கிரிக்கெட் வீரர்/வீராங்கனைக்கு வாக்களித்து அவரை இந்த ஆண்டின் OBSERVER SLT- MOBITEL மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர்/வீராங்கனையைத் தெரிவு செய்யுங்கள்.

☐ மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர்-2022

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் 19 வயதிற்குட்பட்ட அனைத்து பாடசாலை மட்டப் போட்டிகளில் 2021/2022 பிரிவு I, II, III களில் பூர்த்தி செய்த வீரர்கள் மட்டுமே வாக்களிக்கலாம்.

☐ மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீராங்கனை-2022

தேசிய ரீதியில் இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் 19 வயதிற்குட்பட்ட அனைத்து பாடசாலை மட்டப் போட்டிகளில் 2021/2022 தேசிய மட்டத்தில் பூர்த்தி செய்த வீராங்கனைகள் மட்டுமே வாக்களிக்கலாம்.

வாக்கினை அளிப்பது : ............
வீரர்களுக்கான பிரிவு : பிரிவு I ☐ பிரிவு II ☐ பிரிவு III ☐
தேசிய மட்ட வீராங்கனை : ............
(ஒரு கூப்பன் ஒரு வாக்குக்கு மட்டுமே செல்லுபடியாகும்)
பாடசாலை : ............
வாக்களித்தவர் பெயர் : ............
முகவரி : ............
மொபைல் இல. : ............

SUNDAY OBSERVER

Vote: schoolboycricketer.lk இணையத்தளத்திற்குள் பிரவேசித்து வாக்களிக்க முடியும்

வாராந்த சீட்டிழுப்பில் பரிசுகளை வெல்லுங்கள்:

1வது பரிசு : ரூ. 2,500
2வது பரிசு: ரூ. 1,500
3வது பரிசு : ரூ. 1,000

44வது ஒப்சவர்-மொபிடெல் மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரரை தெரிவு செய்யும் போட்டி தற்போது ஆரம்பமாகியுள்ளது. கூப்பனை நிரப்பி விளையாட்டு ஆசிரியர், **சண்டே ஒப்சவர், லேக் ஹவுஸ், கொழும்பு-10** எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

நிபந்தனைகள்:

**SLT- MOBITEL** நிறுவன ஊழியர்கள், அவர்களது குடும்பத்தினர், லேக்ஹவுஸ் நிறுவன ஊழியர்கள், அவர்களது குடும்பத்தினர் இந்தப் போட்டியில் பங்கு பெற முடியாது.

ஒரு கூப்பனில் ஒரு பிரிவில் ஒருவருக்கே வாக்களிக்கலாம். போட்டி தொடர்பில் சண்டே ஒப்சவர் விளையாட்டு நிர்வாகத்தினரின் முடிவே இறுதியானது.

திகதி 13-08-2022
இல. 20









பாணந்துறை தொட்டவத்தை அல் பஹ்றியா மத்திய கல்லூரி (தேசிய பாடசாலை) உதைபந்தாட்ட அணிக்கு பாடசாலையின் பழைய மாணவரான (2001) எம்.என்.எம். நுஷானின் ஏற்பாட்டில் உதைபந்தாட்ட சீருடை தொகுதி (jersy set) அண்மையில் அன்பளிப்பு செய்யப்பட்டது. பாடசாலையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பழைய மாணவரான நுஷான் சீருடைத் தொகுதியை அதிபர் எம்.ஐ.எம். ரிஷானிடம் கையளித்து வைப்பதைப் படத்தில் காணலாம். உதைபந்தாட்ட பயிற்றுவிப்பாளரும் படத்தில் காணப்படுகிறார்.
(படம்: பாணந்துறை மத்திய குறூப் நிருபர்)

# இலங்கை இளையோர் அணி இங்கிலாந்து சுற்றுப்பயணம்



இங்கிலாந்து சுற்றுப்பயணம் மேற்கொள்ளும் இலங்கை 19 வயதுக்கு உட்பட்ட அணியின் போட்டி அட்டவணை வெளியிடப்பட்டுள்ளது. இந்த சுற்றுப்பயணத்தில் இலங்கை இளையோர் அணி இரண்டு டெஸ்ட் மற்றும் மூன்று ஒருநாள் போட்டிகளில் விளையாடவுள்ளது.

இதன்படி ஒரு மாத சுற்றுப்பயணமாக இலங்கை இளையோர் அணி வரும் ஒகஸ்ட் 14 ஆம் திகதி இங்கிலாந்தை சென்றடையவுள்ளது. தொடர்ந்து ஒகஸ்ட் 16 தொடக்கம் 18 வரை மூன்று நாள் பயிற்சிப் போட்டி ஒன்றில் ஆடவுள்ளது.

இதனைத் தொடர்ந்து முதலாவது இளையோர் டெஸ்ட் போட்டி, செம்ஸ்போர்ட்டில் ஒகஸ்ட் 21ஆம் திகதி ஆரம்பமாகும். இரண்டாவது டெஸ்ட் ஒகஸ்ட் 28 தொடக்கம் 31 ஆம் திகதி வரை நடைபெறும்.

தொடர்ந்து மூன்று போட்டிகளைக் கொண்ட இளையோர் ஒருநாள் தொடர் செப்டெம்பர் 5ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

"இந்த சுற்றுப்பயணம் இங்கிலாந்து சூழலில் எமது இளைஞர்களுக்கு வாய்ப்பு ஒன்றை அளிப்பதோடு எதிர்காலத்தில் மிகப் பெரிய சர்வதேச சவால்களுக்கு தயார்படுத்துகிறது" என்று இலங்கை 19 வயதுக்கு உட்பட்டோர் அணியின் பயிற்சியாளர் ஜெஹான் முபாரக் தெரிவித்தார்.

# அட்டாளைச்சேனை பிரதேச செயலக அணி சம்பியன்

**ஒலுவில் கிழக்கு தினகரன் நிருபர்**



கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் அம்பாறை மாவட்ட பிரதேச செயலகங்களுக்கிடையில் நடைபெற்ற கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் அட்டாளைச்சேனைப் பிரதேச செயலக அணி அம்பாறை மாவட்ட சம்பியனாக தெரிவாகி கிழக்கு மாகாண மட்டப்போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளது.

இச்சுற்றுப்போட்டி பாலமுனை பொதுவிளையாட்டு மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை அம்பாறை மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் எம்.ஐ.எம். அமீர் அலி தலைமையில் நடைபெற்றது.

அம்பாறை மாவட்டத்திலுள்ள 08 பிரதேச செயலக அணிகள் கலந்து கொண்ட இச்சுற்றுப்போட்டியின் இறுதிப்போட்டிக்கு நிந்தவூர் பிரதேச செயலக அணியும், அட்டாளைச்சேனைப் பிரதேச செயலக அணியும் தெரிவு செய்யப்பட்டன.

## சர்வதேச செய்திகள்

# டொனால்ட் டிரம்பின் வீட்டில் பொலிஸ் அதிரடிச் சோதனை



அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் டிரம்பின் பிளோரிடா வீட்டில் எப்.பி.ஐ பொலிஸார் சோதனை நடத்தியதாகவும் அந்த முகவர்கள் தமது பணப்பெட்டி ஒன்றை உடைத்துத் திறந்ததாகவும் தெரிவித்துள்ளார்.

பாம் கடற்கரையில் உள்ள மாரா லாகோ இல்லத்தை பெரும் எண்ணிக்கையான எப்.பி.ஐ முகவர்கள் ஆக்கிரமித்தனர் என்று டிரம்பின் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

டிரம்ப் உத்தியோகபூர்வ ஆவணங்களை கையாள்வதுடன் தொடர்புபட்டே கடந்த திங்கட்கிழமை இந்த சோதனை இடம்பெற்றிருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன. "இது எமது நாட்டின் இருண்ட காலம்" என்று குறிப்பிட்ட டிரம்ப், "அமெரிக்க ஜனாதிபதி ஒருவருக்கு இதற்கு முன்னர் இதுபோன்ற ஒன்று நடந்ததில்லை" என்றார். இந்தத் தேடுதல் பற்றி எப்.பி.ஐ மற்றும் சட்டத் திணைக்களம் எந்தக் கருத்தும் வெளியிடவில்லை.

டிரம்பின் ஜனாதிபதி தவணைக் காலம் நிறைவுற்றதும் அவரது மாரா லாகோ இல்லத்திற்கு இரகசிய ஆவணங்கள் கொண்டுசெல்லப்பட்டது குறித்து அமெரிக்க நீதித்துறை விசாரணை மேற்கொள்கின்றமை குறிப்பிடத்தக்கது.

# மேற்குக்கரையில் இஸ்ரேல் சுற்றிவளைப்பு: மூவர் பலி



ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரை நகரான நப்லூஸில் இஸ்ரேலிய படையினர் நேற்று செவ்வாய்க்கிழமை நடத்திய சுற்றிவளைப்பு தேடுதலில் மூத்த போராட்டத் தளபதி ஒருவர் உட்பட பலஸ்தீனர்கள் மூவர் கொல்லப்பட்டுள்ளனர்.

"நப்லூஸ் நகரில் பயங்கரவாதியான இப்ராஹிம் அல் நபுல்சி கொல்லப்பட்டார்" என்று இஸ்ரேலிய இராணுவம் வெளியிட்ட அறிவிப்பில் கூறப்பட்டுள்ளது. அந்த வீட்டில் தங்கி இருந்த மற்றொரு பயங்கரவாதியும் கொல்லப்பட்டதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்குக் கரையில் இயங்கும் முக்கிய போராட்டக் குழுவான அல் அக்ஸா தியாகப் படையணியின் தளபதி ஒருவராக நபுல்சி இயங்கி வந்துள்ளார்.

இஸ்ரேலிய இராணுவத்துடன் நப்லூஸின் ஏனைய பகுதிகளிலும் மோதல் வெடித்துள்ளது. துருப்புகள் மீது பலஸ்தீனர்கள் கற்களை எறிந்து தாக்குதல் நடத்தியுள்ளனர். இதில் குறைந்தது 40 பலஸ்தீனர்கள் காயமடைந்துள்ளனர்.

காசாவில் கடந்த மூன்று நாட்களாக இஸ்ரேல் நடத்திய தாக்குதல்களில் 46 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்ட நிலையிலேயே மேற்குக் கரையில் இந்த வன்முறை வெடித்துள்ளது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 ஒகஸ்ட் மாதம் 10ம் திகதி புதன்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.